Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline 0212229497
(C/2483)

முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 08 ஞாயிற்றுக்கிழமை (21.04.2013) பக்கங்கள் 20 ஓசை - 203
















# தமிழக கட்சிகளின் நாடகத்தை புட்டு வைக்கிறார் 'றோ' அதிகாரி




(புதுடில்லி)

அடுத்த வருடம் இந்தியாவில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை இலக்கு வைத்தே தமிழகத்திலுள்ள சில அரசியல்வாதிகள் இலங்கைக்கு எதிரான பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனரே ஒழிய இலங்கைத் தமிழர்கள் மீதான அக்கறையால் அல்லவென றோ புனலாய்வுப்பிரிவின் முன்னாள் விசாரணை ஆய்வாளர் ஜோதி சிங் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் உள்ள சில அரசியல்வாதிகள் இலங்கைக்கு எதிராக பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருவது தமது அரசியல் தந்திரத்திற்காகவே. இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகளுக்கு ஆதரவு வழங்குவதாக கூறித் தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டுக் கொண்டு செயற்படுகின்றன. இலங்கைத் தமிழர்கள் மீது அவர்களுக்கு உண்மையான அக்கறை இருந்திருந்தால், போரின் இறுதிக்கட்டத்தில் அவ்வாறான போராட்டங்களை நட

19 ஆம் பக்கம் பார்க்க

## தலைகீழானது தேசியக்கொடி

(மானிப்பாய்)

மானிப்பாயில் நேற்று இடம்பெற்ற விளையாட்டு விழா நிகழ்வின் போது தேசியக் கொடி தலைகீழாக ஏற்றப்பட்ட சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

மானிப்பாய் பொலிஸ் நிலையமும், மானிப்பாய் வர்த்தகர்களும் இணைந்து நடத்திய நேற்றைய விளையாட்டு விழாவின் போதே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மானிப்பாய் அட்டகிரி விளையாட்டு மைதானத்தில்

19 ஆம் பக்கம் பார்க்க

## கிணற்றில் வீழ்ந்த சிறுவன் மரணம்

(வேலணை)

கிணற்றடிக்குச் சென்ற பாடசாலைச் சிறுவன் அக்கிணற்றுக்குள் விழுந்து மரணத்தினைத் தழுவிக்கொண்ட பரிதாப சம்பவமொன்று நேற்றுக்காலை 9.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வேலணை மேற்கு 8 ஆம் வட்டாரத்தினைச் சேர்ந்த காசிநாதன் தனுஷன் (வயது-09) என்னும் சிறுவனே இவ்வாறு மரணத்தினைத் தழுவிக்கொண்ட வராவார்.

கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட சிறுவனது சடலம் வேலணை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக விசாரணைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (பா, 05)

## மனித உரிமை மீறல் தொடர்பான பொறுப்புக் கூறலில் அலட்சியம்

### அதிருப்தி கொள்ளும் அமெரிக்கா

(லண்டன்)

இலங்கையில் 2009 ஆம் ஆண்டு முடிவிற்கு வந்த போரில இடம்பெற்றதாகக் கூறப்படும் சர்வதேச மனித நேயச்சட்டங்களின் மீறல் மற்றும் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களின் மீறல்கள் தொடர்பாக எவரையும் பொறுப்புக்கூறச் செய்வதற்கு அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

2012 ஆம் ஆண்டில் நாடுகளுக்கான மனித உரிமை நிலைவரம் தொடர்பாக அமெரிக்கா நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஜனாதிபதியின் குடும்பத்தினரின் ஆதிக்கத்தில் இலங்கை அரசாங்கம் இருப்பதாக தனது முக்கிய அம்சங்களின் தொகுப்பின் ஆரம்பத்திலேயே கூறியுள்ள அந்த அறிக்கை, ஜனாதிபதி, நாடாளுமன்றம் மற்றும் உள்ளூர் தேர்தல்கள் அங்கு பிரச்சினைகள் நிறை

19 ஆம் பக்கம் பார்க்க

## வடமாகாண சபைத் தேர்தல் செப்ரெம்பரில் நடத்தப்படும்

### ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

செப்ரெம்பர் மாதம் வட மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். வெலிஓயா பகுதிக்கு நேற்றுச் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அப்பிரதேசத்தில் மீள்குடியேறியுள்ள சிங்களக் குடும்பங்களுக்கு காணி உரிமைப் பத்திரங்களை வழங்கிவைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது

வடபகுதி மக்களுக்கும் மாகாணசபை தேர்தல் மூலம் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தை

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மக்களுக்கு சேவைகளை வழங்க ஆட்பதிவுத் திணைக்களம் வவுனியாவில் நாளை திறப்பு

(கொழும்பு)

வடமாகாணத்துக்கான சேவைகளை வழங்கவென ஆட்பதிவுத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் ஒன்று வவுனியா மாவட்டச் செயலகத்தில் திறந்துவைக்கப்படவுள்ளது. நாளை திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு இந்தக் காரியாலயம் திறந்து வைக்கப்படவுள்ளது.

மக்கள் இலகுவாக தமது சேவைகளை பெற்றுக்கொள்ளும் வகையில் வவுனியா மாவட்டச் செயலக வளாகத்தில நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த அலுவலகத்தின் மூலம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி இந்த பிராந்திய அலுவலகம் சேவையை வழங்கவுள்ளது.

இதற்கான நிதியுதவி ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் உள்ள நீதி நியாயத்தை சம

19 ஆம் பக்கம் பார்க்க

## மின் கட்டணங்களில் அதிகரிப்பு பாவனையாளரைப் பாதிக்காது

### என்கிறார் மின்சார சபைத் தலைவர்

(கொழும்பு)

மின் பாவனையாளர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலேயே மின் கட்டணங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக மின்சார சபைத் தலைவர் டபிள்யூ. பீ. கனேகல தெரிவித்தார்.

புதிய மின்சாரக் கட்டணத்துக்கு அமைய 1 முதல் 30 வரையான மின் அலகுகளைப் பயன்படுத்துபவர்களுக்கு நாளொன்றுக்கு 2 ரூபா 50 சதம் மாத்திரமே உயர்த்தப் பட்டுள்ளது.

1 முதல் 30 வரையான அலகுகளைப் பயன்படுத்தும் 1.067 மில்லியன் பாவனையா

19 ஆம் பக்கம் பார்க்க

## வயற்காணிகளை ஒப்படைக்குமாறு கொக்குத் தொடுவாயில் ஆர்ப்பாட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெலிஓயா (மணலாறு) பகுதியில் கொக்குத்தொடுவாய் பிரதேசத்தில் மீள்குடி யேறியுள்ள தமிழ்க் குடும்பங்கள், தங்களுக்குச் சொந்தமான வயற் காணிகளை மீண்டும் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றுகோரி நேற்று ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

1983ஆம் ஆண்டில் இராணுவத்தால் வெளியேற்றப்பட்ட இந்தப் பிரதேசத்து மக்களின்

19 ஆம் பக்கம் பார்க்க

## பொஸ்டன் குண்டுத்தாக்குதல் இரண்டாமவர் பிடிபட்டார்



அமெரிக்காவின் பொஸ்டன் மாரத்தன் ஓட்டப்பந்தயத்தில் குண்டுத் தாக்குதல் நடத்தியதாக சந்தேகிக்கப்படும் இருவரில் ஒருவரை அமெரிக்கப் பொலிஸார் உயிருடன் பிடித்துள்ளனர்.

அமெரிக்க சரித்திரத்தின் மிகப் பெரிய பொலிஸ் தேடுதல் வேட்டைகளில் ஒன்றாக 19 வயது சந்தேகநபர் ஸூகார் சர்னயெவ்வை தேடும் நடவடிக்கை அமைந்திருந்தது.

ஒரு வீட்டின் பின் புறத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த படகில் பதுங்கியிருந்த சரனயெவ்வை பொலிஸார் பிடித்துள்ளனர்.

குறித்த வீட்டின் பின்புறத்தில் இரத்தம் சிந்தியிருந்த வழியாக வீட்டின் உரிமையாளர் சென்று படகின் மீது போர்

19 ஆம் பக்கம் பார்க்க

## தாதியர் பற்றாக்குறையால் முடங்கும் சத்திரசிகிச்சைக் கூடங்கள்

(யாழ்ப்பாணம்)

தாதியர் பற்றாக்குறை காரணமாக யாழ்.போதனா வைத்திய சாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் சத்திரசிகிச்சைக் கூடங்களை முழுமையாக செயற்பட வைக்கமுடியாமல் இருப்பதாக யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சிறிபவானந்தராசா தெரிவித்துள்ளார்.

யப்பான் அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு திறந்துவ்வக்கப்பட்டிருக்கும் மூன்று மாடிக்கட்டடத்தில் இந்த பத்து சத்திரசிகிச்சைக் கூடங்களும் அமைந்துள்ளன. இவற்றில் ஒருபகுதியே தற்சமயம் செயற்பட்டுவருகின்றது என்றும் தெரிவித்த பணிப்பாளர் ஏனையவற்றையும் இயங்கவைப்பதற்கு தாதியர் பற்றாக்குறையாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ் வைத்தியசாலையில் 1500 தாதியர்கள் தேவையாகவுள்ள நிலையில் 490 தாதியர்களே சேவையாற்றிவருகின்றனர். இந்தத் தாதியர் வெற்றிடங்களை நிரப்பித் தருமாறு பல தடவை சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் அவ்வாறு மேலும் தாதியர்கள் நியமனம் செய்யப்படுமிடத்து இந்த சத்திரசிகிச்சைப் பிரிவை முழுமையாக இயக்கமுடியும் எனவும் மேலும் தெரிவித்துள்ளார். (பா)

## இறுதிப்போட்டியும் பரிசில் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகம், மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தின் அனுசரணையுடன் புத்தாண்டை முன்னிட்டு நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியும் பரிசில் வழங்கலும் இன்று மாலை 3 மணிக்கு அட்டகிரி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தென்மேற்கு பிரதேச சபைத்தவிசாளர் அ.ஜெபநேசன், சிறப்பு விருந்தினர்களாக மருதடி விநாயகர் சனசமூக நிலையத்தலைவர் ஆ.வாஷிங்டன், பிரபல வர்த்தகர் மீயா சுகந்தன் மற்றும் கௌரவ விருந்தினர்களாக இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் பே.சுபாகர், முன்னாள் தேசிய சம்மேளனப் பிரதிநிதி ச.செந்தில்குமரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## நிர்வாகக் கூட்டம்

(பருத்தித்துறை)

மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் மாதாந்த நிர்வாகசபைக் கூட்டம் இன்று மாலை 5 மணியளவில் சங்கப் பணிமனையில் பா.ரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பல முக்கிய விடயங்கள் ஆராயவேண்டியுள்ளதால் சகல உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

## மினிபஸ் - சைக்கிள் விபத்து; குடும்பஸ்தர் படுகாயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதான வீதியில் மடம் சந்தியில் நேற்றுப் பிற்பகல் கச்சேரி நோக்கிப் பயணித்த பயணிகள் மினிபஸ்சும் துவிச்சக்கரவண்டி ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளதுடன் அவர் பயணித்த துவிச்சக்கரவண்டியும் நசுங்கி சேதமடைந்துள்ளது.

நேற்றுப் பிற்பகல் 2.00 மணிக்கு இடம்பெற்ற இவ்விபத்தில் குருநகர் மவுண்காமம் றோட்டைச் சேர்ந்த இராசரட்ணம் றீகன் (வயது - 32) என்ற இரண்டுபிள்ளைகளின் தந்தையே இவ்வாறு தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்தில் குறித்த பயணிகள் மினிபஸ் வண்டியின் முன்பக்க கண்ணாடியும் சேதமடைந்துள்ளது. அதன் சாரதியும் ஓட்டுனரும் இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸாரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். (பா)

# சர்வதேச தரத்திற்கு நிகரான வகையில் பனை சார் உற்பத்திகள் அமையவேண்டும்



சர்வதேசதரத்திற்கு நிகராக எதிர்காலத்தில் பனைசார்ந்த உள்ளூர் உற்பத்திகள் புதிய வடிவமைப்புடன் நவீனமுறையில் முன்னெடுக்கப்பட வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பு மருதானையில் அமைந்துள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் தாய்லாந்தில் இம்மாதம் நடைபெறவுள்ள சர்வதேச கண்காட்சி மற்றும் விற்பனைச் சந்தைக்குச் செல்லும் குழுவினருடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தாய்லாந்து தலைநகர் பாங்கொங்கில் சர்வதேச கண்காட்சி மற்றும் விற்பனைச் சந்தை இம்மாதம் நடைபெறவுள்ள நிலையில் அங்கு பனை சார்ந்த பல்வேறு உற்பத்திகளும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

அக்கண்காட்சியை பார்வையிடும் நல்லதொரு சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில், இதனை வெளிநாட்டு சுற்றுலாப் பயணமாக கருதாமல் அது உங்களுக்கு மட்டுமல்லாது அதனூடாக சமூக மேம்பாட்டுக்கான நலன்களைக் கருத்தில் கொண்டமையக் கூடிய வகையில் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

பனைசார்ந்த இவ்வாறான கண்காட்சிகள் ஊடாக உள்ளூர் கைப்பணி உற்பத்திகள் சர்வதேச தரத்திற்கு நிகராக முன்னெடுக்கப்படும் வகையிலும் அவற்றை சர்வதேச சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யும் வகையிலும் தரமானதாகவும் சிறந்த தொழில்நுட்பத்துடன் கூடியதாக உற்பத்திகள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்த அமைச்சர் இதனூடாக துறைசார்ந்தவர்களது வாழ்வாதாரத்தை மென்மேலும் மேம்படுத்தும் வகையில் எமது அமைச்சு தொடர்ந்து முழுமையான பங்களிப்பை வழங்கும் என்றும் சுட்டிக்காட்டினார்.

தாய்லாந்து நகர் பாங்கொங்கில் இம்மாதம் 22 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதிவரையான மூன்றுநாட்களும் அன்பளிப்பு மற்றும் வீட்டுப்பாவனை பொருட்கள் கண்காட்சி நடைபெறவுள்ள நிலையில் அங்கு பனைசார்ந்த நவீன தொழில்நுட்பத்துடன் கூடியதான கைப்பணி உற்பத்திப் பொருட்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

மேற்படி கண்காட்சியை பார்வையிடுவதுடன் அதுதொடர்பிலான மேலதிக நவீன தொழில்நுட்பம் மற்றும் புதிய வடிவமைப்பு உள்ளிட்ட அறிவினைப் பெற்றுக்கொள்ளும் வகையில் வடக்கு, கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த பனை சார்ந்த கைப்பணி போத[illegible]சிரியர்கள் தாய்லாந்திற்கு செல்லவுள்ளனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானநதாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு அமைவாக பனை அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தலைமையில் 25 பேர் அடங்கிய குழுவினர் தாய்லாந்து செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன்போது விமான ரிக்கற்றுக்களை அமைச்சர் உள்ளிட்டோர் உரியவர்களிடம் வழங்கிவைத்தார்.

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொட்டடி சனசமூக நிலையத்தின் விசேட கூட்டமொன்று இன்று மாலை 6.30 மணியளவில் நிலையத்தலைவர் மு.ஜெ.சுஜீந்திரன் தலைமையில் சிவன்பண்ணை வீதியில் அமைந்துள்ள நிலையக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது. (05)

## எரிவண்டால் விபரீதம்; சகோதரர்கள் படுகாயம்

(கரணவாய்)

வல்லையில் நேற்று மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நல்லூர் மூத்த விநாயகர் கோயிலடியைச் சேர்ந்த ஞானசேகரம் தவராணி (வயது 45) ஞானசேகரம் ரூபன் (வயது 26) என்ற இருவருமே இவ்வாறு படுகாயமடைந்துள்ளனர்.

இவர்கள் இருவரும் நேற்று மாலை நல்லூரில் இருந்து நெல்லியடி நோக்கி மாலை 6.30 மணியவில் வல்லைப் பகுதியில் சென்றுகொண்டிருந்த வேளை கண்ணில் எரிவண்டு அடிபட்டதையடுத்து அருகே சென்ற சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதாகவும், எனினும் சைக்கிளில் சென்றவர் காயங்கள் எதுவும் இன்றி தெய்வாதீனமாக தப்பியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (18)

## வருடாந்த மஹோற்சவம்

(திருநெல்வேலி)

திருநெல்வேலி திருவருள் மிகு ஸ்ரீ நீலாயுதாஷி அம்பிகா சமேத ஸ்ரீ காயாரோகண சுவாமி தேவஸ்தான வருடாந்த பிரம்மோற்சவப் பெருவிழா இன்று காலை 10.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்தொன்பது தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 01 ஆம் திகதி புதன்கிழமை மாலை திருமஞ்சமும், 04 ஆம் திகதி சனிக்கிழமை மாலை கைலாச வாகனமும், 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை சப்பறமும், மறுநாள் 08 ஆம் திகதி புதன் கிழமை காலை இரதோற்சவமும் இடம்பெறும்.

09 ஆம் திகதி வியாழக்கிழமை காலை பஞ்சமூர்த்திகள் எழுந்தருளிப் புதிதாக அமைக்கப்பெற்ற சிவானந்த தீர்த்தத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறும். (137)

## இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

ஹேலிஸ் அக்ரிகல்சர் ஹோல்டிங்ஸ் லிமிட்டெட் நிறுவனம் யாழில் தனது புதிய தோற்றத்தில், புதிய இடத்தில் தனது வாடிக்கையாளர் சேவையினை ஆரம்பிக்கவுள்ளது.

இல 87, பலாலி வீதி, கோணடாவில் என்னும் முகவரியில் புதிதாக இயங்கவுள்ளதுடன் ஆரம்ப வைபவம் நாளை காலை 9.45 மணிக்கு இடம்பெறவுள்ளது.

## சிரமதானம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் சிரமதான நிகழ்வு இன்று இடம்பெறுகின்றது.

இன்று காலை முதல் மாலை வரை இச்சிரமாதான நிகழ்வு இடம்பெறுகின்றது. இந்நிகழ்வினை ஆலய நிர்வாகத்தினரும், இந்து இளைஞர்களும் சேர்ந்து ஒழுங்கு செய்துள்ளனர்.

இச்சிரமதான நிகழ்வில் அனைவரையும் கலந்துகொண்டு ஆலயத்தின் வளர்ச்சிக்கு உதவுமாறு கேட்கப்பட்டுள்ளனர். எதிர்வரும் 15 ஆம் திகதி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# வாழ்க்கைக்குரிய கல்வியைப் போதிப்பதில் அறநெறிப் பாடசாலைகள் முதன்மையானவை

## இந்து சமய கலாசார திணைக்கள உதவிப் பணிப்பாளர்

(மானிப்பாய்)

பாடசாலைகளில் கற்கின்ற சமய கல்விப் பரீட்சையை மைய மாகக் கொண்டது. அறநெறிப் பாடசாலைகளில் கற்கின்ற சமயக் கல்வி வாழ்க்கையை வாழ்வதற்குரிய வழியைச் சொல்லிக் கொடுப்பதாக அமைந்துள்ளது.

எனவே, அறநெறிப் பாடசாலைகளுக்கு பிள்ளைகளை கட்டாயமாக அனுப்பி அதன் மூலம் எதிர்காலத்தில் ஓர் நல்ல பிரஜைகளாக அவர்களை உருவாக்க வேண்டியது பெற்றோரது கடமையாகும் என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி கேமலோஜினி குமரன் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையின் பரிசளிப்பு விழா பன்னிரண்டாவது ஆண்டு விழா நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அறநெறிப் பாடசாலை அதிபர் வே.தம்பாப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

வரும் சந்ததியினர் சமய, கலாசார, பண்பாட்டைப் பின்பற்றி நற்பிரஜைகளாக வர வேண்டும். அதற்காகவே சிறு வயதில் அறநெறிப் பாடசாலைகளில் இவற்றைக் கற்பிக்கின்றார்கள்.

நாம் எமது கலாசாரம், பண்பாடுகளை விட்டு நவீனத்துவத்துக்குப் போகாமல் எமது பண்பாடுகளோடு நவீனத்துவத்தையும் இணைத்து முன்னேறும் போதுதான் அது அர்த்தமுள்ளதாக அமையும்.

ஆலயங்கள் வழிபாட்டிடங்களாக மட்டும் திகழாமல், சமூக சேவை நிலையங்களாகத் திகழ வேண்டும். ஆலயங்களின் நிர்வாகத்தினர் இதில் கவனம் செலுத்த வேண்டும். ஆலயங்கள் தோறும் அறநெறிப் பாடசாலைகள் அமைத்து மாணவர்களுக்கு அவற்றினூடாக சிறந்த கல்வி, பண்பாட்டைப் போதிக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (54)

# மண்டைதீவு மக்களுக்கு பழமரக்கன்றுகள் விநியோகம்

(மண்டைதீவு)

மண்டைதீவுப் பகுதியில் குடும்பம் ஒன்றிற்கு இரு பழமரக் கன்றுகள் வீதம் அப்பகுதி கிராம சேவகர் ஊடாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

பொருளாதார அமைச்சின் வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் புது வருடத்தை முன்னிட்டு ஒவ்வொரு குடும்பமும் தமது குடியிருப்புகளில் நடுவதற்காக இந்தப் பழமரக் கன்றுகள் இவ்வாறு பிரதேச செயலகங்கள் ஊடாக கிராமசேவையாளரிடம் வழங்கி விநியோகிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு பழமரக்கன்றுகளும் 20 ரூபாவிற்கு அங்குள்ள குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு புகைப்படமும் எடுக்கப்பட்டிருந்தது.

இதன்மூலமாக மண்டைதீவுப் பகுதியில் உள்ள குடும்பங்களின சுய பொருளாதாரத்தை ஊக்குவிப்பதே திட்டத்தின் நோக்கமாகவுள்ளது. தொடர்ந்து இவ்வாறு பழமரக் கனறுகளைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் கிராமசேவகரிடம் தொடர்பு கொண்டு பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# ஏ.ரி.எம். இல் பணமோசடி பொலிஸாரால் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலிப் பிரதேசத்தில் ஏ.ரி.எம். அட்டைகளில் பணமோசடியில் ஈடுபட்ட கோப்பாய் பகுதி இளைஞனை அச்சுவேலி குற்றத தடுப்புப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் தனது 2 ஏ.ரி.எம் அட்டைகளின் இரகசிய இலக்கங்களையும் ஞாபகம் வைத்துக் கொள்ள முடியாத நிலையில் அட்டைகளுடன் இரகசிய இலக்கங்களையும் குறித்து வைத்துள்ளார்.

இந்நபர் உணவகம் ஒன்றில் கடமையாற்றி வந்த நிலையில் இவர் தனது ஏ.ரி.எம். அட்டைகளை தவறவிட்டதாகவும் பின்னர் வங்கிப் புத்தகத்தைப் பரீட்சித்துப் பார்த்தபோது 54 ஆயிரம் ரூபா பணம் மாயமானதைக் கண்டு அதிர்ச்சியுற்ற குறித்த நபர் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செயதுள்ளார்.

இதனை அடுத்து பொலிஸ் உணவகத்தில் பொருத்தப்பட்டிருந்த கமராவின் உதவியுடன் கண்டுபிடித்து மோசடியில் ஈடுபட்ட நபரைக் கைது செய்தனர்.

இவரிடம் விசாரணையை மேற்கொண்ட பொலிஸார் குறிதத நபர் தான் ஒருநாள் கடையினைத் துப்புரவு செய்யும் போது ஏ.ரி.எம். அட்டைகள் கிடைத்ததாகவும், அதில் இருந்த இரகசிய இலக்கத்தைக் கொண்டு பணத்தை எடுத்ததாகவும் ஒப்புக்கொண்டார்.

இதனையடுத்து குறித்த நபரைப் பொலிஸார் மல்லாகம் நதிமன்றில் ஆஜர்படுத்தியவேளை நீதிபதி எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (15)

# சனசமூக நிலையம் மீண்டும் இயங்குமா?

(யாழ்ப்பாணம்)

தம்பாலை ஸ்ரீமுருகன் சனசமூக நிலையமானது கடந்த ஒரு வருட காலத்திற்கும் மேலாக இயங்காத நிலையிலுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சனசமூக நிலையத்திற்கு நிர்வாக சபை உறுப்பினர்கள் இருந்தும் அவர்கள் வேறு இடங்களுக்குச் சென்றுள்ள நிலையில் நிர்வாகக் கட்டமைப்பு ஒழுங்கற்ற நிலையே சனசமூக நிலையம் இயங்காமைக்குக் காரணம் எனவும், இதனால் தாம் பல்வேறு சிரமங்களுக்குள்ளாவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, சனசமூக நிலையத்திற்குப் பொறுப்பான நிர்வாக சபை உறுப்பினர்கள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு மீண்டும் இயங்க வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு மக்கள் கேட்டுள்ளனர்.

# கவிதை நூல் வெளியீட்டு விழா

தவிர கலை இலக்கிய சஞ்சிகை குழாமின் ஏற்பாட்டில் கருணாகரனின் 'ஒரு பயணியின் போர்க் கால குறிப்புகள்' கவிதை நூல் வெளியீட்டுவிழா நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

உடுப்பிட்டி நியூ பிறைற் கல்வி நிலையத்தில் குப்பிளான் ஐ.சண்முகம் தலைமையில் காலை 10 மணிக்கு நடைபெற வுள்ள நிகழ்வில் ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் கந்தையா ஸ்ரீகணேசன், சாட்சியுரையை தவிர இதழின் ஆசிரியர் த.விஷ்ணு, பதில் உரையை ஆசிரியர் கருணாகரனும் நிகழ்த்தவுள்ளனர். (17)

# கஞ்சா வைத்திருந்த இருவர் கைது

(வவுனியா)

வவுனியா பொலிஸ் பிரிவில் 1322 மில்லிகிராம் கஞ்சா வைத்திருந்த சந்தேக நபர்கள் இருவர் வவுனியா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருப்பதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட இருவரும் வவுனியா நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் குறிபபிட்டார்.

இந்தச் சந்தேக நபர்களில் ஒருவர் செட்டிகுளத்தையும் மற்றையவர் மதவாச்சியையும் சேர்ந்தவர் எனவும் தெரிய வருகினறது.

நேற்றுமுன்தினம் யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# மணியந்தோட்டப் பகுதியில் மீன் சந்தையை அமைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மணியந்தோட்டம் பகுதியில் மீன் சந்தை ஒன்றை நிர்மானித்துத் தரும்படி நல்லூர் பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அப்பகுதி கடற்றொழிலாளர் பிரதிநிதி ஒருவரால் கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை நல்லூர்ப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற இந்தப் பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் மணியந்தோட்டப் பகுதியில் உள்ள கடற்றொழிலாளர்கள் தம்மால் பிடிக்கப்படும் கடலுணவுகளை குருநகர் சின்னக்கடைப் பகுதிக்கு எடுத்து வந்தே விற்க வேண்டியிருப்பதாகவும், எனவே தம்மால் பிடிக்கப்படும் கடலுணவுகளை மணியந்தோட்டப் பகுதியிலேயே வைத்து விற்பனை செய்வதற்கு ஏதுவாக இந்தப் பகுதியில் மீன்சந்தை ஒன்றை அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அந்தக் கடற்றொழிலாளர் பிரதிநிதி கேட்டுக்கொண்டுள்ளார்.

இதற்கு ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நல்லூர் பிரதேச அபிவிருத்திக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின், கடறறொழிலாளர்கள் சார்பாக இந்தக் கோரிக்கை குறித்து கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்துடன் ஆலோசிக்கப்பட்டு அதற்கான தீர்வைப் பெற்றுகொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (பா)







கலாநிதி த.கலாமணியின் மணிவிழா அண்மையில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விழா நாயகன் உரையாற்றுவதையும், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் செல்வி வசந்தி அரசரட்ணம், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா உள்ளிட்ட கல்வியாளர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் காணலாம். (54)

உன் வாழ்க்கையின் எந்த ஒரு நாளில் உன் முன்னால் எந்தப் பிரச்சினையையும் நீ சந்திக்காமல் முன்செல்கிறாயோ, அப் பொழுது தவறான பாதையில் நீ பயணிக்கிறாய் என்று அறிவாய்.

- சுவாமி விவேகானந்தர்

தினப்புயல் தினமுரசு THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## சோற்றுக்கும் வந்ததோ நஞ்சு!

குடிக்கும் நீரில் நஞ்சு, உண்ணும் உணவில் நஞ்சு, சுவாசிக்கும் காற்றில் நஞ்சு என்றாகிவிட்டது நம் சூழல். நாகுக்கான அவசரமான நவீன வாழ்க்கை முறைக்கு நாம் தந்து கொண்டிருக்கும் விலை இந்தச் சுற்றுச்சூழல் பாதிப்பு.

போத்தல்களில் அடைக்கப்பட்ட தண்ணீரும், கையை வாயைக் கழுவாமலே நின்ற நிலையில் கடித்துவிட்டு ஓடக் கூடிய உடன் தயாரிப்பு உணவு வகைகளுமே கதியாகி விட்டது. இன்னும் இன்னும் என்று துரித வளர்ச்சியை நோக்கிப் பாய்ந்து கொண்டிருக்கும் மனிதர்களுக்கு தானியங்கள் காய்கறிகளின் சாதாரண விளைச்சல் போதவில்லை. மரபணுவை மாற்றியும் விளைச்சலைப் பெருக்குகிறோம்.

விளையும் பயிர்களிலேயே நஞ்சு கலந்துவிடுகிறது. இதனால், உண்ணும் உணவே விஷமாகிவிட்டது. விளைச்சலில் விஷம் கலப்பதை நிறுத்த முடியவில்லை. இரசாயனத்தில் விளைந்த காய்கறிகள் - பழங்கள் - தானியங்களையே உண்ண வேண்டியிருக்கிறது.

விதம் விதமான துரித உணவு வகைகள் கண்டுபிடிக்கப்பட்டு தயாரிக்கப்பட்டு கடைகளில் குவிந்தவண்ணம் உள்ளன. சமையல் இல்லாமல் அதாவது சமையலறைக்குச் செல்லாமல் பல மாதங்களுக்கு முன்பே சமைக்கப்பட்டதும் கெடாமல் இருக்க இரசாயனங்களும் சேர்க்கப்பட்ட பொதி உணவுகள் இவை. இவற்றிலும் உரம், கிருமிநாசினிகளின் விஷமும் அதற்கு மேல் வேறு ஆபத்துகளும் உண்டு.

ஒரு மனிதன் நலமுடன் வாழ சராசரியாக 2,200 கலோரி உணவு போதும். இந்தக் கலோரி 300 கிராம் காபோவைதரேற், 6 கிராம் உப்பு, 20 கிராம் சாதாரண கொழுப்பு மற்றும் 2 கிராம் கரையாத கொழுப்பு ஆகியவற்றில் கிடைத்துவிடும். தானியங்கள், பருப்பு வகைகளில் புரதச்சத்து உண்டு. காய்கறி - பழங்களில் விற்றமின் சத்துக்களும் தேவையான நார்ச்சத்தும் கிட்டும்.

ஃபாஸ்ட் ஃபுட் உணவுகளில் புரதம், நார்ச்சத்து, விற்றமின் எதுவுமே இல்லை என்பதுடன், அனுமதிக்கப்படும் அளவுக்கு மேல் உப்பும், கரையாத கொழுப்பும் உள்ளதால் மனித ஆயுளை குறைத்து, உடல் மருந்துக்கு அடிமையாகவும் நேர்கிறது.

ஜாம், ஜெலி, சீஸ், ஊறுகாய் போன்ற துரித உணவுகளில் பென்சோட் என்ற நச்சு சேர்க்கப்படுகிறது. பூச்சி மருந்துகளிலும் பென்சோட் உண்டு. அடைக்கப்பட்டு விற்கப்படும் இறைச்சிகளில் நைதரேற் சேர்க்கப்படுகிறது. பாண், பனிஸ், கேக் போன்றவற்றில் சோடியம் பென்சோட் சேர்க்கப்படுகிறது. வெள்ளை நிறம் பெற சல்ஃபைற்றும், சிவப்பு - மஞ்சள் - பிங்க் நிறம் பெற அலுமினியம் குரோமைற் என்ற விஷப் பொருளும் சேர்க்கப்படுகிறது.

கேசரி பவுடர் என்ற பெயரில் குரோமைற் விற்கப்படுவதால் அதை வாங்கி அல்வாவிலும் கேசரியிலும் சிவப்பு நிறத்துக்குப் பயன்படுத்துகிறோம். உருளைக்கிழங்கு சிப்ஸ்களில் புட்டிலேற்றட் ஹைட்ரொக்சினேற் சேர்க்கப்படுகிறது. சோடியம் பைகாபனேற் என்ற சமையல் சோடா சேர்க்கப்படாத பொருளே இல்லை. இதுவும் அளவுக்கு அதிகமானால் நோய்தான்.

இது அவசர உலகம். நல்லுணவை நல்ல விதமாகச் சமைக்கக்கூடிய வயதானவர்களை வீட்டில் வைத்திருக்கவே பஞ்சிப்படுகிறோம். ஜங் ஃபுட் - அதாவது கெட்ட உணவை விலை கொடுத்து வாங்கி நோயுறுகிறோம். நமது சுலபத்திற்கு கடைகளில் கிடைக்கும் துரித உணவைவிட நமது சமையலறை உணவுதான் நல்லது. நாம் புரிந்துகொண்டு மாற்றிக்கொள்ள வேண்டிய எத்தனையோ விஷயங்களில் இதுவும் ஒன்று.

- ஆசிரியர்

# புலிகளுடன் மரபு வழியில் யுத்தம் புரிந்தோம்
# இராணுவ தந்திரோபாயங்களை பகிரத்தயார்
## கூறுகிறார் பாதுகாப்புச் செயலர்

(திருகோணமலை)

புலிகளுடன் மரபுவழியுத்தம் செய்தோம் அங்கு பயன்படுத்தப்பட்ட யுத்த தந்திரோபாயங்களை நட்பு நாடுகளுடன் பகிர்ந்துகொள்வதற்கு நாம் எப்போதும் தயாராக உள்ளோம் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக மரபு ரீதியான இராணுவத் தந்திரோபாயங்கள் பயன்படுத்தப்பட்டதாகவும் சிவில் யுத்தம் இடம்பெற்ற காலத்தில் படையினர் மரபு ரீதியான போராட்டத்தையே முன்னெடுத்தனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.திருகோணமலையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதி நவீன ஆயுதங்கள், இராணுவத் தளபாடங்கள் மற்றும் யுத்தக் கப்பல்கள் இன்றியே படையினர் வெற்றிகரமாக யுத்தத்தை முன்னெடுத்ததாகத் தெரிவித்துள்ளார். பிராந்திய வலயத்தின் நட்பு நாடுகளுடன் பயங்கரவாத ஒழிப்பு மற்றும் யுத்த தந்திரோபாயம் பற்றிய தகவல்களைப் பரிமாறிக்கொள்ள விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சீனா, பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற நாடுகளைச் சேர்ந்த படைவீரர்களுக்கு இலங்கையில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்றவர்களுக்கு பாதுகாப்புச் செயலாளர் சான்றிதழ்களை வழங்கியிருந்தார்.

# இலங்கைப் பணிப்பெண்களுக்கு சவுதிஅரேபியாவில் நெருக்கடி
## - நூற்றுக்கணக்கானோர் நிர்க்கதி நிலையில்

சவுதியில் நிர்க்கதிக்குள்ளான இலங்கைப் பணிப்பெண்கள் 800 பேர் அங்குள்ள ஒலெய்யா முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.தொழில் வாய்ப்புக்களுக்காக சவுதி அரேபியா சென்று நிர்க்கதிக்குள்ளான பணிப்பெண்கள் குறித்த முகாமில் உரிய இட வசதிகளின்றிப் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளதாக எமக்குத் தெரிவித்தனர்.இதுகுறித்து சவுதி அரேபியாவிற்கான இலங்கைத் தூதரகத்தின் அமைச்சர் ஆலோசகர் அனுர முதுமாலவிடம் தொடர்புகொண்டு கேட்ட போது, இந்த விடயம் தனக்கு இதுவரை அறியக் கிடைக்கவில்லை என்றார்.இந்த விடயம் தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொது முகாமையாளருமான மங்கல ரந்தெனியவிடம் வினவப்பட்டது.

பல்வேறு பிரச்சினைகள் காரணமாக தத்தம் தொழில் வழங்குநர்களிடமிருந்து தப்பி வந்தவர்களில் பெரும்பாலானவர்களே ஒலெய்யா முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.ஆயினும், அவர்களுக்கான உணவு மற்றும் ஏனைய வசதிகள் போதுமானளவு செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இருப்பினும், பணிப்பெண்கள் என்ன அடிப்படையில் இவ்வாறான கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர் என்பது குறித்து தாம் ஆராயவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# பொருளாதாரத்தில் வினைத்திறன் காணமுடியாது அரசு திணறல்
## - ஐ.தே.கட்சியின் ஆதங்கம்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்தை வினைத்திறனுடன் நிர்வகிக்க முடியாமல் அரசு திணறுவதாக ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. அண்மைக்காலமாக மிக மோசமான வங்குரோத்து நிலையை அடைந்ததனை அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். பொருளாதாரத்தை நிர்வாகம் செய்ய முடியாது என்பதனை அரசாங்கம் இறுதியில் பகிரங்கமாக ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ந்தும் மக்களுக்கு நிவாரணங்களை வழங்க முடியாது என அண்மையில் ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்திருந்தார். இந்தக் கருத்தின் மூலம் அரசாங்கம் வங்குரோத்து அடைந்துள்ளமை புலனாகியுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாகவே அரசாங்கம் பாரியளவில் மின்சாரக் கட்டணங்களை உயர்த்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். ஆளும் கட்சி அமைச்சர்கள், அரசியல்வாதிகள் மற்றும் உயர் அரசாங்க அதிகாரிகள் பாரியளவு சொகுசு வாழ்க்கையை வாழ்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளார். அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கு கிடைக்கப் பெறும் சலுகைகளை தியாகம் செய்து முன்னுதாரணமாக திகழ வேண்டியது அவசியமானது என ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

# சுற்றுலாப் பயணிகள் படையெடுப்பு; தடுத்து நிறுத்த நடந்ததா சதி ?

(நுவரெலியா)

மலையகத்துக்கு சுற்றுலாப்பயணிகளின் படையெடுப்பைத்தடுப்பதற்கு சதித்திட்டம் தீட்டப்பட்டதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக அரச அதிகாரிகள் சர்ச்சை கிளப்பியுள்ளனர்.

இச்சதித்திட்டத்தின் ஒருகட்டமாக நுவரேலியா வசந்த காலத்தைச் சீர்குலைப்பதற்காக குறுஞ்செய்தியின் (எஸ்.எம்.எஸ்) மூலமாக சூழ்ச்சிகளை மேற்கொண்டிருந்தவர் கொழும்பிலுள்ள 15 வயதுச் சிறுவன் என்று கண்டறியப்பட்டுள்ளது என்று குற்றப்புலனாய்வுப் பிரிவினர் (சி.ஐ.டி) தெரிவித்தனர்.பாடசாலை மாணவனான குறித்த சிறுவன் தங்களுடைய உறவினர்களுக்கே முதலில் அந்தக் குறுஞ்செய்தியை அனுப்பியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அந்தக் குறுஞ்செய்தி தொடர்பில் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை என்று நுவரெலியா மாவட்ட செயலாளர் நகரத்தின் முக்கியஸ்தர்கள் மற்றும் மக்களிடம் அன்றையதினமே கேட்டுக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அந்தக் குறுஞ்செய்தியை கவனத்தில் எடுக்காது நுவரெலியாவுக்கு வருகைதருமாறு நுவரெலியா மாவட்ட செயலாளர் பி.ஜி. குமாரசிறி கேட்டுக் கொண்டதுடன் நுவரெலியாவுக்கு வருகை தருகின்ற சகலருக்கும் பாதுகாப்பு வழங்குதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

அதனடிப்படையில் வசந்தகாலக் கொண்டாட்டத்திற்கு பெருந்திரளானோர் வருகைதந்திருந்ததாகவும் எவ்விதமான இடையூறுகளும் இன்றிக் கொண்டாட்டம் இடம்பெற்றதாகவும் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

சங்கர சிவன்

# மீண்டுமொரு அழிவுக்கு வழிவகுக்கும் இடைக்கால நிர்வாகக் கோரிக்கை

இந்தியாவிலிருந்து வந்த ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்தார்கள். அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் வேறு சமூக அமைப்புகளைச் சார்ந்தவர்களும்கூட இச்சந்திப்பில் பங்குபற்றினார்கள்.

சில மாதங்களுக்கு முன் இந்தச் சிவில் சமூகம் ஊடகங்களில் பெரிதாக அடிபட்ட பெயர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆலோசனை என்ற பெயரில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்குக் குந்தகமான கடுங்கோட்பாட்டுக் கருத்துக்களை இவர்கள் தொடர்ச்சியாக வெளியிட்டுக்கொண்டிருந்தார்கள். அந்தக் கற்பனாவாத நிலைப்பாட்டையே இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பிலும் இவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தை நிராகரித்ததோடு இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு கிடைக்கும் வரை இந்தியாவின் அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார்வைக்குக் கீழ் செயற்படுகின்ற இடைக்கால நிர்வாக சபையொன்றை அமைக்க வேண்டும் என்று சிவில் சமூகப் பிரதிநிதிகள் முன்வைத்த கோரிக்கைக்கு சுரேஷ் பிரேமச்சந்திரன் பூரண ஆதரவை வெளிப்படுத்தியதோடு அவரும் அக்கோரிக்கையை வலியுறுத்தினார்.

சுரேஷ் பிரேமச்சந்திரன் தான் இக்கோரிக்கையின் மூலவர் என்ற அபிப்பிராயம் தமிழ் அரசியல் வட்டாரங்களில் நிலவுகின்றது. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதைத் தடுக்கும் நிலைப்பாட்டைக் கொண்ட புலம்பெயர் அமைப்புகளுடன் இவருக்கு நெருக்கமான தொடர்பு உண்டு. அந்த அமைப்புகளின் இலங்கை முகவர் என்றும் கூறலாம். சிவில் சமூகப் பிரதிநிதிகள் என்ற பெயரில் செயற்படுகின்றவர்களும் மேலே கூறிய புலம்பெயர் அமைப்புகளின் நிலைப்பாட்டோடு உடன்பாடு உள்ளவர்கள் என்பதால் அவர்கள் மூலம் இக்கோரிக்கையை முன்வைப்பது சிரமமானதல்ல. இந்தக் கோரிக்கையில் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூடுதலான அக்கறை கொள்வது ஏன் என்ற கேள்விக்கு வருவதற்கு முன், இக்கோரிக்கை தமிழ் மக்களுக்கு எவ்வளவு பாதகமானது என்பதைப் பார்ப்போம்.

இறுதித் தீர்வு கிடைக்கும் வரை இடைக்கால நிர்வாகம் என்பதே கோரிக்கையின் சாராம்சம். இறுதித் தீர்வை அறிவித்துவிட்டு இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை முன்வைப்பதில் அர்த்தமுண்டு. இங்கே இறுதித் தீர்வு இல்லை. அதை முன்வைக்க வேண்டிய கூட்டமைப்புத் தலைவர்கள் பல கோணங்களிலிருந்து கேள்விகள் வந்தபோதிலும் மௌனம் சாதிக்கின்றார்கள். இறுதித்தீர்வை முன்வைக்காமல் இடைக்கால நிர்வாகம் கேட்பது அரசியல் தீர்வைத் தடுக்கும் நிலைப்பாட்டின் வெளிப்பாடாகும்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை ஓரே தடவையில் பெறக்கூடிய அளவுக்கு இலங்கையின் அரசியல் நிலை இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும். படிப்படியாகவே முழுமையான அரசியல் தீர்வை அடைய முடியும். இந்த அணுகுமுறையின் ஆரம்பமாக இருப்பது பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழ் நடைமுறைக்கு வந்திருக்கும் மாகாண சபை. அரசியல் தீர்வை நோக்கிய நகர்வுக்குத் தடைபோடும் நோக்கத்தில் பேரினவாத சக்திகள் பதின்மூன்றாவது திருத்தத்தை எதிர்க்கின்றன. இப்போது சுரேஷ் பிரேமச்சந்திரனும் எதிர்க்கின்றார். சிவில் சமூகம் என்ற பெயரில் செயற்படுபவர்களும் எதிர்க்கின்றார்கள். இவர்களின் எதிர்ப்பினால் பேரினவாதிகளின் எதிர்ப்பு வலுவடைகின்றது. தமிழ் மக்களின் உரிமைக்காக நடத்தப்படும் போராட்டம் பேரினவாதிகளைப் பலவீனப்படுத்துவதையும் இலக்காகக் கொண்டிருக்க வேண்டியது அவசியம். எந்தப் போராட்டத்திலும் எதிராளியைப் பலவீனப்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிப்பது வழக்கம். ஆனால், இங்கே தமிழ் மக்களின் பெயரால் பேரினவாத்துக்கு வலுவூட்டுகின்றார்கள். இது தமிழ் மக்களின் நலனுக்குப் பாதகமான வளர்ச்சிப்போக்கு.

இலங்கை அரசாங்கத்துக்கும் அதன் சட்டங்கள் மற்றும் அரசியலமைப்புக்கும் உட்படாத சுதந்திரமான அமைப்பாகவே இவர்கள் இடைக்கால நிர்வாக சபையைக் கோருகின்றார்கள். புலிகள் கோரிய இடைக்கால சுயாட்சி அமைப்புக்கும் இதற்குமிடையே பெரிய வேறுபாடு இல்லை.

இந்த இடைக்கால நிர்வாக சபை தனிநாட்டுக்குரிய சபையைக் கொண்டிருப்பதை மேலெழுந்த பார்வையிலேயே காணலாம். சிங்கள மக்கள் இதைத் தனிநாட்டுக்கான முயற்சியாகவே பார்பார்கள். இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை நடைமுறைப்படுத்துவதற்குச் சிங்கள மக்களின் ஆதரவு அத்தியாவசியமானதாக உள்ள நிலையில் தமிழர் தரப்புக் கோரிக்கைகள் பற்றிச் சிங்கள மக்களிடம் சந்தேகங்களைத் தோற்றுவிப்பது அரசியல் தீர்வுக்குக் குந்தகமான செயற்பாடாகும். இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை முன்வைப்பவர்கள் அதையே செய்கின்றார்கள்.

சமகால யதார்த்தத்தை விளங்கிக்கொண்டு நடைமுறைச் சாத்தியமான கோரிக்கைகளை முன்வைப்பதன் மூலம்தான் பிரச்சினைகளுக்கான தீர்வை அடைய முடியும். நடைமுறைச் சாத்தியமற்ற கோரிக்கைகளை முன்வைப்பது தீர்வில் அக்கறை இருப்பதாகக் காட்டிக்கொண்டு தீர்வுக்குத் தடையாகச் செயற்படுவதாகும். இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கை நடைமுறைச் சாத்தியமானதல்ல. இலங்கையில் அரசாங்கத்தினதும், அரசியலமைப்பினதும் கட்டுப்பாட்டுக்கு அப்பால் சுதந்திரமான ஒரு சபை அமைவதை இன்றைய அரசாங்கம் மாத்திரமின்றி எந்த அரசாங்கமும் அனுமதிக்காது. சுரேஷ் பிரேமச்சந்திரனும் சிவில் சமூகமும் முன்வைத்திருக்கும் இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கை தமிழ் மக்களின் நலனில் அக்கறை இருப்பதாகக் காட்டிக்கொண்டு அந்த நலனுக்கு விரோதமாகச் செயற்படுவதாகும்.



சுரேஷ் பிரேமச்சந்திரனின் இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கை தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மற்றைய சிரேஷ்ட தலைவர்கள் மௌனம் சாதிப்பதைப் பார்க்கும் போது இது பிரேமச்சந்திரனின் தனிப்பட்ட காய் நகர்த்தலா என்ற சந்தேகம் எழவே செய்யும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பிரேமச்சந்திரன் இன்று பிரச்சினைக்குரியவராக இருக்கின்றார். கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை இவர் அளவுக்கதிகமாக வலியுறுத்துவது கூட்டமைப்பில் மேலாதிக்கம் செலுத்தும் தமிழரசுக் கட்சித் தலைமைக்கும் இவருக்குமிடையே பாரிய இடைவெளியொன்றைத் தோற்றுவித்திருக்கின்றது. பிரேமச்சந்திரன் தனது அரசியல் இருப்பை உறுதிப்படுத்துவதற்காகவே இக்கோரிக்கையை வலியுறுத்துகின்றார் என்று தமிழரசுத் தலைமை சரியாகவே கருதுகின்றது.

கூட்டமைப்பைத் தனிக் கட்சியாகப் பதிவு செய்யவேண்டும் என்பதே சில காலமாகக் கூட்டமைப்புக்குள் பேசப்படும் ஒரே விடயமாக இருக்கின்றது. இனப்பிரச்சினையின் தீர்வை நோக்கிச் செயற்படுவதற்குக் கூட்டமைப்பு அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்படாதிருப்பது எந்த விதத்தில் தடையாக இருக்கும் என்பது விளங்கவில்லை.

தனிக்கட்சிக் கோரிக்கையைக் கூட்டமைப்பின் தமிழரசுக் கட்சித் தலைமை தொடர்ந்து தட்டிக் கழித்து வருமேயானால் கூட்டமைப்பிலிருந்து வெளியேற நேரிடலாம் எனக் கருதும் சுரேஷ், தமிழ் மக்களைக் கவரக்கூடிய தீவிரமான ஒரு கொள்கையை இப்போதிருந்தே முன்வைக்க விரும்புகின்றார். ஆனால், இந்தத் தீவிரக் கொள்கை தமிழ் மக்கள் நிரந்தரமாகப் பிரச்சினைக்குள் வாழும் நிலையையே தோற்றுவிக்கும் என்பது அவருக்கு விளங்கவில்லை.

அடுத்தது வடமாகாண சபைத் தேர்தல். முதலமைச்சர் பதவியில் நீண்ட காலமாகவே கண் வைத்திருப்பவர் சுரேஷ். அந்தப் பதவி அவருக்குக் கிடைப்பதற்குத் தமிழரசுத் தலைவர்கள் விடமாட்டார்கள் என்பது அவருக்கு விளங்கிவிட்டது. இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கையை முன்வைப்பதன் மூலம் வடமாகாண சபைத் தேர்தலைத் தவிர்ப்பதற்கான முயற்சியாகவும் இதைப் பார்க்கலாம். தனக்குக் கிடைக்காத பதவி இன்னொருவருக்குக் கிடைக்கக்கூடாது என்பது ஒரு நோக்கம். கூட்டமைப்பின் தமிழரசுத் தலைமைக்கு எதிரான காய் நகர்த்தலுக்கு வடமாகாண சபைத் தேர்தல் நடக்காமலிருக்க வேண்டும் என்பது மற்றைய நோக்கம்.

உத்தேச இடைக்கால நிர்வாக சபை தனிநாட்டை நோக்கிய நகர்வின் ஆரம்ப கட்டம். தமிழரசுக் கட்சித் தலைமை இந்தக் கோரிக்கையோடு இணைந்து செல்லத் தயங்கினால் கடுங்கோட்பாட்டுப் புலம் பெயர் அமைப்புகளுக்கும் அதற்கும் இடையிலான உறவு முறிந்துவிடும். அதைச் சுரேஷ் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தலாம். புலம் பெயர் அமைப்புகளிடமிருந்து கூட்டமைப்புக்கு நிதியுதவி கிடைப்பது இரகசியமல்ல. தமிழரசுக் கட்சித் தலைமை இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கையை ஏற்றுச் செயற்பட முன்வந்தால் இந்தியாவுடன் அதற்குள்ள உறவு முறிந்துவிடும். இக்கோரிக்கை கூட்டமைப்பின் தமிழரசுக் கட்சித் தலைமைக்கு வைத்த பொறி என்று கூறலாம்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் நடைமுறையைப் பின் பற்றுவதா அல்லது தமிழ் மக்களை அந்தகாரத்துக்கு அழைத்துச் செல்லும் பாதையில் பயணிப்பதா என்பதில் கூட்டமைப்புத் தலைமை தீர்க்கமான முடிவுக்கு வரவேண்டும்.

உடனடியாகக் கிடைக்கும் தீர்வை ஏற்றுக்கொண்டு படிப்படியாக முழுமையான தீர்வை நோக்கிச் செல்லும் யதார்த்தபூர்வ நடைமுறையில் ஆரம்ப கட்டமாக மாகாண சபை இருக்கின்றது. அரசியல் தீர்வுக்கான சகல வழிகளையும் அடைத்துத் தமிழ் மக்களை மீண்டுமொரு அழிவுக்கு இட்டுச் செல்லும் கோரிக்கையாக இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கை இருக்கின்றது.

**முதலமைச்சர் பதவியில் நீண்ட காலமாகவே கண் வைத்திருப்பவர் சுரேஷ். அந்தப் பதவி அவருக்குக் கிடைப்பதற்குத் தமிழரசுத் தலைவர்கள் விடமாட்டார்கள் என்பது அவருக்கு விளங்கிவிட்டது. இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கையை முன்வைப்பதன் மூலம் வடமாகாண சபைத் தேர்தலைத் தவிர்ப்பதற்கான முயற்சியாக இதைப் பார்க்கலாம். தனக்குக் கிடைக்காத பதவி இன்னொருவருக்குக் கிடைக்கக்கூடாது என்பது ஒரு நோக்கம். கூட்டமைப்பின் தமிழரசுத் தலைமைக்கு எதிரான காய் நகர்த்தலுக்கு வடமாகாண சபைத் தேர்தல் நடக்காமலிருக்க வேண்டும் என்பது மற்றைய நோக்கம்.**

# மின்சாரக் கட்டண அதிகரிப்பு அரசின் செல்வாக்கைப் பாதிக்குமா?

மீளாய்வு செய்ய ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பது என்ற முடிவை அரசு மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை ஆளும் கட்சி அமைச்சர்கள் மட்டத்தில் வலுப் பெற்று வருகிறது.

இக்கோரிக்கை குறித்து ஜனாதிபதியிடமும் தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது.

நாட்டில் அசாதாரணமாக மின்சாரக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளதாகவும், இதனைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது மக்களுக்கு நிவாரணம் வழங்கக்கூடிய வகையில் மின்சாரக் கட்டணங்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளனர். எதிர் வரும் அமைச்சரவைக் கூட்டத்தின்போது இது தொடர்பில் விரிவாக ஆராயப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அசாதாரணமாக மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டிருப்பதனால் மக்கள் மத்தியில் தாம் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக சில ஆளும் கட்சி அமைச்சர்கள், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

# பாடசாலைக்கு டிமிக்கிவிட முடியாது மருத்துவமனையிலும் வகுப்பு நடக்கும்



(கொழும்பு)

சுகயீனம் காரணமாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் பாடசாலை செல்லும் வயதுடைய மாணவர்களுக்கு வைத்தியசாலைகளிலேயே வைத்துக் கல்வி புகட்டுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன முன்வைத்த இந்த ஆலோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

முதற் கட்டமாக கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறும் சிறுவர்களுக்குக் கற்பித்தல் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்காக 4 சிங்கள மொழி மூல ஆசிரியர்களையும் ஒரு தமிழ் மொழி மூல ஆசிரியரையும் நியமிக்க அமைச்சரவை அனுமதி அளித்தது.

புதிதாக கல்வியியற் கல்லூரிகளில் இருந்து வெளியேறும் 5 ஆசிரியர்கள் இங்கு சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

# மக்களின் ஆயுட்காலத்தை புலிகளே தீர்மானித்தனர் யுத்தகால அனுபவத்தை பகிர்கிறார் ஜனாதிபதி



(கொழும்பு)

நாட்டில் இதுவரை ஆட்சி செய்த அரசாங்கங்கள் செயற்படுத்த அஞ்சிய பல தீர்மானங்களை இந்த நாட்டு மக்களின் நலனுக்காக தாம் எடுத்ததாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மது, புகையிலை தொடர்பாக தீர்மானங்களை எடுத்தது போல, மருந்து வியாபாரம் தொடர்பாகவும் அரசாங்கம் அச்சமின்றித் தீர்மானங்களை எடுத்துள்ளது எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில், 602 மில்லியன் ரூபாவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய மூன்றாவது மருத்துவ பிரிவை கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார.

கடந்த 30 வருடங்களாக நாம் எப்போது இறந்து போவோம் என்ற நம்பிக்கையின்றி வாழ்ந்து வந்தோம். அது சுகாதார பிரிவின் பிரச்சினையல்ல. அந்தக் காலத்தில் நடைபெற்ற யுத்தமே இதற்குக் காரணம்.

அன்று மக்களின் ஆயுட்காலத்தை விடுதலைப்புலிகளே தீர்மானித்தனர். இங்கிருந்து அங்கு சென்றால் மீண்டும் திரும்ப முடியுமா என்ற அச்சம் இருந்தது. இதற்குச் சிறந்த சாட்சியாளர்கள் சுகாதாரத் துறையில் பணியாற்றுபவர்கள்.

துப்பாக்கிச் சூடு பட்டும், குண்டு வீச்சுகளில் காயமடைந்தும் இளம் படையினர், அப்பாவி மக்கள், தாய்மார் எத்தனை நாள்கள் வைத்தியசாலைக்கு வந்தனர் என்பதை வைத்தியசாலையின் ஊழியர்கள் அறிவார்கள்.

இவர்கள் அனைவரும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடனேயே இங்கு வந்தனர். நாங்கள் மீண்டும் நாட்டில் அந்த நிலைமையை ஏற்படுத்த மாட்டோம். ஏற்படவும் இடமளிக்க மாட்டோம்.

அப்படி நடந்தால் அது பாரிய அனர்த்தமாகும். போரை முடிவுக்குக்கொண்டு வந்து, தற்போது சுகாதாரத் துறையை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம் எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

# கசிப்பு உற்பத்தி சிலாபத்தில் தாராளம்

(கொழும்பு)

சிலாபம், மாதம்பே, லுணு ஓயா ஆகிய பிரதேசங்களில் சட்ட விரோதமான முறையில் நடத்திச் செல்லப்பட்ட மதுபான விற்பனை நிலையம் ஒன்று சிலாபம் குற்றத்தடுப்புப் பிரிவினரால் நேற்று அதிகாலை சுற்றி வளைக்கப்பட்டது.

இச்சுற்றிவளைப்பின் போது அவ்விடத்திலிருந்த இருவர் லுணுஓயாவிற்குள் குதித்து தப்பிச் சென்றுள்ளனர்.

எப்படியிருப்பினும் சட்ட விரோத மதுபான தயாரிப்பிற்காக வைக்கப்பட்டிருந்த் பரல்கள் 48, கோடா 83,080 உட்பட பல உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் குறிப்பிட்ட பிரதேசத்தில் சட்டவிரோத மதுபானத் தயாரிப்பில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் நபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# முன்னாள் புலிகளின் புத்தாண்டு விழா; புனர்வாழ்வு முகாமில் கோலாகலம்

(கொழும்பு)

வவுனியாவில் உள்ள புனர்வாழ்வு முகாம்களில் தற்போது பயிற்சிகளைப் பெற்று வரும் விடுதலைப்புலிகளின் ஆண் மற்றும் பெண் உறுப்பினர்களும், அவர்களின் குடும்பங்களும் கலந்துகொண்ட சித்திரைப் புதுவருட விழா நேற்றுமுன்தினம் மதியம் வவுனியா நகர மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் விடுதலைப்புலிகளின் அரசியற்துறையின் மகளீர் அணித் தலைவியாக இருந்த தமிழினியும் கலந்துகொண்டார்.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விழாவில் பிரதம அதிதியாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஜீ.எஸ். விதானகே கலந்து கொண்டார்.

புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் தர்ஷன ஹெட்டியாராச்சி உள்ளிட்ட அவரது அலுவலகத்தின் ஊழியர்களும் இதில் கலந்துகொண்டனர். விழாவில் கலந்துகொண்ட தமிழினி தற்போது இராணுவத்தின் பொறுப்பில் புனர்வாழ்வு பயிற்சிகளை பெற்று வருவதுடன்




அவர் மூன்று மாதங்களில் விடுதலை செய்யப்படவுள்ளார்.

புனர்வாழ்வுப் பயிற்சிக் காலத்தை நிறைவு செய்த மற்றும் விடுவிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் பெரும் எண்ணிக்கையிலானோர் இந்த விழாவில் கலந்து கொண்டனர்.

# பாலியல் பலாத்காரம் கடந்த ஆண்டில் உச்சம்

## ஆண்கள் மீதும் அது நடந்ததா?



(கொழும்பு)

2012 ஆம் ஆண்டு 1740 பலாதகார வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதாகவும், அதில் 1464 வழக்குகளில் 18 வயதுக்குட்பட்ட பெண்கள் பாதிக்கப்பட்டவர்களாகக் காணப்பட்டதாகவும் சட்டமா அதிபர் திணைக்கள தரவுகள் தெரிவித்தன.

அறிவிக்கப்பட்ட வல்லுறவு வழக்குகளில் 89 சதவீதமானவற்றில் பாதிக்கப்பட்டவர்களாக பெண்களே இருக்கின்றனர். 11 வீதமானவற்றில் ஆண்களும் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர்.

இவற்றில் ஒரேயொரு வழக்கைத்தவிர ஏனையவற்றில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஆண்களாக காணப்பட்டனர். 96 சதவீதமான வழக்குகளில் துஷ்பிரயோகம் செய்தவர், பாதிக்கப்பட்டவருக்கு தெரிந்தவராக இருந்துள்ளார்.

அதிகமாக இவர்கள் உறவினர்களாகவும், குடும்ப அங்கத்தவர்களாகவும், அயலவராகவும், காதலனாகவும், சமயத் தலைவர்களாகவும் மற்றும் பாடசாலை ஆசிரியராகவும் காணப்பட்டனர்.

சிறுவர்கள் பாலியல் ரீதியில் துன்புறுத்தப்பட்டதாக 1159 முறைப்பாடுகளும், சிறுவர்களுக்கு எதிரான மிகமோசமான பாலியல் துஷ்பிரயோகங்கள் 723 உம் இடம்பெற்றுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் திணைக்களம் கூறியுள்ளது.

# வன்முறை பிரச்சினையைத் தீர்க்காது அரசியல் பேச்சுக்களே அவசியம்

## இந்தியப் பத்திரிகை ஆலோசனை


(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கு யுத்தமும், வன்முறையும் தீர்வாகாது. அந்த மக்களின் நியாயமான உணர்வு புரிந்துகொள்ளப்பட வேண்டும் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வுகாண வேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைத்துக் கூடுதல் சுயாட்சி வழங்க வேண்டும். இவ்வாறு தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் தினமணி நாளேட்டில் ஜி.ராமகிருஷ்ணன் எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழ் மக்களின் துயரத்துக்கு முடிவுகட்ட வேண்டும். அங்குள்ள மக்கள் அமைதியாகவும் சம அந்தஸ்த்துடனும் வாழ வழிவகை செய்யப்பட வேண்டும் என்ற உணர்வோடு தமிழகமே குரல் கொடுத்தது. தமிழகத்தில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மாணவர்கள் களத்தில் இறங்கிப் போராடினர். இலங்கை இனப்பிரச்சினை தொடங்கி அரை நூற்றாண்டு காலம் ஆகிவிட்டது. விடுதலைப் புலிகளுக்கும் இலஙகை இராணுவத்திற்குமான ஆயுத மோதல் முடிவுக்கு வந்து நானகு ஆண்டுகள் நெருங்கும் நிலையிற் கூட இலஙகைத் தமிழர் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# உலகளாவிய குற்றம் புரிந்த இலங்கையரை மடக்கிப் பிடிக்க "இன்ரர்போல்" வலை வீச்சு



(கொழும்பு)

சர்வதேச அளவில் குற்றச் செயல்களில் ஈடுபட்ட இலங்கையர்கள் பலரைத் தேடிச் சர்வதேச பொலிஸார் தமது நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தியுள்ளனர்.

பயங்கரவாத நடவடிக்கைகள், போலிக் காணி உறுதி தயாரித்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 36 இலங்கையர்களுக்கு எதிராக சர்வதேச பிடிவிறாந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுளளது.

தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம்கள் இந்தப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். இதில் ஒருவர் சட்டத்தரணி எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்காக பணம் திரட்டியவர்கள், செலிங்கோ குழும நிறுவனத்தின் முன்னாள் தலைவர் லலித் கொதலாவலவின் மனைவி உள்ளிட்டோருக்கு எதிராக சர்வதேச பிடிவிறாந்து உத்தரவு பிறபபிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சிறைக் கைதிகளுக்கு இனி விடிவுகாலம்

(கொழும்பு)



சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளின் நீதிமன்ற நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த, சட்டமா அதிபர் திணைக்களம் இணக்கம் வெளியிட்டுள்ளது. சிறைச்சாலைகள் ஆணையாளர் சந்திரரத்ன பல்லேகம இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சிறைக் கைதிகளின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் உடனடித் தீர்வுவழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# உவரடையும் வன்னேரிக்குளப்பகுதி

## தடுக்குமாறு மக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வன்னேரிக்குளமும் அதனை அண்டிய பிரதேசங்களும் படிப்படியாக உவர் பிரதேசமாக மாற்றமடைந்து வருவதாகவும் அதனைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்களும், மக்கள் அமைப்பு பிரதிநிதிகளும் ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினரின் ஏற்பாட்டில் மாவட்டத்தின் அரச அதிபர் உள்ளிட்ட உயரதிகாரிகள் கலந்து கொண்ட உயர்மட்ட கலந்துரையாடல் வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பழைய குடியிருப்புகளில் ஒன்றான வன்னேரிக்குள பிரதேசத்தின் பல பகுதிகள் படிப்படியாக உவர் பிரதேசமாக மாற்றமடைந்துவருவதாகவும் இதனால் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பிரதேச மக்களினால் சுட்டிக்காட்டப்பட்டது.



இதன்போது கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் வன்னியில் பல பிரதேசங்கள் உவராக மாறி வருகின்றமைக்கு மக்களின் இடப்பெயர்வும், அதனால் ஏற்பட்ட விளைவுகளான நிலங்களின் பராமரிப்பு இன்மை, தொடர்ச்சியாக சில வருடங்கள் விவசாய நடவடிக்கைகள் இல்லாமை போன்ற பல்வேறு காரணங்களால் கடந்த இருபது வருடங்களுக்குள் பல பிரதேசங்கள் உவராக மாறியுள்ளன. எனவேதான் தற்போதைய நிலையில் உவர்த் தடுப்பு நடவடிக்கை என்பது மிக மிக அவசயமான ஒன்றாகக் கருதி இன்றைய இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது.

மேலும் பல பிரதேசங்கள் உவராக மாற்றமடையும் முன்னர் உவர்த் தடுப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்க வேண்டும் அதற்காக நாம் பல வழிமுறைகளைப் பின்பற்றவேண்டியுள்ளது என்றார். குறிப்பாக சிறு சிறு குளங்களை உருவாக்கி நன்நீரை பல இடங்களில் சேமித்தல், கடல்நீர் தரையை நோக்கி உட்பிரவேசிக்கின்ற இடங்களில் தடுப்பு அணைகள் அமைத்தல், உவர்த் தன்மை கொண்ட நிலங்களில் உவர்த்தன்மையைக் குறைக்கின்ற வகையிலான விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் உள்ளிட்ட பல்வேறு வழிகள் துறைசார்ந்தவர்களால் முன்மொழியப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச சபை உறுபபினர் சபாநாயகம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன் ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## கட்டாக்காலி நாய்கள்; விபத்துக்கள் ஏற்படும் அபாயம்

பருத்தித்துறை கொடிகாமம் பிரதான வீதியில் ஆங்காங்கே படுத்துறங்கும் தெருநாய்கள் வீதியில் நடை பயணம் செய்வோர் மற்றும் சைக்கிள் பயணிகளை துரத்திச் செல்வதைக்காணமுடிகிறது.

இப்பிரதேசத்தில் தற்போது நாய்களின் தொல்லை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளஅதேவேளை, இதனால் வீதியில் பயணிப்போர் விபத்துக்களை சந்திக்க நேரிடுகின்றது. எனவே இதற்குப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் காலம் தாழ்த்தாது நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமென பிரயாணிகள் மற்றும் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (150)

# இரு பாலியல் துஷ்பிரயோகங்கள் யாழில் கடந்த வாரம் பதிவு

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரம் யாழ்.மாவட்டத்தில் இரண்டு பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் நடைபெற்றிருப்பதாக யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மொகமட்ஜெப்ரி தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டே அவர் இத்தகவலைத்தெரிவித்தார்.

கடந்த 2012 பங்குனி மாதம் பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவில் நடைபெற்ற பாலியல் துஷ்பிரயோக சம்பவத்தில் 14 வயதுச் சிறுமி ஒருவரை 18 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கியது தொடர்பில் நேற்றுமுன்தினம் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த அவர் முறைப்பாட்டுக்காரர் அல்வாய் வடக்குப்பகுதியைச் சேர்ந்தவர் எனவும் சந்தேக நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், இந்தச் சம்பவத்தின் சந்தேகநபர் பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கப்பட்ட சிறுமியின் உறவுக்காரர் எனவும் தெரியவருகின்றது. இதே வேளை கடந்த வாரம் இடம்பெற்ற மற்றைய சம்பவத்தில் 19 வயதுடைய இளைஞர் ஒருவர் நாவற்குழிப்பிரதேசத்தில் 14 வயதுச் சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கியுள்ளதாக கடந்த 12 ஆம் திகதி சாவகச்சேரி பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தின் சந்தேகநபர் சங்கானையைச் சேர்ந்தவர் எனவும் அவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டிருப்பதாகவும், யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிந்துள்ளார். மேலும் இந்தச் சம்பவத்தின் முறைப்பாட்டுக்காரர் நாவற்குழியைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (பா)

## பொய்யுள்



மூலபாரதி

### தனி நாடு!

கடந்த நாட்டில் தனிநாடு
காட்டு கின்றவர் பனியோடு
தொடர்ந்து டெல்கி வாய்பாடு
தொட்டறி முடிந்திடா மேல்நாடு

வானம் பூமி இரண்டிற்கும்
வெளியா மிடையில் மிதக்கின்ற
கானல் நீராய் கூட்டமைப்பு
காட்டு கின்ற இடைநாடு!

ஐம்பது ஆண்டுகள் பேய்க்காட்டி
ஐயம் ஒன்றைத் தமிழ்மக்கள்
இம்மண் தன்னே அனுபவிக்க
இவர்கள் காட்டும் பூஜ்ஜியமாம்!

# துப்புரவுப்பணி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள ஆதனங்கள், விடுதிகள், வீடுகள் பொது இடங்கள், வங்கிகள் மற்றும் தனியார் நிறுவனங்களில் துப்புரவுப்பணிகள் மேற்கொள்ள விரும்பும் வரியிறுப்பாளர்கள் தொடர்பு கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மே மாதம் தொடக்கம் மாநகரசபையின் பொதுச்சுகாதாரப் பொறியியற் பிரிவினருடன் 021 222 2275 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு நியாயமான கட்டண அடிப்படையில் குறித்த வேலைகளை நிறைவேற்றிப் பயன்பெற முடியும் என யாழ்.மாநகரசபை செயலாளர் அறிவித்துள்ளார்.

# முரசின் இன்றைய பலன்

(21.04.2013 – ஞாயிற்றுக்கிழமை)

விஜய வருஷம் சித்திரை மாதம் 08 ஆம் திகதி.
நட்சத்திரம் மகம் மரணயோகம் பிற்பகல் 01.21 வரை. திதி தசமி.
காலை 06.16 வரை. இராகுகாலம் 04.31 - 06.01 வரை.
சுபநேரம் 09.01 - 10.31 வரை.


சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | உங்கள் செயல்திறன் மிகுந்திருக்கும். வெற்றி பெற கிடைக்கும் வாய்ப்பை, கவனமுடன் பயன்படுத்துவீர்கள். தொழில், தொடர்பு பலம் பெறும். பணவரவு திருப்திகரம். நண்பருடன் மகிழ்வு. உடல் குறைகள் தீரும். விருந்துண்டு மகிழ்வீர்கள். |
| ரிஷபம் | சிலரது பேச்சு உங்களை சங்கடப்படுத்தலாம். போட்டி நெருக்கடி இருக்கும். திட்டம் நிறைவேறும் முன், முடிவைப் பற்றி எண்ணவேண்டாம். தொழில், சராசரி நிலை. வரவை விட செலவு கூடும். குடும்பம் அனுசரணை. ஓய்வு, உடல் நலம் காக்கும். |
| மிதுனம் | சிறு செயலையும் கவனமுடன் செய்து நற்பலன் பெறுவீர்கள். பொது விடயங்களில் ஆர்வம். சமூகத்தில் மதிப்பு உயரும். தொழிலில் குறுக்கிடும் சிரமம், சரி செய்வீர்கள். வரவு எதிர்பார்த்த அளவில் இருக்கும். பயணத்தினால் இலாபமொன்று வரும். |
| கடகம் | உண்மை, நேர்மை பின்பற்றுவீர்கள். நல்லவர்களின் அறிமுகம் கிடைக்கும். அதிக உழைப்பால் தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம். குடும்பத்தேவைக்கு தாராள செலவு செய்வீர்கள். உறவினர் உங்களைக் கொண்டாடுவர். உடல் குறைகள் தீரும். |
| சிம்மம் | செயல்களில் சமயோசிதம் மிளிரும். எதிர்பார்த்த பலன் கிடைக்கும். தொழில், வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும். உபரி பணவரவில் சேமிப்பீர்கள். உத்தியோகத்தர்களுக்கு, சலுகையும் பதவி உயர்வும் கிடைக்கும். அறப்பணிகளில் ஈடுபாடு. சமூகத்தில் நன்மதிப்பு. |
| கன்னி | மனதில் இருந்த குழப்பங்கள் அகலும். எதிர்மனப்பாங்கு உள்ளவரை விலக்குவீர்கள். தொழில், உங்கள் முயற்சிக்கு நன்மை கிடைக்கும். உபரி வரவில் மகிழ்வீர்கள். உங்கள் உதவி மனப்பான்மைக்கு பாராட்டுக் கிடைக்கும். போக்குவரத்தில் கவனம். |
| துலாம் | பகைமையாளர்களால் நெருக்குதல். விட்டுக் கொடுக்க மாட்டீர்கள். மாற்று உபாயத்துடன் செயற்படுவீர்கள். தொழில், தாமத கதியில் இயங்கும். சிறு பணக்கடன். எதிர்பார்த்த ஒரு வேலை முடிவதில் தடங்கல். குடும்பத்தில் சச்சரவு வந்து விலகும். |
| விருச்சிகம் | உங்கள் தனித் திறமையால் எண்ணியது முடிப்பீர்கள். தொழில், வியத்தகு முன்னேற்றம் பெறும். அதிக பணவரவால், மிகுந்த சந்தோஷம். வழிபாடு நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தர்களுக்கு பதவி அனுகூலம். தொட்டது துலங்கும். |
| தனுசு | நண்பர், உறவினரின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்கள். வெற்றிகள் பெற அனுகூல சூழ்நிலை. தொழில், புதிய வளர்ச்சி பரிமாணம் ஏற்படும். பணவரவும், நன்மையும் கூடும். முக்கிய வீட்டுப் பொருள் வாங்குவீர்கள். இல்லத்தில் சந்தோஷம் நிறையும். |
| மகரம் | மனதில் இனம் புரியாத வருத்தம் ஏற்படலாம். நிதானமும், பொறுப்புணர்வும் உங்களை முன்னேற்றும். தொழிலில் உள்ள அனுகூலம் பாதுகாப்பது நல்லது. சிக்கனம், சிரமம் தவிர்க்க உதவும். இசையில், மனம் இலகுவாகும். குடும்பத்தினர் அன்பு. |
| கும்பம் | அறிவாற்றல் சிறந்து, பிறரிடம் நன்மதிப்புப் பெறுவீர்கள். திட்டமிட்ட பணி இலகுவாக நிறைவேறும். தொழில் சிறக்க, எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தாராள பணவரவு. உத்தியோகத்தர்களுக்கு, சலுகையும் உயர்வும். வீடு, வாகன மாற்றுப் பலன். |
| மீனம் | எதிர்ப்பாளரின் கெடுதல் முயற்சி, பலமிழந்து போகும். மனதில் இருந்த குழப்பம் சரியாகும். தொழில் வளர அதிக வேலை. பணவரவு திருப்திகரம். மருத்துவ சிகிச்சை எடுக்க நேரும். இல்லறத்துணையின் அன்பினால் இன்னல் கடப்பீர்கள். |

# மன்மோகன் சிங்கின் ஆலோசனைப்படியே

# '2ஜி' விவகாரம் இடம்பெற்றது

## முன்னாள் அமைச்சர் ராஜா பகிரங்க அறிவிப்பு



(புதுடில்லி)

2ஜி விவகாரத்தில் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு தெரிந்தே அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாகவும், அவரின் ஆலோசனைபடியே அனைத்தும் நடந்ததாகவும் முன்னாள் மத்திய தொலைத்தொடர்பு துறை அமைச்சர் அ.ராஜா பகிரங்க தகவல் ஒன்றை தற்போது தெரிவித்துள்ளார்.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் பிரதமர் மன்மோகன் சிங் எந்த தவறும் செய்யவில்லை என ஜெ.பி.சி.அறிக்கை சமர்பித்த சில நாட்களே ஆன நிலையில், இவ்வழக்கில் முக்கிய குற்றவாளியாக கருதப்படும் முன்னாள் அமைச்சர் ராஜா பிரதமர் மீது கூறி உள்ள குற்றச்சாட்டு அனைவரையும் அதிர்ச்சியிலும், குழப்பத்திலும் ஆழ்த்தி உள்ளது. 2 ஜி வழக்கில் நீதிமன்றக் கூட்டுக் குழு முன் தவறான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும், தொலைத்தொடர்பு உரிமம் ஒதுக்கீட்டில் பிரதமரின் கீழ் தான் நான் பணியாற்றி உள்ளேன் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது எனவும் ராஜா தெரிவித்துள்ளார். இந்த விவகாரத்தில் பிரதமரின் ஆலோசனையின்படியே தான் செயற்பட்டதாகவும், இதை அனைவரிடமும் தான் தெரிவித்துள்ளதாகவும் ராஜா தெரிவித்துள்ளார்.

பிரதமர் மீதான ராஜாவின் குற்றச்சாட்டை ஆமோதிக்கும் விதமாக தி.மு.க. தலைவர் கருணாநிதியும், பிரதமரின் வழிநடத்தல் இல்லாமல் அமைச்சர் ஒருவர் எவ்வாறு செயல்பட முடியும் என கேள்வி எழுப்பி உள்ளார். இந்நிலையில் வழக்கில் அறிக்கை தொடர்பான ஜெ.பி.சி.யின் முக்கிய கூட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெற உள்ளது. இதனால் ஐக்கிய முற்போக்கு கூட்டணிக்கு மறை முகமாக ஆதரவு அளிக்கும் தி.மு.க இடையேயான பிளவு மேலும் அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாஜ்பாய் ஆட்சியின் போது புலம்பெயர்ந்த தொலைத் தொடர்பு வீரர்களுக்கு அனுமதி வழங்குவதில் ரூ.42,080 கோடி வருவாய் மோசடி நடைபெறறதாக காங்கிரஸ் குற்றம்சாட்டி வந்தது. இந்நிலையில் 2ஜி விவகாரத்தில் ராஜாவின் கருத்து தொடர்பாக பேசிய பா.ஜ.தலைவர் ராஜ்நாத் சிங், 2ஜி வழக்கில் பிரதமர் மற்றும் நிதியமைச்சருக்கு தொடர்பு இருப்பதையே ராஜாவின் கருத்து காட்டுவதாக தெரிவித்துள்ளார். ஜெ.பி.சி. தலைவராக இருக்கும் சாக்கோவே அறிக்கை தொடர்பான விவரங்கள் கசியக் காரணம் என பா.ஜ.மற்றும் இடதுசாரி கட்சிகள் குற்றம்சாட்டி உள்ளன. இது நாடாளுமன்ற நடவடிக்கைக்கு எதிரானது என பா.ஜ. தலைவர் ரவிசங்கர் பிரசாத்தும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர் சீத்தாராம் யெச்சூரி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.



ராமநவமியையொட்டி, தலைநகர் டில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொள்ள மோட்டார் சைக்கிளில் விரையும் ராமர் மற்றும் அர்ஜூனர் வேடம் தரித்த கலைஞர்கள்.

# 2006இல் மத உணர்வைப் புண்படுத்திய

# கருணாநிதிக்கு நீதிமன்றம் அழைப்பாணை

மத உணர்வைப் புண்படுத்திய வழக்கில் நீதிமன்றம் கருணாநிதிக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளது.


2001ஆம் ஆண்டு தமிழக அரசு மதமாற்ற தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தது. இதைக் கண்டித்து எழும்பூரில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் சிறுபான்மை கூட்டமைப்பு சார்பில் பொதுக்கூட்டம் நடந்தது.

இந்தக் கூட்டத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதி, இந்து என்றால் திருடன் என்று அர்த்தம் என்று பேசினார். இதை தொடர்ந்து மத உணர்வை புண்



படுத்தியதாக கருணாநிதி மீது நடவடிக்கை எடுக்கக் கோரி மாம்பலம் பொலிஸ் நிலையத்தில் விஷ்ணு என்பவர் புகார் கொடுத்தார். நடவடிக்கை எடுக்கப்படாததால் அவர் சென்னை நீதிமன்றில் மனு தாக்கல் செய்தார்.

நீதிமன்ற உத்தரவின் பேரில் கருணாநிதி மீது மாம் பலம் பொலிஸார் 2006ஆம் ஆண்டு வழக்குப் பதிவு செய்தனர். இந்த நிலையில் நீதிமன்றில், விஷ்ணு மீண்டும் ஒரு மனு தாக்கல் செய்துள்ளார். அதில் தி.மு.க. தலைவர் கருணாநிதி மீது பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கில் விசாரணை நடை பெறவில்லை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனு கொடுக்கப் பட்டும் பொலிஸார் பதில் அளிக்கவில்லை. எனவே கருணாநிதி மீது பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணையை விசாரிக்க பொலிஸாருக்கு உத்தரவிட வேண்டும் என்று கூறப்பட்டது. நீதிபதி கிருபாகரன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது அரசு தரப்பில் குற்றவியல் தலைமை வக்கீல் சண்முக வேலாயுதம் ஆஜரானார். அவர் கூறும் போது தி.மு.க. தலைவர் கருணாநிதி மீது பதிவு செய்யயப்பட்டுள்ள வழக்கை புகார் தாரருக்கு கடிதம் அனுப்பாமலேயே 2006ஆம் ஆண்டு பொலிஸார் முடித்து வைத்து நடவடிக்கை எடுத்து விட்டதாக தெரிவித்தார். நீதிபதி கிருபாகரன் இந்த மனுவுக்கு பதில் மனு தாக்கல் செய்யக் கருணாநிதிக்கு கடிதம் அனுப்ப வேண்டும். பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கு ஆவணங்களை மாம்பலம் பொலிஸார் நீதிமன்றில் தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டார்.



டில்லியில் பா.ஜ. மூத்த தலைவர் அத்வானியை, அவரது இல்லத்தில் ஜப்பான் தூதர் டகேஷியாகி சந்தித்துப் பேசினார்.

# எதிர்க்கட்சிகளை சமாளிப்பது எப்படி?

# மூத்ததலைவர்களுடன் சோனியா ஆலோசனை

(புதுடில்லி)

வரவு செலவுத்திட்ட கூட்டத் தொடரின், இரண்டாம் கட்ட கூட்டம், அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளது. அடுத்து, எதிர்க் கட்சிகளின் சவால்களை சந்திப்பது குறித்து, காங்கிரஸ் தலைவர், சோனியா, கட்சியின் மூத்த தலைவர்களுடன், நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தினார்.

வரவுசெலவுக் கூட்டத் தொடரின், முதல் பாதி, கடந்த மாதம், 22ஆம் திகதியுடன் முடிந்தது. இரண்டாம் கட்ட கூட்டத் தொடர், அடுத்த வாரம் ஆரம்பமாகிறது. இந்தச் சூழ்நிலையில், ஸ்பெக்ட்ரம் ஊழல் தொடர்பான, நாடாளுமன்றக் கூட்டுக் குழுவின், வரைவு அறிக்கை, சமீபத்தில் வெளியானது. இதில், 'ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில், பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும், நிதி அமைச்சர், சிதம்பரத்துக்கும், எந்தத் தொடர்பும் இல்லை' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதவிர, நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு செய்யப்பட்டதில் நடந்த முறைகேடு குறித்த, சி.பி.ஐ. விசாரணையில், மத்திய அரசு, தலையிட்டதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்த விவகாரங்களை எழுப்பி, வரவுசெலவுக் கூட்டத் தொடரில், அமளியை ஏற்படுத்த, எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள் ளன. எதிர்க்கட்சிகளின் இந்தச் சவால்களை சந்திப்பது குறித்து, காங்கிரஸ் தலைவர், சோனியா, கட்சியின் மூத்த தலைவர்களுடன், ஆலோசனை நடத்தினார் இராணுவ அமைச்சர், அந்தோணி, நாடாளுமன்ற விவகார அமைச்சர், கமல் நாத், உள்துறை அமைச்சர், சுஷில் குமார் ஷிண்டே, காங்கிரஸ் தலைவரின் அரசியல் ஆலோசகர், அகமது படேல், கிராமப்புற மேம்பாடு அமைச்சர், ஜெய்ராம் ரமேஷ் உள்ளிட்டோர், இந்த ஆலோசனையில் பங்கேற்றனர். இதில், எதிர்க்கட்சிகளை சமாளித்து, வரவுசெலவுத்திட்டக் கூட்டத் தொடரை சுமுகமாக நடத்துவது குறித்து, ஆலோசிக்கப்பட்டதாக, காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியச் செய்திகள்

## வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : கே. ஆருஜன்

முகவரி : அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

அகவை 3 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..................................

முகவரி : ..................................

பிறந்த ஆண்டு : ..................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.



கைதடி வடக்கு நவபுரம் நவசக்தி முன்பள்ளியின் விளையாட்டு விழா அண்மையில் சிறப்புற நடைபெற்றது. இதில் சிறார்களின் வண்ணமயமான விளையாட்டு நிகழ்வுகள் பல இடம்பெற்றன. இதில் தென்மராட்சி சிறுவர் கழகப் பொறுப்பாளர் ஆர். மயூரன் சிறார்களுக்கு சான்றிதழ் வழங்குவதையும், உடற்பயிற்சி நிகழ்வில் கலந்து கொண்ட சிறார்கள் குழு, முன்பள்ளி ஆசிரியர்களான எம். தாரணி, எம். சுதர்மினா ஆகியோருடன் நிற்பதைக் காணலாம். (அ.னி)

# புத்தாண்டு விளையாட்டில் புனர்வாழ்வுப் போராளிகள்



(வவுனியா)

புனர்வாழ்வு பெற்று வரும் முன்னாள் போராளிகளுக்கான சித்திரைப்புத்தாண்டு சிறப்பு விளையாட்டு நிகழ்வுகள் நேற்று முன்தினம் வவுனியா நகரசபை மைதானத்தில் சிறப்புற இடம்பெற்றன.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இவ் விளையாட்டு நிகழ்வில் மருதமடு, கந்தக்காடு, சேனபுர மற்றும் பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையங்களில் இருந்து புனர்வாழ்வு பெறும் ஆண், பெண், முன்னாள் போராளிகள் கலந்து கொண்டன.

முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமான இந் நிகழ்வில் பல்வேறு விளையாட்டுகளிலும் புனர்வாழ்வு பெறுவோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டதுடன் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். இதன்போது புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் ஜி.எஸ். விதானகே, புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் தர்சன் கெட்டியாராச்சி, வவுனியா நகரசபையின் தலைவர் ஐ. கனகையா உட்பட பலரும் கலந்து கொண்டனர். (160)

## சுபாதீஸ், றொகான், றஜீவ்குமார் சிறப்பான செயற்பாடு

# யாழ். சென்றல் இலகு வெற்றி

(கொக்குவில்)

சுபாதீஸ், றொகான், றஜீவ்குமார் ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் யாழ். சென்றல் அணி நான்கு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரின் ஆட்டமொன்று கடந்த சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் யாழ். சென்றல் அணியும், சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். சென்றல் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி சுபாதீஸ், றொகான் ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும், மயூரன், சாள்ஸ் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் சென்றலைட்ஸ்சொக்ஸ் அணி 27.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மயூரன் ஆட்டமிழக்காது 32, சாள்ஸ் 29, பிரசாத் 25, கனிஸ்ரன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சுபாதீஸ், றொகான் தலா மூன்று, றஜீவ்குமார், யசிந்தன் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 146 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். சென்றல் அணி றஜீவ்குமார், கபில்தேவ் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் இலகுவாக வெற்றிபெற்றது. இறுதியில் யாழ். சென்றல் அணி 26.1 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் றஜீவ்குமார் ஆட்டமிழக்காது 40, கபில்தேவ் 32, பாவேந்திரா 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சாள்ஸ், ஜெனோசன் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இவ்வெற்றியின் மூலம் யாழ். சென்றல் அணி இரண்டாவது சுற்றுக்குத் தகுதிபெற்றுள்ளது.

இதேவேளை, இன்றைய தினம் மாலை யாழ். கொக்குவில் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றவுள்ள இரண்டாவது சுற்று ஆட்டத்தில் யாழ். சென்றல் அணி, கொக்குவில் கே.சி.சி.சி. அணியை எதிர்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (07)

# விளையாட்டு விழா

(ஆனைக்கோட்டை)

வலி. தென்மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல 2.00 மணிக்கு பிரதேச செயலர் எஸ். முரளிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் மு. சந்திரகுமார், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி எஸ். சிவானந்தராஜா, கௌரவ விருந்தினர்களாக மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் எஸ். சிவனேஸ்வரன், யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி ஆர்.எம். மோகனதாஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இப்போட்டி நிகழ்வில் விளையாட்டு ஆர்வலர்கள், இரசிகர்கள், நலன்விரும்பிகள் என அனைவரையும் கலந்துகொண்டுபோட்டியாளர்களுக்கு உற்சாகமூட்டுமாறு கேட்டுக் கொள்கின்றனர். (104, 54)

# பிரதேச மட்ட மென்பந்து மட்டுவில் கண்ணகை சம்பியன்

(மட்டுவில்)

தென்மராட்சிப் பிரதேச அணிகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டியில் மட்டுவில் கண்ணகை அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தென்மராட்சிப் பிரதேச பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான பெருவிளையாட்டுப்போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் மென்பந்து கிரிக்கெட் போட்டி அண்மையில் மட்டுவில் கண்ணகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் மட்டுவில் கண்ணகை அணியும், சங்கத்தானை ஸ்ரீமுருகன் அணியும் மோதின. 10 ஓவர்களைக் கொண்ட இப்போட்டி அணிக்கு 11 பேரைக் கொண்டதாக இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மட்டுவில் கண்ணகை அணி பத்து ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வாகிசன் 20, கோபி 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சயந்தன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 54 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சங்கத்தானை ஸ்ரீமுருகன் அணி, கௌரிகனின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் சங்கத்தானை ஸ்ரீமுருகன் அணி 8.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 38 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் அகிலன் மட்டுமே 13 ஓட்டங்களைப் பெற்றார். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் கௌரிகன் நான்கு, கோபி இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இவ்வெற்றியின் மூலம் மட்டுவில் கண்ணகை அணி தென்மராட்சி பிரதேச மட்ட சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இதேவேளை, கால்பந்து, கரப்பந்து ஆகிய போட்டிகளின் இறுதிப் போட்டிகள் அடுத்த மாத முற்பகுதியில் நடைபெறும் என பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (118)



# போராட்டமும் போதைகளும்

தமிழ்நாட்டில் நடந்து முடிந்திருக்கும் மாணவர் போராட்டம் பற்றி பல்வேறு விவாதங்கள், சர்ச்சைகள் தொடர்ந்து நடந்த வண்ணமுள்ளன.

போராட்டம் ஒரு பெரும் எழுச்சியின் அடையாளம்; இல்லையில்லை - சின்ன அளவில் நடந்ததை தமிழ்த் தேசிய அமைப்புகள், புலிகள் ஆதரவு அமைப்புகள் பின்னின்று நடத்தி சேனல்களின் உ தவியுடன் ஊதிப் பெரிதாக்கிக் காட்டிய போராட்டம்தான் இது; சிறுவன் பாலச்சந்திரனின் படுகொலை பற்றிய படங்கள் கிளறிவிட்ட அடிப்படை மனித நேய உணர்ச்சிகளுக்கப்பால் மாணவர்களுக்கு உலக அரசியல் தெரியவில்லை, உள்ளூர் அரசியலும் தெரியவில்லை, உணர்ச்சி மட்டுமே இருக்கிறது; ஈழத்தமிழர்களின் முதல் தேவை அங்கே இராணுவ நீக்கமும், வாழ்வாதார வாய்ப்புகளும், படிப்படியான அரசியல் உரிமைகளுமே தவிர, ராஜபக்ஷவைத் தண்டிக்கக் கூக்குரலிடுவதால் ஒரு பயனுமில்லை; புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்களின் நலன் வேறு, ஈழத்திலேயே வாழும் தமிழர்களின் நலன் வேறு; இன்னொரு ஆயுதப் போராட்டம்தான் ஈழத்தைப் பெற்றுத்தரும்; இல்லையில்லை பொது வாக்கெடுப்பின் மூலமே அற வழியில் ஈழம் பெறமுடியும்; இரண்டும் சாத்தியமில்லை - தனி ஈழம் அமைய ஒருபோதும் அமெரிக்கா, சீனா, இந்தியா ஆகிய மூன்று நாடுகளும் அனுமதிக்கப்போவதே இல்லை; ராஜபக்ஷ அரசின் மூலம் தங்கள் புவி அரசியல் இலாபங்களுக்காக மூன்று நாடுகளும் காய் நகர்த்துவதைத் தவிர வேறேதும் நடக்கப்போவதில்லை; இல்லையில்லை - மாணவர்கள் எழுச்சி அடுத்த கட்டத்தில் இந்திய ஒருமைப்பாட்டையே கேள்விக்குள்ளாக்கும் வலிமை உடையது - என்று பலப்பல பார்வைகள் இந்த விவாதங்களில் வெளிப்படுகின்றன.

இவை எதையும் என்னால் முழுமையாக ஏற்கவும் முடியாது; முழுமையாக நிராகரிக்கவும் முடியாது.

கலைஞர் கருணாநிதியே புலம்பியது போல தி.மு.க.வை மத்திய ஆட்சியிலிருந்து விலகச் செய்ததைத் தவிர வேறு எந்த நன்மையும் இந்தப் போராட்டத்தால் ஈழத்தமிழர்களுக்கு ஏற்பட்டுவிடவில்லை. போர் சமயத்தில் இப்படிப்பட்ட நெருக்கடியைக் கொடுத்து போர் நிறுத்தம் செய்ய வைத்து கொஞ்சம் உயிர்களையேனும் காப்பாற்றியிருக்கக்கூடிய கடமையை செய்யத் தவறியதற்காக இப்போது தி.மு.கவுக்கு தரப்பட்ட தண்டனையாக இந்த ஆட்சி விலகல் நிர்ப்பந்தத்தைக் கணித்து ஆறுதலடையலாம். ஆனால் ராஜபக்ஷவுக்கோ, விடுதலைப் புலிகளுக்கோ அவரவர் போர்க் குற்றங்களுக்காக, அரசியல் பிழைகளுக்காக இப்படித் தண்டனை அளிப்பது அவ்வளவு எளிதல்ல.

தமிழக மாணவர்களின் போராட்டத்தின் சக்தி என்பது தி.மு.க.வை மத்திய அரசிலிருந்து பதவி விலக வைக்கும் அளவுக்குத்தான் உள்ளது.

மாணவர்கள் ஏன் இதே உந்துதலுடன் அண்மைக்காலத்தில் வேறு பிரச்சினைகளில் போராடவில்லை என்ற விமர்சனங்களும் எழுந்துள்ளன. காவிரி, முல்லைப் பெரியாறு, கூடங்குளம் அணு உலை எதிர்ப்பு, தர்மபுரி சாதிவெறித் தாக்குதல் போன்றவற்றில் இதே வீரியத்துடன் ஏன் போராடவரவில்லை என்று கேட்கப்படுகிறது. ஒரே காரணம்தான். அவை எதுவும் பாலச்சந்திரன் முகம் எழுப்பும் உணர்ச்சிகளை எளிதில் எழுப்பவல்லவை அல்ல. அவை எதுவும் உணர்ச்சி அடிப்படையில் போராடக் கூடிய பிரச்சினைகளும் அல்ல. அறிவார்ந்த தெளிவின் அடிப்படையில் மட்டுமே போராடப் படக் கூடியவை.

இப்போது நடந்த மாணவர் போராட்டம் போல 1965 மொழித் திணிப்பு எதிர்ப்புக்குப் பின்னர் இதுவரை நடந்ததில்லை என்றும் ஒரு கருத்து பேசப்படுகிறது. இவையெல்லாம் மிகைக் கருத்துகளே யாகும். இடதுசாரி இயக்கங்களில், கட்சிகளில் தம்மை இணைத்துக் கொண்ட மாணவர்கள் எழுபதுகளிலும், எண்பதுகளிலும், தொண்ணூறுகளிலும், இரண்டாயிரங்களிலும் பல்வேறு பிரச்சினைகளில் போராடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். கடைசியாகக் கூட சமச்சீர் கல்வியின் சுணக்கம் ஏற்பட்டதை எதிர்த்தும், பள்ளிக்கட்டண விஷயத்திலும் போராடிக் கொண்டுதான் இருந்தார்கள்.

கட்சிகளைச் சாராமல் மாணவர்கள் போராடுவதாகக் காட்ட விரும்பும் மீடியா, அரசியல் இயக்கங்கள் சார்ந்த மாணவர்கள், இளைஞர்கள் போராட்டங்களை எப்போதுமே பெரிதாக சித்திரிப்பதில்லை. எல்லா அரசியல் கட்சியும் மோசம் என்ற பார்வையை விரும்பும் மீடியா அதை ஊக்குவிக்க வசதியாக அண்மைய மாணவர் போராட்டம் வடிவமைத்துக் காட்டியது என்பதும், இதைத் தங்களுக்கு வசதியான தந்திரோபாயமாகக் கருதிய அரசியல் சக்திகள் முகம் காட்டாமல் மாணவர்களுக்குப் பின் நின்றன என்பதும் மீடியா- அரசியல் ஆய்வுக்கான விஷயங்கள்.

மாணவர்கள் படிக்கும் வயதில் படித்து அறிவையும் திறமைகளையும் வளர்த்துக் கொள்வதைத் தவிர வேறு எதிலும் கவனத்தை சிதறவிடக் கூடாது. அப்போதுதான் பின்னாளில் எந்தத் துறையிலும் எந்தப் பிரச்சினையையும் எதிர்கொண்டு தீர்க்க அவர்களால் இயலும் என்று கருதுவோர் உண்டு. மாணவப் பருவத்தில் உலகில் அரசியலில் சமூகத்தில் என்ன நடக்கிறது என்று அறிந்துவைத்துக் கொள்ளவேண்டும்; ஆனால், ஈடுபடக் கூடாது என்பதே அந்தப் பார்வை.


அறிந்து வைத்துக் கொள்வது என்பதே இன்று பெரும் சிக்கலாக இருக்கிறது. மாணவர்களை, இளைஞர்களை அறியாமையில் வைத்திருப்பதையே அதிகாரத்தில் இருக்கும் எல்லோரும், குடும்பம் முதல் அரசு வரை விரும்புகிறார்கள். பிழைக்கும் வழி மட்டும் தெரிந்தால் போதுமென்கிறது குடும்பம். உழைக்கும் வழி மட்டும் தெரிந்துகொள் என்கின்றன அரசு, தனியார் நிர்வாகங்கள்.

ஈழத் தமிழர்களின் இன்னலை தமிழக மாணவர்களால் துடைக்க முடியுமா என்பதை விடப் பெருங்கவலையாக எனக்கு இருப்பது, தமிழக இளைஞர்களை, மாணவர்களை மதுவிலிருந்து காப்பாற்றமுடியுமா என்பதுதான்.

சினிமா, டி.வி போதைகள் தவிர மது போதையும் மாணவர்கள் மத்தியில் வேகமாகப் பரவிக் கொண்டிருக்கிறது. மது குடிக்க ஆரம்பிக்கும் வயது 12, 13 ஆகிக் கொண்டிருக்கிறது. சாலை விபத்துகள், குடும்பச் சீரழிவு, உழைக்கும் திறன் நலிவு என்று பல கோணங்களில் மது இன்று பாதித்துக் கொண்டிருக்கிறது.

மாணவர்கள் படிக்கிற காலத்தில் போராடுவது, படித்து முடித்தபின் போராடுவது எதுவானாலும் சரி, சுயசிந்தனையும் தெளிவும் இருந்தால் தான் இரண்டும் சாத்தியம். இரண்டையும் அழிக்கும் மது மாணவர்கள் மத்தியில் பெருகிக் கொண்டிருக்கிறது. போராட்டங்களில் பங்கு பெறும் மாணவர் எண்ணிக்கையை விட, மது குடிக்கும் மாணவர் எண்ணிக்கைதான் அதிகம் என்பது கசப்பான உண்மை.

- ஞாநி கட்டுரையிலிருந்து.



# திருந்திய சோம்பேறி

ஒரு தந்தைக்கு ஒரு சோம்பேறி மகன் இருந்தான். அவனை எவ்வளவோ முயற்சி செய்தும் கொஞ்சம்கூடத் திருத்த முடியவில்லை.


அவனுக்குத் தனியாக ஒரு செக்கும் இரண்டு மாடுகளும் வாங்கிக் கொடுத்து, எண்ணெய் தயாரித்துப் பிழைத்துக் கொள் என்று அவனுடைய தந்தை சொன்னார்.

அந்தச் சோம்பேறி மகன், அதிலேயும் திருந்தவில்லை.

மாடுகளை செக்கில் பூட்டியவுடன், அவற்றின் கொம்புகளில் சலங்கையைக் கட்டி வைத்தான். மாடுகள் சுற்றி வரும்போதெல்லாம் அந்த சலங்கை சத்தம் கேட்கும். மாடுகள் நின்றுவிட்டால் சலங்கை சத்தமும் நின்றுவிடும். அப்போது மட்டும் கவனித்து மாடுகளை ஓட்டினால் போதும். அதுவரை நிம்மதியாக ஓரிடத்தில் படுத்து உறங்கலாம் என்று எண்ணி, அதைச் செய்து முடித்தான். பிறகு அங்கேயே படுத்துத் தூங்கிப் போனான். இப்படியே சில நாட்கள் சென்றன.

ஒருநாள், திடீரென்று தூக்கத்திலிருந்து விழித்தவன் செக்கை கவனித்தான். செக்கில் எண்ணெய் ஆட்டப்படவே இல்லை. போட்ட எள் அப்படியே இருந்தது. அருகில் சென்று பார்த்தான். உடனே மாடுகள் நகர ஆரம்பித்தன.

"இவ்வளவு நேரம் சலங்கைச் சத்தம் கேட்டுக் கொண்டிருந்ததே எப்படி? அப்படியானால் மாடுகள் ஓடிக்கொண்டுதானே இருந்திருக்க வேண்டும்? எப்படி செக்கில் எண்ணெய் ஆட்டப்படாமலேயே இருக்கிறது" என்று யோசித்தவன், மறைவாக ஓரிடத்தில் போய் நின்று கொண்டு செக்கையும் மாடுகளையும் கவனித்தான்.



சலங்கைச் சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது. ஆனால், மாடுகள் நகரவே இல்லை. தங்கள் தலைகளை மட்டும் ஆட்டி சலங்கையை ஒலிக்கச் செய்துகொண்டிருந்தன.

சோம்பேறியிடம் பழகிய மாடுகள் அல்லவா அவை? அவைகளும் அவனைப் போலவே மாறிப் போயிருந்தன.

அன்றுதான் அவனுக்குப் புத்தி வந்தது. மனம் திருந்திய அவன் கடுமையாக உழைக்க ஆரம்பித்தான்.

## நோய்களைப் போக்கும் இசை

| | |
|---|---|
| பைரவி | : காய்ச்சலைக் குணப்படுத்தும் சுறுசுறுப்பை உண்டாக்கும். |
| அசாவேரி | : இரத்தக் கொதிப்பை அடக்கும். |
| சாரங்கா | : தலைவலியில் இருந்து சுகமளிக்கும். |
| தர்பாரி | : நெஞ்சு வலி, வாத நோய்களைக் குணமாக்கும். |
| ஜெயஜெயவந்தி | : கோபம், படபடப்பு ஆகியவற்றை நீக்கும். |

7-(2)

# பத்தாண்டுகளின் பத்து இயக்குனர்கள்

சார்லஸ்

## அலெக்ஸான்ட்ரோ கோன்ஸெலஸ் இனாரிட்டு




2000ஆம் ஆண்டு வெளிவந்த "அமொ-ரெஸ் பெரோஸ்" படம் உலகம் தழுவிய அங்கீகாரத்தையும் விருதுகளையும் பெற்ற பிறகு, இயக்குனர் அலெக்ஸாண்ட்ரோ கோன்ஸெலஸ் இனாரிட்டு இற்கு ஹொலிவுட்-இன் அழைப்பு வந்தது. அங்கு சென்று அவர் எடுத்த "21 கிராம்ஸ்" படம் அவருடைய முந்தைய படத்தைவிடவும் சிறந்தது என்று நான் நினைக்கிறேன். இதிலும், ஒரு விபத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் சம்பந்தப்படும் மூன்று கதாபாத்திரங்களின் தனித்தனிக் கதைகளே பின்னப்பட்டுள்ளன. ஆனால் ஸியான் பென், பெனிசியோ டெல் டோரோ, நவோமி வாட்ஸ் ஆகியோரின் அற்புதமான நடிப்பும், உணர்ச்சிகரமான தருணங்களும் இந்தப் படத்தை ஒரு மிகச் சிறந்த அனுபவமாக்குகின்றன.

"பல்ப் ஃபிக்ஷன்" படத்தின் பாதிப்பு காரணமாக 1995இற்குப் பின் ஏராளமான அமெரிக்க ஐரோப்பிய படங்களில், ஒன்றுக்கு மேற்பட்ட கதைகளை உள்ளடக்கி "நான்லீனியர்" வடிவில் திரைக்கதைகள் அமைக்கப்பட்டன. ஆனால் அந்தப் படங்களில் எல்லாம், காலத்தில் முன் பின் செல்லும் இடங்களில், பார்வையாளர்கள் புரிந்துகொள்வதற்கு ஏதுவாக ஏதோ ஒன்று செய்யப்பட்டிருக்கும், ஒவ்வொரு கதைப் பகுதிகளும் ஓரளவுக்கு நீளத்தோடு, அது எங்கே, எப்போது நடக்கிறது யார்யார் காட்சியில் இருக்கிறார்கள் என்பது தெளிவு படுத்தப் பட்டிருக்கும்.

ஆனால் அந்த முயற்சிகள் எதுவும் இல்லாமல், மொத்த திரைக் கதையையுமே செதில் செதிலாக வெட்டி, கலைத்து அடுக்கியது போல் இருக்கிறது "21 கிராம்ஸ்". துண்டு துண்டாக சம்பந்தமில்லாமல் வரும் காட்சிகளை வைத்து மொத்தச் சித்திரத்தைப் பார்வையாளர்கள் தான் முயற்சிசெய்து புரிந்து கொள்ளவேண்டும்.

இப்படி வேண்டுமென்றே குழப்புவது சரியா என்கிற விவாதத்துக்குள் நான் செல்ல விரும்பவில்லை. எனக்கும் அது பற்றி மாற்றுக் கருத்து உண்டு. ஆனால் ஒரு நவீன ஓவியத்தைப் புரிந்துகொள்ள முயற்சிக்கும்போது ஏற்படும் கலை அனுபவத்தைத் திரைப் படத்திலும் கொண்டுவர செய்யப் பட்ட சோதனை முயற்சி என்ற அளவில் இது முக்கியமானதே. ஆனால் கொஞ்சம் முயற்சி செய்து உள்நுழைபவர்கள் நிச்சயம் இந்தப் படத்தை ரசிக்க முடியும் என்றே நான் நினைக்கிறேன்.

ஒரு மனிதன் உயிரிழக்கும் போது அவன் உடம்பில் 21 கிராம்கள் சட்டென்று குறைவதாக ஒரு பழைய ஆய்வு சொல்கிறது. ஆகவே உயிரின் எடை 21 கிராம்கள் தானா என்று ஒரு விவாதம் இருக்கிறது. அதைத்தான் படத்தின் தலைப்பு குறிக்கிறது. மரணத்தால் உண்டாகும் இழப்பு வெறும் 21கி. மட்டுமில்லை அது எத்தனை பெரிய பேரிழப்பு என்று காட்டுகிறது படம். ஒரு கணிதப் பேராசிரியர் சிக்கலான இதய நோயின் காரணமாக மரணத்தை எதிர்நோக்கியிருக்கிறார். கடுமையான வலியும் வேதனையும் நிறைந்த நரக வாழ்வு, கழிப்பறைக்குக் கூட ஒட்சிசன் சிலிண்டரை இழுத்துக்கொண்டு செல்ல வேண்டும் என்கிற நிலை.

ஒருவழியாக இதயமாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டு உயிர் பிழைக்கும் அவர், தனக்கு இதயம் கொடுத்தது யார் என்று ஒரு தனியார் துப்பறியும் ஆளைக்கொண்டு கண்டறிகிறார். ஒரு விபத்தில் கணவன் மற்றும் இரு குழந்தைகளைப் பறிகொடுத்த இளம்பெண், தன் கணவனின் இதயத்தையே அவனுக்கு வழங்கியிருக்கிறாள் என்பது தெரியவருகிறது. அந்தப் பெண் தாங்க முடியாத வேதனையிலும் தவிப்பிலும் தனியே வாடுவதைப் பார்த்து, அவளிடம் சென்று பேசுகிறான். அவள், விபத்து நடந்தபோது சிறிது நேரம் தனது கடைசி மகள் உயிரோடிருந்திருக்கிறாள் என்றும், காரில் வந்து மோதிய ஆள் நினைத்திருந்தால் அவளை மட்டுமாவது காப்பாற்றியிருக்க முடியும் என்றும், ஆனால் அவன் நிறுத்தாமல் சென்றான், ஆகவே அவனைக் கொல்லவேண்டும் என்றும் சொல்கிறாள்.

பலகாலம் சிறையிலேயே கழித்த ஒரு முன்னாள் குற்றவாளி இப்போது மனம் திருந்தி தீவிர கிறிஸ்தவ பக்தி இயக்கம் ஒன்றுடன் தன்னை இணைத்துக்கொண்டிருக்கிறான். குற்றச்செயல்களில் ஈடுபட ஆரம்பிக்கும் சேரி இளைஞர்களிடம் போதனைகள் செய்து மதப் பிரசாரம் செய்கிறான் அவன். தனது மனைவியோடும் இரு குழந்தைகளோடும் அமைதியான வாழ்க்கை வாழ்கிறான். இந்த நிலையில் அவனது ஒரு கண நேர கவனக் குறைவால் காரில் மோதி ஒரு தந்தையும் இரு மகள்களும் செத்துப்போகிறார்கள். பதட்டத்தில் நிறுத்தாமல் வந்துவிடும் அவன் பிறகு தானே சென்று பொலிஸில் சரணடைகிறான்.

இயேசு தன்னைக் கைவிட்டது ஏன் என்கிற கேள்விக்கு அவனுக்கு விடையே இல்லை, தான் சிறையிலேயே கழிக்கவேண்டும் என்பதுதான் கடவுளின் விருப்பம் என்று நினைக்கிறான். ஆனால் அவனது விருப்பத்தையும் மீறி அவனது மனைவி வக்கீல் மூலம் போராடி அவனை சிறையிலிருந்து விடுவிக்கிறாள். தன் வீட்டுக்கு வந்து குழந்தைகளின் முகங்களைப் பார்க்கும்போது தன்னால் இறந்துபோன இரு சிறுமிகளின் ஞாபகமே அவனுக்கு வருகிறது. தனக்குத் தானே தண்டனை கொடுப்பதுபோல குடும்பத்தை விட்டுப் பிரிந்து தனியே செல்கிறான். இலக்கில்லாமல் அநாதை போல வாழ்கிறான்.

இந்த நிலையில் அவனைக் கொல்வதற்காக, இறந்தவனின் மனைவியும், இதய மாற்று அறுவை சிகிச்சை செய்த ஆளும் தேடி வருகிறார்கள். இறுதியில் அவன் பாவக் குழியிலிருந்தும், குற்றமனப்பான்மை என்கிற நரகத்திலிருந்தும் மீட்பும் மன்னிப்பும் பெறுகிறான். இறந்தவனின் மனைவி, தனது கணவனின் இதயத்தோடு வந்த ஆளின் மூலம் தான் கர்ப்பமாகியிருப்பதை அறிகிறாள். வயிற்றிலிருக்கும் அந்தப் புதிய உயிர் அவளுக்கு வாழ்வின் மீதான பிடிப்பை வலுப்படுத்துகிறது, புதிய நம்பிக்கையை அளிக்கிறது.


பொருத்தப்பட்ட மாற்று இதயத்தை பேராசிரியரின் உடல் ஒப்பவில்லை, ஆகவே தன்னை விட்டு உயிராபத்து விலகவில்லை என்பதை உணர்கிறார். தன் உயிர் ஒரு நல்ல காரியத்துக்காகச் செல்லட்டும் என்று முடிவெடுத்த அவர், இறந்தவனின் மனைவிக்கும் விபத்தைச் செய்தவனுக்குமான பகையைத் தீர்ப்பதற்காகத் தன்னைத் தானே சுட்டுக்கொள்கிறார். இறுதியில் மீண்டும் மரணத்தை எதிர்நோக்கிப் படுத்திருந்தபடி, உயிர் என்றால் என்ன என்று அவர் யோசிக்கிறார் என்பதோடு படம் நிறைவடைகிறது.

நேர்கோடற்ற திரைக் கதையுடன் அமைந்த எந்தவொரு படத்தையும்விட அதிகமாகக் காலக் குழப்பம் செய்யப்பட்ட படம் இது தான். ஒவ்வொரு சிறு காட்சியும், நன்கு கலைக்கப் பட்ட சீட்டுக்கட்டின் சீட்டுப் போல, கதையோட்டத்துக்குத் தொடர்பே இல்லாமல் எங்கோதான் செருகப் பட்டிருக்கிறது. இயக்குனர் படப்பிடிப்பில் கால வரிசைப்படியேதான் காட்சிகளை எடுத்திருக்கிறார், பிறகு படத்தொகுப்பில் தன் விருப்பப்படி கலைத்து அடுக்கியிருக்கிறார். அவர் வழங்கியிருக்கும் வரிசையின்படி கதையை உள்வாங்கும்போது, வாழ்வின் விசித்திரத்தையும், புரிந்துகொள்ள முடியாத புதிர்த் தன்மையையும் நன்கு உணரமுடிகிறது என்பது மறுக்கமுடியாதது. நேர்கோட்டில் கதைசொல்லியிருந்தால் இந்த உணர்வு நிச்சயம் ஏற்பட்டிருக்காது.




(தொடரும்)

## கடவுள் எங்கே?



"கடவுள் எங்கே இருக்கிறார்?" என்று கேட்டான் நாத்திகன்.

"அவர் உன் நாக்கிலே இருக்கிறார்" என்றான் ஆத்திகன்.

"அப்படியென்றால் என் நாக்கையே வெட்டிவிடுவேன்"

"உன் கையிலும் இருக்கிறார்"

"என் கையையும் வெட்டிவிடுவேன்"

"உன் தலையிலே இருக்கிறார்!"

"தலையையே கழற்றிக் கீழே வைத்துவிடுவேன்"


"உன் பணப்பெட்டியில் இருக்கிறார்"

"அப்படியென்றால் அவரை நான் பத்திரமாக பாதுகாப்பேன்!"


- சொன்னவர் கண்ணதாசன்

## மிகப்பெரிய முட்டை!

பல நூற்றாண்டுகளுக்கு முன், யானைப் பறவை என்ற மிகப் பெரிய பறவை, பூமியில் வாழ்ந்ததாகவும் டைனோசரை விட, இந்த யானைப் பறவை தான் உருவத்தில் பெரியதாக இருந்ததாகவும் கூறுகின்றனர் ஆராய்ச்சியாளர்கள். டைனோசரை போலவே, இந்த யானைப் பறவையும், தற்போது அடியோடு அழிந்து விட்டது. இதன் முட்டை ஒன்று, தொல்லியல் துறை ஆராய்ச்சியாளர்களால், மடகாஸ்கர் வனப் பகுதியில், சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த முட்டை, 13 - 17ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தை சேர்ந்தது என தெரிய வந்துள்ளது. இந்த முட்டையின் உயரம், 30 செ.மீ., நாம் அன்றாடம் பார்க்கும், கோழி முட்டையை விட, இந்த முட்டை பல மடங்கு பெரியது. இந்த பிரமாண்ட முட்டை, லண்டனில் விரைவில் ஏலத்துக்கு வருகிறது. இந்த முட்டை, 25 இலட்சம் ரூபாவுக்கு, ஏலம் போகும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.



# ஒரு மணி நேரத்தில் டி.என்.ஏ.பரிசோதனை அதிவேக சிப் கண்டுபிடிப்பு



டி.என்.ஏ எனப்படும் மரபணு சோதனையைக் கண்டறிய இது வரை 3 நாட்களில் இருந்து சுமார் 15 நாட்கள் வரை ஆகும். இப்போது பானஸோனிக் நிறுவனமும் பெல்ஜியத்தில் உள்ள ஐ.எம்.ஈ சியும் சேர்ந்து ஒரு அதி வேக சிப்பை கண்டுபிடித்திருக்கின்றனர். ஒரு துளி இரத்தம் மூலம் 9 நிமிடத்தில் ஹை ஸ்பீட் பீ.சி.ஆர் வேலை செய்து உலகத்தின் அதிவேக கண்டுபிடிப்பாய் இதை அறிவித்துள்ளனர். இதன் மூலம் சிலருக்கு சிகிச்சை அளிக்க அவர்களுக்கு மாற்று உறுப்பு, அரிய மருந்து வகைகள் ஒத்துக் கொள்ளுமா என உடனடியாக கன்டுபிடிக்க மட்டுமில்லாமல் குற்றவாளிகள் கண்டுபிடிப்புக்கும் இது பெரிய அளவில் உதவுமாம்.

# அதிநவீன ஹைப்றிட் கணனி



முன்னணி கணனி உற்பத்தி நிறுவனங்களுள் ஒன்றாக விளங்கும் Asus நிறுவனமானது டேப்லட் மற்றும் டெக்ஸ்டொப் கணனிகளை ஒன்றாய்க் கொண்ட Transformer AiO P1801 ஹைப்றிட் (Hybrid) நவீன கணனிச் சாதனத்தை அறிமுகப்படுத்துகின்றது. இவற்றில் மல்டி டச் தொழில்நுட்பத்தினைக் கொண்ட 18.4 அங்குல அளவுடைய HD தொடுதிரை காணப்படுவதுடன் 3.1 GHz வேகத்தில் செயலாற்றவல்ல Intel Core i5 Processor, பிரதான நினைவகமாக 8GB RAM ஆகியனவும் காணப்படுகின்றன. 1,299 அமெரிக்க டொலர்கள் பெறுமதியுடைய இச்சாதனத்தில் 2GB கொள்ளளவுடைய nVidia GeForce 730M கிராபிக்ஸ் மெமரியும் உள்ளது.

# இரவுக்காட்சிகளை படம் பிடிக்க அதிநவீன கமரா

இருள் சூழ்ந்த நேரங்களில் அல்லது இரவு வேளைகளில் காட்சிகளை துல்லியமாக படம் பிடிக்கக்கூடிய மிகவும் சிறிய கமரா ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. CHOBi Cam Pro 3 எனும் நாமத்தைக் கொண்ட இக்கமராவானது 11 மெகாபிக்சல்களாக காணப்படுவதுடன் 1080P வீடியோ ரெக்கோர்டிங் வசதியையும் உள்ளடக்கியுள்ளது. இதில் இணைக்கப்பட்டுள்ள பற்றரியானது தொடர்ச்சியாக 120 நிமிடங்கள் வரையான வீடியே ரெக்கோர்டிங் செய்யும்வரை நீடித்து உழைக்கக்கூடியதாகக் காணப்படுகின்றது. மேலும், இதன் சேமிப்பு வசதிகளை Micro SDHC கார்ட் மூலமாக 32 GB வரை அதிகரிக்கக்கூடிய வசதியும் தரப்பட்டுள்ளது இதன் பெறுமதி 54 டொலர்கள் ஆகும்.







# மரணத்திற்குப் பின்னர் கூகிள் கணக்கு

உலகின் மிகப் பெரிய இணைய சேவை நிறுவனங்களில் முக்கியமான கூகிள், தனது பாவனையாளர்களின் கணக்கினை அவர்களின் மரணத்துக்குப் பின்னர் எவ்வாறு கையாளலாம் என்பது குறித்து புதிய சேவையினை அறிமுகப்படுத்தியுள்ளது. Google Inactive Account Manager எனப்படும் இந்தச் சேவையின் மூலம் பாவனையாளர்கள் திடீரென மரணமடைந்தால் அவரது கணக்கு எவ்வளவு காலத்துக்கு பாவனையின்றி இருக்க வேண்டும் என்பதையும் அதன் பின் அதை யார் எவ்வாறு கையாள முடியும் என்பதையும் நாம் முன் கூட்டியே குறித்து வைத்துக் கொள்ள முடியும்.

அதாவது இந்த தானியங்கிச்செயற்பாட்டின் மூலம் நாம் விரும்பினால் நாம் இறந்து குறிப்பிட்ட காலத்துக்குப் பின்னர் நமது கணக்கை பிறருடன் பங்கிட்டுக் கொள்வதற்கோ அல்லது முற்றாக அழித்து விடுமாறோ கட்டளைகள் பிறப்பிக்க முடியும். நாம் பாவிக்கும் கூகிளின் சேவைகளான ஜிமெயில், புளொக்கர், தொடர்புகள், கூகிள், கூகிள் வொயிஸ், மற்றும் யூ டியூப் ஆகியவற்றை நமக்கு நெருக்கமான இன்னொருவருடன் நாம் இறந்த பின் பகிர்ந்து கொள்ள வேண்டுமெனில் இச்சேவையினை நாம் உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

நாம் மரணித்து குறிப்பிட்ட காலம் வரையிலான் செயலின்றி இருக்கும் காலம் கழிந்த பின் நாம் குறித்து வைத்துள்ள இரண்டாவது முகவரிக்கு நாம் உயிருடன் உள்ளோமா என அறிவதற்கு ஒரு மின்னஞ்சல் அலேர்ட் அனுப்பப்படும். அதற்குப் பதில் அளிக்காவிட்டால் நமது கணக்கை அழித்து விடவோ அல்லது நெருக்கமானவர்களுடன் பங்கிட்டுக் கொள்வதற்கோ கூகிள் முயற்சிக்கும். இதற்காக நாம் அவர்களின் அனுமதியுடன் முன்கூட்டியே குறைந்தது 10 நபர்களின் விபரங்களை இந்தச் சேவையில் பதிந்து வைக்க முடியும்.




# அதிக நேரம் கணனி முன்னால் உட்காருவதால் உண்டாகக் கூடிய சிரமங்களும், தீர்வுகளும்



இடைவெளியின்றி ஒவ்வொரு நாளும் நீண்ட நேரம் கணனியைப் பார்த்து உபயோகிக்கும் பலருக்கு உடலிலும், கண்களிலும் ஏற்படும் சிரமமே 'Computer Vision Syndrome' என்றழைக்கப்படுகிறது. கணனியில் ஒரு நாளில் மூன்று மணி நேரமும், அதற்கு மேலும் தொடர்ந்து வேலை செய்பவர்களில் 90% சதவிகிதத்தினருக்கு இந்தப் பாதிப்பு ஏற்படுகிறது. உடலில் சோர்வு, பின் கழுத்து, முதுகு மற்றும் தலை வலி, கைகள், மணிக்கட்டு மற்றும் தோள் பட்டை வலி ஆகிய நோய்க்குறிகள் ஏற்படுகின்றன. தொடர்ந்து கணனித் திரையைப் பார்த்துக் கொண்டிருப்பதாலும், கண் இமைகள் சிமிட்டல் குறைவதாலும் கண்கள் உலர் தன்மை அடைகிறது. இதனால் கண்களில் உறுத்தல், எழுத்துக்கள் இரண்டாகவும், பலவாகவும் தெரிதல் மற்றும் பார்வை தெளிவற்றும் தோன்றுகின்றன.

இந்த சிரமங்களுக்கான காரணங்கள்:

1. உட்காரும் ஆசனத்தின் அமைப்பு, உயரம் மற்றும் நாம் உட்காரும் நிலை.

2. கணனி விசைப் பலகைக்கும், கணனித் திரைக்கும் போதுமான வெளிச்சமின்மை.

3. கணனித் திரையில், கணனி பயன்படுத்துபவர்களுக்குப் பின் புறமுள்ள யன்னல்கள் மற்றும் விளக்குகளிலிருந்து கண் கூசும் ஒளி வீச்சு.

4. கண்களுக்கும் திரைக்கு முள்ள இடைவெளி.

5. கணனி பயன்படுத்தும் தனி ஒருவரின் வயதுக்கேற்றபடி, கண்களின் சரி செய்யப்படாத தூரப் பார்வை (Myopia), கிட்டப் பார்வை (Hypermetropia), சிதறல் பார்வை (Astigmatism) மற்றும் வெள்ளெழுத்து (Presbyopia) பார்வைக் குறைபாடு.

6. கண்களின் தசை அழற்சியால், கண்கள் ஒருங்கிசைவு சரியில்லாதிருத்தல் (Ocular Muscle Imbalance)

எனவே, உடலிலும், கண்களிலும் ஏற்படும் சிரமங்களைத் தவிர்த்து, சரி செய்வது எப்படி?

உடலிலும், கண்களிலும் ஏற்படும் சிரமங்களெல்லாம் சாதாரணமாக தற்காலிகமானதே. கணனியில் வேலை செய்வதை நிறுத்தி எழுந்த சில நிமிடங்களில் அதிக தொல்லைகள் இராது.

கணனியில் வேலை செய்யும் போது, குறிப்புகளை விசைப் பலகைக்கு மேலும், கணனித் திரைக்கு அருகிலும் வைத்துக் கொண்டால் நல்லது. ஒரு மணிக்கொரு முறை ஆசனத்தை விட்டு எழுந்து, அலுவலகத்திற்கு உள்ளேயே சிறிது நடக்கலாம். கை கால்களை நீட்டி, மடக்கி பயிற்சி செய்யலாம். கழுத்து, தோள் இரண்டுக்கும் தக்க பயிற்சி செய்யலாம்.

1. உட்காரும் நாற்காலி உயரத்தை வேண்டுமளவு ஏற்றவும், இறக்கவும் தகுந்ததாக இருக்க வேண்டும். நிமிர்ந்து உட்காரும் பொழுது முதுகுக்குப் பொருத்தமாகவும், உட்காரவும், சாய்மானத்திலும் Foam வைத்தும் இருக்க வேண்டும். கைகளை சம நிலையில் வைக்க நாற்காலியில் கைத்தாங்கி வைத்தும் இருக்க வேண்டும்.

2. கணனி விசைப் பலகையிலும், திரையிலும் நல்ல வெளிச்சம் இருக்கும்படி விளக்குகள் அமைக்கப்பட வேண்டும்.

3. கண்கள் கூசும் ஒளி வீச்சு இருந்தால், கணனியின் இருப்பிடத்தை மாற்றியமைக்க வேண்டும்.

4. கணனியின் திரைக்கு வெகு அருகில் செல்லாமல் சற்று தூரத்திலிருந்தபடி (சுமார் 33 செ.மீ) பார்த்து வேலை செய்ய வேண்டும்.

5. கண் மருத்துவரிடம் கண்களை வருடம் ஒரு முறை, முறையாகப் பரிசோதித்து தேவைக்கேற்றபடி கண்ணாடி அணிந்து கொள்ள வேண்டும். 40 வயதிற்கு, மேல் கண்கள் பரிசோதனையின் போது, Glaucoma பாதிப்பில்லையென்றறிய, கண்களின் நீர் அழுத்தத்தையும் (Intraocular Pressure) பரிசோதிக்க வேண்டும். வெள்ளெழுத்துக் கண்ணாடிகளை இரண்டு வருடத்துக்கு ஒருமுறை 40 வயதிலிருந்து 55 வயது வரை மாற்ற வேண்டியிருக்கலாம்.

6. தேவையானால், கண் தசைகளின் ஒருங்கிசைவை (Muscle Balance) கண் மருத்துவமனைகளில் பரிசோதித்துக் கொள்ளலாம். தேவையானால் பயிற்சியும் எடுத்துக் கொள்ளலாம்.

கணனியில் வேலை செய்யும்பொழுது, அவ்வப்பொழுது கண்களுக்கு ஓய்வு கொடுப்பது அவசியம். தொடர்ந்து கணனியைப் பார்த்துக் கொண்டிராமல், இடையிடையில் யன்னல் வழியாக தூரத்தில் உள்ள பொருளையோ, வானத்தையோ வேடிக்கை பார்க்கலாம்.

அடிக்கடி கண் இமைகளை மூடி மூடித் திறப்பதால், கண்ணீரினால் கண்கள் ஈரமாகி, கண்கள் உலர்வதையும், கண்களின் உறுத்தலையும் குறைக்கலாம். மருந்துக் கடைகளில் கிடைக்கும் Tears PLus, Moisol போன்ற சொட்டு மருந்துகளையும் உபயோகிக்கலாம்.

கண்களுக்கு மிக அருகிலுள்ள கணனித் திரையையே கண் இமைக்காமல் நீண்ட நேரம் பார்ப்பதை விட, சுலபமாகப் பின்பற்றக் கூடிய "20 - 20 - 20 சட்டம் (20 - 20 - 20 Rule) சொற்றொடரின் படி, 20 நிமிடத்திற்கு ஒரு முறை, 20 அடி தூரத்திலுள்ள பொருட்களை, 20 நொடிகள் பார்ப்பது கண்களுக்கு ஓய்வைத்தரும். அரை மணிக்கொரு முறை 20 நொடிகள் கண்களை மூடியிருப்பதும் நல்ல பயன் தரும்.

# ஆலய சூழலிலுள்ள கழிவுகளை அகற்றுவதற்கு நடவடிக்கை

(வடமராட்சி)

தொண்டைமானாறு தச்சைகொள்ளை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய சூழலிலுள்ள மக்கள் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் ஒன்று கூடி நகரசபையினை முற்றுகையிட்டுள்ளனர்.

நகரசபை தவிசாளரை சந்திப்பதற்காக ஊர்மக்கள் ஒன்றுகூடிச் சென்றவேளை தவிசாளர் ஏற்கனவே தகவல் அறிந்து அங்கிருந்து சென்று விட்டதாகவும் இவர்கள் அதன் பின்னர் சபையின் உப தவிசாளர் எஸ்.சதீஸ் மற்றும் சபைச் செயலாளருக்கு, தமது பகுதியில் திண்மக்கழிவுகள் அகற்றப்படாமல் எரியூட்டப்படுவது குறித்தும் இதனால் சூழல் மாசடைவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டினர்.

இதற்கு உபதவிசாளர் சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்குப் பற்றாக்குறை காணப்படுவதுடன் சபையில் பணிபுரியும் தொழிலாளர்கள் தற்போது வல்வெட்டி சந்தைக் கட்டடத்தொகுதி புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் நிலையில் அங்கு கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், வல்லை முத்துமாரி அம்மன் ஆலய மகோற்ஷவம் தற்போது நடைபெற்று வருவதால் அங்கும் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் பணியாற்றி வருவதாகவும் இதனாலேயே இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், குறித்த ஆலய சூழலில் உள்ள கழிவுகளை அகற்ற இருநாட்களுக்குள் ஏற்பாடுகளைச் செய்வதாகவும் மக்களுக்கு சமரசமான முறையில் உறுதிமொழிவழங்கினார்.

இதனையடுத்து மக்கள் அவ்விடத்தை விட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (116)

# பூநகரி கோட்டமட்ட தமிழ்த்தினப்போட்டி முடிவுகள்

(முழங்காவில்)

பூநகரி கல்விக் கோட்டப்பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு. (நேற்றைய தொடர்ச்சி)

**கட்டுரை பிரிவு 1**

ச.சயிந்தா (ஞானிமடம் அ.த.க.பா.), அ.தரணிகா (ஜெயபுரம் ம.வி.), உ.வினித்தா (பூநகரி ம.வி)

**பிரிவு 2**

ந.அகல்யா(முழங்காவில் ம.வி.), கி.மங்களசக்தி (முட்கொம்மன் அ.த.க.பா), ச.திசாந்தி (ஞானிமடம் அ.த.க.பா.)

**பிரிவு 3**

தி.மிதுலா (கறுக்காய் தீவு ம.வி.), த.ஜெலானி (வேரவில் இ.ம.வி.), பு.விதுஜா (நல்லூர் ம.வி)

**இலக்கணப்போட்டி பிரிவு 1**

ர.துவாரகன் (முட்கொம்பன் இ.த.க.பா.), ர.சிவலக்சன் (கறுக்காய்தீவு ம.வி.), வி.நிம்சி (ஜெயபுரம் ம.வி.)

**பிரிவு 2**

சு.நிலந்தினி (கறுக்காய்தீவு ம.வி.), அ.சியாமளதேவி (முழங்காவில் ம.வி.), வி.சரண்யா (பூநகரி ம.வி.)

**குறுநாடகம் பிரிவு 1**

உ.நிரோஜா (செல்லியாதீவு அ.த.க.பா)

**பிரிவு 2**

ய.பௌஸ்ரீனா (வேரவில் இ.ம.வி.), செ.தர்சிகா (ஜெயபுரம் ம.வி.), சி.நிதுர்சன் (முழங்காவில் ம.வி.) (112) (தொடரும்...)

# பெண்ணின் மரணவிசாரணைக்கு மூவர் அடங்கிய குழு நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனாவைத்தியசாலையில் ஊசிமருந்து ஏற்றப்பட்டு அரை மணிநேரத்தில் உயிரிழந்த பெண்ணின் மரணம் குறித்து விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க மூவர் கொண்ட குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

மரணம் குறித்து விசாரணை நடத்தப்படவேண்டும் என உயிரிழந்தவரின் கணவர் தெரிவித்திருந்தார். இச்சம்பவத்தில் புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த விஜயரட்ணம் நிர்மலாதேவி (வயது 37) என்ற ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பாக வைத்தியசாலையின் பதில்ப்பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜாவிடம் கேட்டபோது. 1998 ஆம் ஆண்டு முதல் இருதய நோயினால் பாதிக்கப்பட்டிருந்த இவர் கடந்த டிசம்பர் மாதம் இவருக்கான சத்திர சிகிச்சை உடன் மேற்கொள்ள வேண்டும் என்று கிளினிக்புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. ஆயினும், அவர் அதை அசண்டையாக விட்டுள்ளார். எனினும் இவருக்கு ஏற்றப்பட்ட ஊசி மருந்து மேலும், 33 பேருக்கு ஏற்றப்பட்டுள்ளது. எதனால் இம் மரணம் ஏற்பட்டது என்று கூற முடியாது. இது தொடர்பாக 3பேர் கொண்ட குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அவர்களே விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அந்த அறிக்கையின் அடிப்படையிலேயே மரணத்திற்கான முடிவு கூறமுடியும் என்றும் அவா மேலும் தெரிவித்தார். (இ)

# வடக்கில் உஷ்ணம் அதிகம்; யாழில் மோர் விற்பனை அமோகம்

(கிரு-சிகரம்)

நாட்டில் தற்போது நிலவும் அதிகரித்த வெப்பம் காரணமாக யாழில் மோர் விற்பனை சூடுபிடித்துள்ளது.

இளநீர், பழரசங்களும் விற்பனையாகின்ற போதும், மோர் விற்பனையே அதிகம் இடம்பெறுகின்றன. இதனால், யாழ்ப்பாணத்தில் ஆங்காங்கே மோர்க் கடைகள் முளைத்துள்ளன.

நாளுக்குநாள் அதிகரித்துச் செல்லும் வெப்பத்தால் மக்கள் மட்டுமன்றி ஏனைய ஜீவராசிகளும் குளிர்மையான இடங்களைத் தேடி ஓடுகின்றன.

அந்தவகையில் உடலுக்கு அதிகளவான குளிர்மையைத் தரும் பானமாக மோர் திகழ்கின்றது. இதனால் பலரும் மோர்க் கடைகளைத் தேடிச்சென்று மோர் வாங்கி அருந்துகின்றனர்.

வழமையைவிட இம்முறை இரு மடங்கு அதிகமாக மோர் விற்பனையாவதாக நல்லூர் ஆலய சூழலில் மோர் விற்பனையில் ஈடுபட்டுள்ள சறோஜினி தேவி என்பவர் குறிப்பிட்டார்.

ஏனைய காலங்களில் மோர் தயாரிக்கும் போது மோருடன் வெங்காயம், பச்சை மிளகாய் போட்டுக் கரைத்து விற்பனை செய்வேன். தற்போது வெயில் அதிகம் என்பதால் மிளகாய் போட்டுக் கரைப்பதில்லை. காரணம் மிளகாய் போட்டுக் கரைத்தால் நெஞ்செரிவு ஏற்படும். எனவே, வெங்காயத்தை மட்டுமே போட்டுக் கரைப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.



யாழ். நகரில் புதிதாகக்கட்டப்பட்டுள்ள ஹற்றன் நஷனல் வங்கியின் புதிய கட்டடத்தின் தோற்றத்தைக் காணலாம். (54)

# பதிவிறக்கப் பெட்டகம்

தனது ஹொலிவுட் கனவை நனவாக்கிக் கொள்வதற்கான முயற்சியாக விஸ்வரூபத்தை எடுத்திருக்கிறார் கமல். ஆப்கன் மக்கள் ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு ஆளானபோது அமெரிக்காவே அவர்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டியது. அப்படிப்பட்ட அமெரிக்காவையே ஆப்கன் மக்கள் எதிர்க்கிறார்கள் என்றால் அவர்களை அந்த நிலைக்குத் தள்ளியது எது என்பதை விஸ்வரூபம் காட்டவில்லை. மாறாக, அமெரிக்கர்கள் குண்டுவீசும்போது பெண்களையும் குழந்தைகளையும் தவிர்த்துவிடுவார்கள் என்றொரு வசனம் வருகிறது. அப்படியென்றால் அமெரிக்கா நடத்தும் கார்ப்பெற் பொம்மிங் என்பது என்ன? ஆக, அமெரிக்காவுக்கான பிரசார ஆவணப்படத்தையே கமல்ஹாசன் எடுத்திருக்கிறார். ஹாசன் என்று பெயர் வைத்ததற்காக அமெரிக்க விமான நிலையத்தில் ஏற்பட்ட அவமானத்தையும்மீறி தன்னுடைய அமெரிக்க விசுவாசத்தை வெளிப்படுத்த முஸ்லிம் சமுதாயத்தை அவர் பயன்படுத்தியிருக்கிறார். **– பேராசிரியர் ஜவாஹிருல்லாஹ**

டைட்டில் கார்டில் 'வசனம் – பாலகுமாரன்'னு வரும்போது கைதட்டல் என்பது முதல்ல எனக்குதான் கிடைச்சது! அதுக்கு முன்னாடி யாருக்காவது கிடைச்சதானு எனக்குச் சந்தேகம். முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு அது கிடைச்சிருக்கலாம். அதற்கு அவரது வசனங்கள் மட்டுமல்லாது வேறு காரணங்களும் இருக்கலாம்.

நாவல் வேறு; சினிமா வேறு. சமீபத்தில் ஒரு பெரிய டைரக்டரின் படம் படுதோல்வியைக் கண்டது. ஒரு நாவல் எழுதியவருக்கு, அதற்குத் திரைக்கதை, வசனம் எழுதியபோது அதை அமைக்கத் தெரியவில்லை. அதுல நல்ல ஸீன் இல்ல. என்ன சொல்லணும் என்ன சொல்லக் கூடாதுன்னு அவருக்குத் தெரியல. நாவலில் சொல்லப்பட வேண்டிய எல்லா விஷயமும் சினிமாவில் சொல்லப்பட வேண்டியதில்லை.

**– பாலகுமாரன்**

ஒரு தரமான இலக்கியம் எப்படி ஒரு தரமான இசையாகவோ ஓவியமாகவோ சிற்பமாகவோ ஆக முடியாதோ, அப்படித்தான் – அது ஒரு தரமான சினிமாவாகவும் ஆக முடியாது. எழுத்து என்ற மீடியத்தின் தன்மைகளும், தேவைகளும், இலக்கணங்களும், இலட்சணங்களும் வேறு. சினிமா என்ற மீடியத்தில் இவை வேறு. **– பாலுமகேந்திரா**

செம்மீன் மலையாள சினிமாவில் மறக்கமுடியாத படம். தகழி சிவசங்கரன் பிள்ளையின் நாவலை அற்புதமாக படமாக்கியிருப்பார் ராமு கரியாத். மார்க்ஸ் பட்லேயின் கமரா கடற்புர வாழ்வை, கடலைப் படமாக்கிய விதம் ஒப்பற்றது. செம்மீன் நாவலை சுந்தர ராமசாமி மொழியாக்கம் செய்திருக்கிறார். அற்புதமான மொழிபெயர்ப்பு அது, கடற்புரத்தின் மணம் நாவலின் ஒவ்வொரு பக்கத்திலும் வீசிக் கொண்டிருக்கிறது. இப்போது நாவலை வாசித்த போதும் பரீக்குட்டியை எனக்கு பிடித்திருந்தது. நிராசையின் நாயகன் அவன். நம் எல்லோருக்குள்ளும் நிராசை கொண்ட காதலன் ஒருவன் இருக்கிறான், அவனின் அடையாளம் தான் பரீக்குட்டி. நேற்றுத் தான் எழுதப்பட்டதோ எனும்படி அவ்வளவு புதியதாக உள்ளது செம்மீன். தகழி இந்த நாவலை மூன்று வாரத்தில் எழுதியிருக்கிறார் என்கிறார்கள். 30 மொழிகளில் செம்மீன் நாவல் வெளியாகியிருக்கிறது. செம்மீன் இந்திய சினிமாவில் மறக்கமுடியாத படம். ஒரு நாவல் படமாக்கப்பட்டு மிகப்பெரிய புகழைப்பெறறது செம்மீனில் தான் நடந்தேறியது.– **எஸ்.ராமகிருஷ்ணன்**

தமிழில் மாற்று சினிமா என்பதுதான் வர்த்தக சினிமாவை விட ஆபத்தானதாக இருக்கிறது. பாலாஜி சக்திவேல், வசந்தபாலன், பாலா போன்றவர்கள் தரமான சினிமா என்று சொல்லிக் கொண்டு சினிமா இரசனையை மேலும் மேலும் கீழே தான் இறக்கிக் கொண்டிருக்கிறார்கள். பணக்காரன் கெட்டவன், ஏழை நல்லவன் என்ற படு மொண்ணையான கருத்தாக்கத்தைக் கொண்ட மிக சராசரியான அங்காடித் தெரு, வழக்குஎண் 18/9 போன்ற படங்கள் இங்கே கொண்டாடப்பட்டதற்குக் காரணம் நல்ல படம் எப்படி இருக்கும் என்றே தமிழர்களுக்கு இன்னும் தெரியவராததுதான். சிறுவயதில் எம்ஜியார் சிவாஜி படங்களைப் பார்த்ததும், பிறகு துணை இயக்குனராக இருக்கும் போது பார்க்கும் ஹொலிவுட் படங்களும் தான் பெரும்பாலான இயக்குனர்களின் மூலதனமாக இருக்கிறது. இப்படி ஒரு செல்லாத மூலதனத்தை வைத்துக் கொண்டு எப்படி நல்ல சினிமாவை உருவாக்கமுடியும்?

**– சாரு நிவேதிதா**

# வடக்கில் முஸ்லிம்களின் எதிரிகள் யார்?

# சுட்டுவிரல் கூட்டமைப்பின் மீது

## — முஸ்லிம்காங்கிரஸ் மீதும் விழுகிறது பழி —



(கொழும்பு)

முஸ்லிம்கள், தமது அரசியல் பிரதிநிதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக 1989ஆம் ஆண்டு முதல் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ"க்கு வாக்களித்தனர். நாடாளுமன்ற பிரதிநிதிகளையும் தெரிவுசெய்தனர். ஆனால், அந்தக் கட்சி முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்கு போதுமான பங்களிப்பினைச் செய்யவில்லை என்று முசலிப் பிரதேச சபையின் தலைவர் முஹமட் எஷியான் தெரிவித்தார்.

வடமாகாண முஸ்லிம்களின் மீள்குடியேற்றச் செயற்பாடுகளுக்கு எதிராக செயற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் அநியாயத்தை தோற்கடிக்க முஸ்லிம் அரசியல் தலைமைகள், மற்றும் துறை சார்ந்தவர்கள், புத்தி ஜீவிகள் அனைவரும் ஒன்றுபடல் வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தற்போது வடக்கில் முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்கு எதிராக மிகவும் கடுமையான முறையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், களமிறங்கி அதனைத் தடுக்கும் அனைத்து வேலைகளையும் செய்துவருவது முஸ்லிம்கள் மத்தியில் பெரும் கவலையினை ஏற்படுத்திவருகின்றது.

"மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த" கதையாக இந்த இனச் சுத்திகரிப்பு மீண்டும் விஸ்வரூபம் எடுத்துவருகின்றது. அன்று முஸ்லிம்கள் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டமைக்கு பக்கபலமாக விடுதலைப் புலிகளுடன் இருந்தவர்கள் இந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் அணி என்பது பகிரங்கமான உண்மையாகும். அதனை அவர்களால் ஒரு போதும் தட்டிக்கழிக்க முடியாது. நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன், முஸ்லிம்கள் குறித்து ஆக்க பூர்வமான, அனுதாபமான கருத் துக்களையும், உரைகளையும் ஆற்றிவருவது பாராட்டுக்குரிய தொன்றாகும்.

எனினும், அதே அணியில் இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முஸ்லிம்களை அவமதிக்கும் செயற்பாடுகளையும் மக்களது உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கவிடாது தடையேற்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றமை ஒன்றுக்கொன்று முரண்பாடானதாகவே காணப்படுகின்றது.

இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக பொதுபலசேனா போன்ற அமைப்புக்கள் செயற்படுகின்ற போதும், பள்ளிவாசல்கள் தாக்கப்படுகின்ற போதும் முஸ்லிம் அரசியல் தலைமைகளும், 'புத்தி ஜீவிகளும் கடும் பிரயத்தனத்துடன் ஒன்றுபட்டு அதற்கெதிராக கிளர்ந்தெழுந்து செயற்படுவது வரவேற்கக் கூடியதொன்றாகும்.

அதேபோல் 1990ஆம் ஆண்டு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட போது, அங்கிருந்த நூற்றுக் கணக்கான பள்ளிவாசல்கள் துவம்சம் செய்யப்பட்டன,

அவை பாதணிகள் அணிந்தவர்களினால் அசிங்கப்படுத்தப்பட்டன. இவைகள் முஸ்லிம் சமூகத்தினால் நோக்கப்பட வேண்டியுள்ளது. இன்றைய சூழலில் அவற்றினை உயிரோட்டமுள்ளதாக மாற்ற மீண்டும் முஸ்லிம்கள் தாம் வாழ்ந்த பிரதேசங்களில் மீள்குடியேற வேண்டும். அதனை எமது அரசியல் தலைமை செய்கின்றபோது, அதனை இனவாத சித்தரித்துக் காட்டும் துரோகத் தனமான செயல்கள் இடம் பெறுகின்றன முஸ்லிம்களின் மீள் குடியேற்றத்திற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போதுமான பங்களிப்பினைச் செய்யவில்லை. முன்னாள் அமைச்சர் மர்ஹூம் நூர்தீன் மசூர் இருந்திருந்தால் இந்த மீள்குடியேற்றத்திற்கு தம்மை முழுமையாக அரப்பணித்து செயற்பட்டிருப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# சூரியக்குளியலில் வெளிநாட்டுப்பெண்;

# கடற்கரையில் கட்டு மீறிய பாலியல் தொல்லை

(கொழும்பு)

மிரிஸ்ஸ கடற்கரைப் பகுதியில் இஸ்ரேல் நாட்டுப் பெண் ஒருவர் மீது பாலியல் வல்லுறவு மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. விடுமுறையைக் களிப்பதற்காக அங்கு சென்றிருந்த இஸ்ரேல் பெண் ஒருவரே இவ்வாறு துன்புறுத்தப்பட்டுள்ளார். மிரிஸ்ஸ கடற்கரையில் சூரியக் குளியலில் ஈடுபட்டிருந்த போது நபர் ஒருவர் தம்மை பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியதாக, குறித்த இஸ்ரேலியப் பெண் குற்றம் சுமத்தியுள்ளார். இது தொடர்பில் மிரிஸ்ஸ பொலிஸாரிடம் அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

கணவருடன் குறித்த பெண் மிரிஸ்ஸ ஹொட்டல் ஒன்றில் தங்கியிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. பாலியல் ரீதியாக துன்புறுத்திய நபர் தப்பிச் சென்றுள்ளதாக குறித்த பெண் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

# நாடுமுழுவதும் 498 பேர் உயிர்ப்பலி

# வீதி விபத்துக்களால் விபரீதம்

## முதல் மூன்று மாதத்தில் கோர அறுவடை

(கொழும்பு)

2013ஆம் ஆண்டின் கடந்த மூன்று மாதங்களில் மார்ச் மாதத்தில் மாத்திரம் அதிக வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. மார்ச் மாதத்தில் மாத்திரம் 168 விபத்துக்கள் இடம்பெற்றதோடு அதில் 181 பேர் உயிரிழந்துள்ளதாக அந்த அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. ஜனவரி மாதத்தில் 156 வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ள நிலையில் 163 பேர் உயிரிழந்துள்ளனர். பெப்ரவரி மாதத்தில் 146 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதோடு அதில் 154 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 2012ஆம் ஆண்டு முழு வருடத்திலும் மொத்தம் 2300 வாகன விபத்துக்களே பதிவாகின. அதில் 2425 பேர் உயிரிழந்தனர். எனினும், இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் 470 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதோடு அதில் 498 பேர் பலியாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# கைத்தொலைபேசிகளுக்குத் தடை

# கல்குடா கல்விவலயம் முன்மாதிரி



(கொழும்பு)

பாடசாலைகளில மாணவர்கள் கையடக்கத் தொலை பேசி பாவிப்பதை முற்றாக தடைசெய்யுமாறு கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். ஸ்ரீகிருஸ்ணராஜா கோரிக்கைவிடுத்துள்ளார். இது தொடர்பில் கல்குடா கல்வி வலயத்திலுள்ள சகல பாடசாலைகளுக்கும் கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

கல்குடா வலயத்திலுள்ள 83 பாடசாலைகளுக்கும் இப்பாடசாலைகளின் அதிபர்களுக்கும் கடந்த புதன்கிழமை இது தொடர்பான கடிதங்களை அனுப்பி வைத்துள்ளதாகவும் கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீகிருஸ்ணராஜா தெரிவித்தார்.

பாடசாலைகளுக்கு மாணவர்கள் கையடக்கத் தொலைபேசியை கொண்டு செல்வது மற்றும் பாடசாலைகளில் மாணவர்கள் கையடக்கத் தொலைபேசியை பாவிப்பது முற்றாகத் தடை செய்யப்படுகின்றது.

இருப்பினும் மாணவர்கள் பாடசாலைகளுக்கு கையடக்கத் தொலைபேசியைக் கொண்டு வந்தால் அல்லது மாணவர்கள் கையடக்கத் தொலை பேசியை பாவிப்பதைக் கண்டால் அம் மாணவர்களுக்கு எதிராக உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்குமாறு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அவ்வாறே, பாடசாலை நேரங்களில் வகுப்புக்களில் ஆசிரியர்களும் கையடக்கத் தொலைபேசி பாவிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு ஆலோசனை கூறியுள்ளதாகவும் கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

# இரயில் விபத்தில் ஒருவர் பலி



(கொழும்பு)

அநுராதபுரம் பொலிஸ் பிரிவில் தஹய்யாகம ரயில் கடவையில் இனந்தெரியாத நபர் ஒருவர் ரயிலில் மோதுண்டு உயிரிழந்துள்ளார். இன்று காலை 8.30 அளவில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலில் மோதுண்டு இவர் உயிரிழந்துள்ளார்.

சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் அநுராதபுரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# பாடசாலைசெல்ல நடைப்பயணம்

# தினசரி 24 கிலோமீற்றர்கள்

## மலையகத்தில் தொடரும் அவலம்

பாடசாலைக்குச் செல்வதற்காக நாளொன்றுக்கு 24 கிலோமீற்றர் நடக்கும் நான்காம் வகுப்பில் கல்வி பயிலும் மாணவன் ஒருவன் இரத்தினபுரி, பலாங் கொடை நான்பெரியல்ல தோட்டத்தில் இருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது. இந்த மாணவர் விவேகானந்தா வித்தியாலயத்திலேயே கல்வி பயின்று வருகின்றார். இந்தப் பாடசாலை மற்று மொரு தோட்டத்திலேயே இருக்கின்றது.

சப்ரகமுவ மாகாண சபை உத்தியோகஸ்தர்கள் அடங்கிய குழு முதலமைச்சர் மஹிபால ஹேரத்துடன் இப்பகுதிக்கு விஜயம் செய்தது. நான்காம் வகுப்பில் கல்விபயிலும் மாணவன் பாடசாலை செல்வதற்கு அதிகாலை 4 மணிக்கே வீட்டிலிருந்து புறப்பட்டுவிடுவார் என்றும் பாடசாலை முடிந்து வீட்டுக்கு திரும்புவதற்கு இரவு 7 மணியாகிவிடும் என்றும் இந்தக் குழுவினர் கண்டறிந்துகொண்டனர்.

குடும்பத்தில் மூத்தபிள்ளையான இவர் தனது பெற்றோருடன் நெக்குரேன் தோட்டத்தில் வசித்து வருகின்றார். இந்தத் தோட்டம் சப்ரகமுவாவில் அதியுயரமான பகுதியிலேயே இருக்கின்றது. மலைப் பாங்கான இப்பகுதியில் போதியளவான உட்கட்டமைப்பு வசதிகள் இல்லை. வீதிகளும் குத்து சரிவானதாகவே இருக்கின்றது. சில காலங்களில் வீசுகின்ற பலமான காற்று பொது மக்களின போக்குவரத்திற்கு கூட தடையாக அமைந்துவிடுகின்றது. இந்தத் தோட்டம் கடல் மட்டத்திலிருந்து 7200 அடி உயரத்திலும் பலாங்கொடையிலிருந்து 32 கிலோமீற்றர் தொலைவிலும் இருக்கின்றது.

# மாணவியை மிரட்டிக் கப்பம் கோரிய ஆசிரியர்

# இப்போது சிறைச்சாலையில் கம்பி எண்ணுகிறார்

(கொழும்பு)

மாணவியை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி அதனை வீடியோப் பதிவுசெய்து கொண்டது மட்டுமல்லாது அந்த வீடியோவை அம்பலப்படுத்தாமல் இருப்பதற்காக மாணவியிடம் கப்பம் கேட்ட பிரத்தியேக வகுப்பு ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கம்பஹாவிலேயே இடம்பெற்றுள்ளது. கைது செய்யப்பட்ட பிரத்தியேக வகுப்பு ஆசிரியரை எதிர் வரும் 5ஆம் திகதி வரை யிலும் விளக்கமறியலில் வைக் குமாறு நீதவான் உத்தரவிட்டுள் ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கம்பஹாவில் பிரபல மகளிர் வித்தியாலயத்தில் 13 ஆம் வகுப்பில் கல்விபயிலும் மாணவியுடன் குறித்த பிரத்தியேக வகுப்பு ஆசிரியர் காதல் கொண்டிருந்ததுடன் மாணவியை ஏமாற்றி துஷ்பிரயோகம் செய்துள்ளார். அதுமட்டுமன்றி அதனை வீடியோவும் எடுத்துள்ளார். அத்துடன் அந்த வீடியோவை இணையத்தளங்களின் ஊடாக அம்பலப்படுத்துவதாக மாணவியை அச்சுறுத்தியுள்ளார்.

அதனைத் தடுத்து நிறுத்த வேண்டுமாயின் தனக்கு 5 இலட்சம் ரூபாவைக் கப்பமாகத் தருமாறும் மாணவியை அச்சுறுத்தியுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் தெரிந்துகொண்ட பாடசாலையின் அதிபர் பொலிஸில் செய்த முறைப்பாட்டையடுத்தே பிரத்தியேக வகுப்பு ஆசிரியர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கம்பஹா நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட போது அவரை எதிர்வரும் 5 ஆம் திகதி வரையிலும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.


# க.பொ.த. (சா/த) பரீட்சை - 2013

# கல்வி முரசு O/L

## விஞ்ஞானம்

ஆசிரியர்:
S.T.ஜனார்த்தனன்
B.sc

01. எரிபொருள் தகனமடையும் போது வெளிவிடப்படும் விளைபொருட்களை அறிய நடத்தப்பட்ட பரிசோதனை அமைப்புத் தரப்பட்டுள்ளது.




1. தகனத்திற்குத் தேவையான காரணிகள் எவை?
2. தகனத்தின் போது வெளிவிடப்படும் சக்தி வடிவங்கள் எவை?
3. A, B, C ஆகிய பகுதிகளைப் பெயரிடுக.
4. உபகரணம் C யில் பயன்படும் சோதனைப் பொருள் யாது?
5. பனிக்கட்டி பயன்படுத்தப்பட்ட காரணம் யாது?
6. மண்ணெய்ணெய்யின் பொதுச்சூத்திரம் $C_nH_{2n+2}$ ஆகும். எனின் பூரண தகனத்தின் போது தாக்கச் சமன்பாட்டை எழுதுக.
7. குறை தகனத்தின் போது மண்ணெண்ணெய் சுவாலையின் நிறம் யாது?
8. மேலே நீர் கூறிய நிறத்துக்கான காரணம் யாது?
9. வளி உறிஞ்சி இணைக்கப்பட்ட காரணம் யாது?
10. விளக்குத் தவறுதலாகத் தட்டி வீழ்த்தப்பட்டதால் நிலத்தில் தீ பரவியது. இத்தீயை அணைக்கப் பயன்படுத்தத்தக்க தீயணை கருவி யாது?
11. குப்பி விளக்கின் சுவாலை மேல் குறுக்காகக் கம்பி வலையைப் பிடித்தால் கிடைக்கும் அவதானத்தையும் அதன் காரணத்தையும் தருக.
12. சோடா அமிலத் தீயணை கருவியில் காணப்படும் இரசாயனப் பொருட்கள் எவை?


**02. A.** **நாளாந்தம் சிமெந்தின் தேவை அதிகரித்துச் செல்கின்றது. இதனை நீருடன் பரிகரிக்கும் போது இறுதி வன்மையாகும். இச்சிமெந்து போட்லண்ட் சிமெந்து எனப்படும். போட்லண்ட் கிராமத்தில் காணப்படும் உறுதியான கற்களை ஒத்த வன்மையுடைய பொருட்களை உருவாக்குவதால் இப்பெயர் பெற்றது.**

1) சிமெந்து தயாரிப்பதற்குத் தேவையான மூலப்பொருட்கள் எவை?
2) சிமெந்து உருவாகும் போது நடைபெறும் திண்ம நிலைத்தாக்கங்களில் உருவாகும் விளைவுகள் 3 தருக.
3) திண்ம நிலைத்தாக்கங்களின் போது தோன்றும் கரும் பச்சை நிறமான பொருளின் பெயர் யாது?
4) சிமெந்து தயாரித்தலின் போது உறையும் வீதத்தைக் கட்டுப்படுத்த சேர்க்கப்படும் பதார்த்தம் என்ன?
5) சிமெந்தின் உபயோகம் 2 தருக.
6) சிமெந்து தயாரித்தலின் போது சூழலும் சூளையின் வெப்ப நிலை யாது?


**B.** கறியுப்பைப் பெறுவதற்காக இரு முறைகள் கையாளப்படுகின்றன. பாறை உப்பை அகழ்ந்து பெறுவதன் மூலமும், கடல் நீரை ஆவியாக்குவதன் மூலமும் பெறப்படுகின்றது. இலங்கையில் உப்பளங்களில் கடல்நீரைச் சேகரித்து ஆவியாக்குவதன் மூலம் கறியுப்பு பெறப்படுகின்றது.

1) இலங்கையில் உப்பளங்கள் அமைந்துள்ள இடங்கள் 3 தருக.
2) உப்பளங்கள் அமைப்பதற்குத் தேவையான இடத்தைத் தெரிவு செய்யும் போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் 3 தருக.
3) உப்பளங்கள் காணப்படும் 3 வகையான பாத்திகளும் எவை?
4) கடல்நீர் செறிவடையும் போது முதலாவது பாத்தியில் வீழ்படிவாகும் உப்புக்கள் எவை?
5) மூன்றாவது பாத்தியில் கறியுப்பு வீழ்படிவாகி முடிந்ததும் இறுதியாக உள்ள தாய்திரவம் எவ்வாறு அழைக்கப்படும்?
6) சாதாரண கறியுப்பில் காணப்படும் மாசுக்கள் 2 தருக.


**03. I) a, b, c, d, e எனும் சடப்பொருட்கள் 5 இன் அமைப்பைப் பின்வரும் படங்கள் காட்டுகின்றன. படத்தில் O மூலம் வெவ்வேறு மூலகங்களைக் குறிக்கின்றது.**





பௌதீக நிலைக்கு ஏற்ப திண்மம், திரவம், வாயு எனவும் கூறுகளுக்கு அமைவாக தூய கலவை என்றும் சடப் பொருட்களை வகைப்படுத்த முடியும். பின்வரும் கோட்டுப்படத்தில் உள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமானவற்றை a, b, c, d, e என்பவற்றில் இருந்து தெரிந்து எழுதுக.




II. ஆவர்த்தன அட்டவணையில் அணு எண் 1-20 வரையுள்ள மூலகங்களின் அமைவிடத்தைக் காட்டும் அட்டவணையில் A, D, E, G, J என்னும் மூலகங்கள் ஐந்தின் குறியீடுகள் (நியமக் குறியீடுகள் அல்ல) தரப்பட்டுள்ளன. அம் மூலகங்கள் பற்றிக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க. தரப்பட்ட குறியீடுகளை மாத்திரமே பயன்படுத்தவும்.




அ) A, F மூலகங்கள் சேர்ந்து உருவாகும் மூலக்கூற்றின் அமைப்பை புள்ளடி மூலம் வரைந்து காட்டுக.



ஆ) இயற்கையில் சாதாரணமாகக் கிடைக்கும் மூலகம் D உடன் பிறப்பிக்கப்படும் அமைப்பை வரைந்து காட்டுக.



இ) வளியில் எரிந்து வெண்ணிறத் திண்மத்தைத் தரும் மூலகம் எது?

------------------------------------------------


ஈ) அட்டவணையில் தரப்பட்டுள்ள மூலகங்களுள் தாழ் உருகு நிலையைக் கொண்ட மூலகம் எது?

------------------------------------------------

உ) இயற்கையில் ஈரணு மூலக் கூறாகக் காணப்படும் மூலகம் எது?

------------------------------------------------

III. கீழேயுள்ள படத்தில் ஆவர்த்தன அட்டவணையில் அடுத்துள்ள 10 மூலகங்களின் அணு எண் எதிர் அணு ஆரை வரைபு தரப்பட்டுள்ளது. மூலகம் U இரண்டு சக்தி மட்டங்களைக் கொண்ட மூலகம் ஆகும்.




1. மூலகம் U வின் இலத்திரன் நிலையமைப்பைத் தருக.

------------------------

2. மூலகம் X அணு எண் யாது?

------------------------

3. மேலேயுள்ள மூலகங்களில் ஒரே கூட்ட மூலகங்களைத் தருக. ------------------------
4. தரப்பட்டுள்ள மூலகங்களில் சிறந்த தாழ்த்தி ஆகச் செயற்படும் ஓர் மூலகத்தையும் சிறந்த ஒட்சியேற்றியாகச் செயற்படும் ஒரு மூலகத்தையும் தருக.

------------------------------------------------


5. NaCl கரைசல் ஒன்றுக்கு மூலகம் T ஐ சேர்ப்பின் ஏதாவது தாக்கம் நிகழுமா? நிகழுமாயின் தாக்கத்திற்கான சமன்பாட்டைத் தருக.

------------------------------------------------

6. மூலகம் V யும் T யும் சேர்ந்து உருவாகும் சேர்வை மின்னைக் கடத்துமா? எவ்வாறு இதனைப் பரிசோதனை ஒன்றின் மூலம் காட்டுவீர்?

------------------------------------------------

**04.** இலங்கையில் காணப்படும் தொழிற்படும் மின்னுற்பத்தி நிலையங்கள் இரண்டின் பாய்சற்கோட்டுப் படங்கள் காட்டப்பட்டுள்ளன.



A எனும் இடமாக உயரமான நீர்த்தேக்கமொன்றைப் பயன்படுத்துவது பொருத்தமாகும்.

I. அ) மேலே பாய்சற்கோட்டுப் படங்களிரண்டின் மூலமும் காட்டப்பட்டுள்ள மின்னுற்பத்தி நிலையங்கள் எப்பெயரால் அழைக்கப்படும்?

------------------------------------------------

ஆ) A இடத்தைப் பெயரிட்டு "e" செயல் முறைக்குச் செல்லும் போது நடைபெறும் சக்தி மாற்றத்தைப் பெயரிடுக.

------------------------------------------------

இ) e, f ஆகிய இடங்களில் நடைபெறும் சக்திக்கான பொருத்தமான சமன்பாடொன்றை எழுதுக.

------------------------------------------------

ஈ) B, C அல்லது a, c இடங்களில் உள்ள உபகரணங்கள் இரண்டைப் பெயரிடுக.

------------------------------------------------

II. அ) முதலாவது பாய்சற்கோட்டுப் படத்தினால் காட்டப்படும் மின்னுற்பத்தி முறையைவிட இரண்டாவது பாய்சற் கோட்டுப் படம் மூலம் காட்டப்படும் மின்னுற்பத்தி முறையில் உள்ள குறைபாடுகள் இரண்டு தருக.

------------------------------------------------

ஆ) இரண்டாம் பாய்சற்கோட்டுப் படம் மூலம் காட்டப்படும் மின்னுற்பத்தி முறையில்,

a) முதல் சக்தி மூலம் ---------------------------------- ஆகும்.

b) முதல் சக்தி ---------------------------------- முதல் ----- ---------------------------------- வரை மாற்றமடைந்து,
இம்மாற்றமடைந்த சக்தி ----------------------------------
ஆகப் பெற்றுக் கொண்டு ----------------------------------
சக்தி பிறப்பிக்கப்படுகிறது.

c) மேலே முறையில் பெறப்பட்ட ----------------------------------
ஆக மாற்றமடைந்து அதன் மூலம் ----------------------------------
செயற்படுத்தி இறுதியில் ----------------------------------
ஆடலோட்ட மின் உற்பத்தி செய்யப்படுகிறது.

இ) இரண்டாவது பாய்சற்கோட்டுப் படத்தில் காட்டப்பட்டுள்ள மின்னுற்பத்தி முறை மூலம் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் இரண்டு தருக.

------------------------------------------------

III. அ) சூழல் பாதுகாப்பு மற்றும் உலகப் பாதுகாப்பு நிறுவனங்கள் மூலம் கரு சக்தி மின் உற்பத்தி நிலையங்கள் பாதுகாப்பற்ற மின் உற்பத்தி நிலையமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இதற்கு இரண்டு காரணங்கள் குறிப்பிடுக.

------------------------------------------------

ஆ) எரிபொருள் தகனம் தொடர்பாக பின்வரும் சமன்பாட்டில் இடைவெளியை நிரப்புக.

$C_xH_Y \xrightarrow[\triangle]{\text{தகனம்}}$ [ A ] + [ B ]

A ................................ B ................................

IV. அ) நவீன மின் சக்திப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உயிரியல் முறைகளைப் பின்பற்றுதல் தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தாவரப் பாகங்களைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்தல் இதில் ஒரு முறையாகும். இவ்வாறு பயன்படுத்தப்படும் தாவரம் ஒன்றைப் பெயரிடுக.

------------------------------------------------

ஆ) அதன் மூலம் மின் உற்பத்தி செய்யப்படும் முறையைப் பாய்ச்சற் கோட்டுப் படம் மூலம் காட்டுக.


------------------------------------------------

இ) மேலே தாவரத்தைப் பயன்படுத்துவதற்கான காரணங்கள் இரண்டு தருக.

------------------------------------------------

## பகுதி - II

01. உயிர் வாயு உற்பத்தி கீழே உருவில் காட்டப்பட்டுள்ளது.




1) a. உயிர்வாயு என நாம் குறிப்பிடும் வாயுவின் விஞ்ஞானப் பெயர் ---------------------------- ஆகும்.

b. இவ்வாயுவை உற்பத்தி செய்யும் பக்ரீரியா.................................................என அழைக்கப்படும்.

c. இவ்வாயுவின் மூலக் கூற்றுச் சூத்திரம்.................................................ஆகும்

2) a. உயிர் வாயு உற்பத்தி செய்யப்படும் போது கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் இரண்டு தருக.

------------------------------------------------

b. உயிர்வாயு உற்பத்தியின் போது பதார்த்தங்கள் சேகரிக்கப்படும் தாங்கி தொடர்ந்து கலக்கப்படவேண்டும். இதற்குக் காரணம் தருக.

------------------------------------------------

c. பதார்த்தங்கள் சேகரிக்கப்படும் தாங்கியில் சேர்க்கப்படக்கூடாத பதார்த்தங்கள் 2 தருக.

------------------------------------------------

------------------------------------------------

3) நீங்கள் உருவாக்கிய உயிர்வாயு உற்பத்தி செய்யப்படும் தொகுதியில் உள்ள குறைபாடு காரணமாக வினைத்திறனுடன் உயிர்வாயு பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

a. இக்குறைபாட்டிற்கான காரணங்கள் இரண்டு தருக.

------------------------------------------------

b. இக்குறைபாடுகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக நீர் பின்பற்றும் செயன்முறைகள் எவை?

------------------------------------------------

4) உயிர்வாயு உற்பத்தியின் மூலம் வீட்டிற்குக் கிடைக்கும் பிரதான அனுகூலங்கள் 2 தருக.

------------------------------------------------

5) உயிர்வாயு தகனத்தைக் காட்டும் இரசாயனச் சமன்பாடு கீழே தரப்பட்டுள்ளது. இடைவெளியை நிரப்புக.

a. $\ldots\ldots\ldots\ldots_{(g)} + 2O_{2(g)} \qquad CO_{2(g)} + \ldots\ldots\ldots\ldots_{(l)}$

b. வீட்டில் பயன்படுத்தப்படும் LP வாயு அடுப்புக்கு உயிர்வாயு இணைப்பு வழங்கப்பட்டது. எனினும் இதிலே மஞ்சள் நிற சுவாலையே கிடைத்தது. இதற்கான காரணத்தைக் கண்டறிக.

6) உயிர்வாயுத் தகனத்திற்குப் பொருத்தமான,


i. எரிபற்று நிலை எனப்படுவது யாது?

------------------------------------------------

ii. விறகு எரிபொருளை விட வாயு எரிபொருள் திறன்மிக்கது. இதற்குக் காரணம் யாது?

------------------------------------------------

02. அ) படத்தில் மனித இதயத்தின் அமைப்புக் காட்டப்பட்டுள்ளது.



i. இதயத் துடிப்பு என்றால் என்ன?

------------------------------------------------

ii. இதயத் துடிப்பின் அவசியத்தை எழுதுக.

------------------------------------------------

b.

1. தடிப்பான சுவரைக் கொண்ட அறை (...............)
2. ஒட்சிசனை அதிகமாகக் கொண்டு செல்லும் குருதிக்கலன் (...............)
3. முழு உடலிலிருந்தும் குருதி வந்து சேரும் அறை (...............)
4. கூடிய அமுக்கத்துடன் குருதி பயணிக்கும் கலன் (...............)
5. இடது இதய அறையில் அரைமதி வால்வு திறக்குமிடம் (...............)

c.

i. இதயத் தசைக்கு ஒட்சிசன் நிறைந்த குருதியைக் கொண்டு செல்லும் நாடி எது?

------------------------------------------------

------------------------------------------------

iii. இந்நோய் ஏற்படுவதற்கான காரணம் யாது?

------------------------------------------------

iv. இந்நோய் ஏற்படுவதற்கான காரணங்களில் ஒன்றான தவறான சுகாதாரப் பழக்கத்தைத் தருக.


------------------------------------------------

d.

i. படத்தில் இரண்டு வெவ்வேறு குருதிக் குழாய்களின் குறுக்கு வெட்டுத் தரப்பட்டுள்ளன. அவற்றின் பெயர்களை எழுதுக.

A......................................

B......................................




ii. பெரிய படத்திற்கான காரணங்களை விபரிக்க.

------------------------------------------------

e. i. நெறிக்கட்டு என்றால் என்ன ------------------------------------------------


ii. பெரிய படத்திற்கான காரணங்களை விபரிக்க

------------------------------------------------

------------------------------------------------

அ) மாணவனொருவன் தாவர இளைய வகைகளைப் பின்வருமாறு வரிப்படத்தில் தொடுத்துள்ளான்.

f. அட்டவணையைப் பூரணப்படுத்துக.



# ஜாம்பவான்கள் இல்லாத டிக்கி பேர்ட்டின் கனவு அணி

(லண்டன்)

இங்கிலாந்தின் டிக்கி பேர்ட் அறிவித்த கனவு அணியில், பிரட்மன், சச்சின், லாரா உள்ளிட்ட ஜாம்பவான்கள் சேர்க்கப்படாதது, கிரிக்கெட் அரங்கில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது. இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் டிக்கி பேர்ட். தேசிய அணியில் கடைசிவரை இடம் பெறாத இவர், 66 டெஸ்ட் போட்டிகளுக்கு நடுவராகக் கடமை யாற்றியிருந்தார். தனது 80ஆவது பிறந்த நாளுக்கு 11 சிறந்த வீரர்கள் அடங்கிய தனது டெஸ்ட் கனவு அணியைத் தேர்வு செய்தார். டெஸ்ட் அரங்கில் அதிக ஓட்டங்கள் குவித்த இந்திய வீரர் சச்சின், அவுஸ்ரேலியாவின் ஜாம்பவான் பிரட்மன், பொண்டிங், மேற்கிந்தியத்தீவின் பிரையன் லாரா உள்ளிட்ட வீரர்கள் எவரும் இடம்பெறவில்லை. டிக்கி பேர்ட்டின் இந்தக் கனவு அணி உலக கிரிக்கெட் வல்லுநர்கள் மற்றும் விமர்சகர்கள், முன்னாள், இந்நாள் வீரர்களிடையெ பெரும் அதிர்ச்சி அலை-யை ஏற்படுத்தியுள்ளது.

டிக்கி பேர்ட்டின் கனவு அணி விபரம் வருமாறு,

கவாஸ்கர் (இந்தியா), பேரி ரிச்சர்ஸ் (தென்னாபிரிக்கா) விவியன் ரிச்சர்ட்ஸ் (மேற்கிந்தியத்தீவு), கிரேக் சப்பல் (அவுஸ்ரேலியா), கிரேமி பொலக் (தென்னாபிரிக்கா) சோபாஸ் (மேற்கிந்தியத்தீவு), இம்ரான்கான் - கப்டன் - (பாகிஸ்தான்), ஷேன் வோர்ன், டென்னிஸ் லில்லி (அவுஸ்ரேலியா), லான்ஸ்கிப்ஸ் (மேற்கிந்தியத்தீவு), அலன் நொட் (இங்கிலாந்து விக்கெட் கீப்பர்).

# ஐ.பி.எல். துளிகள்



சன் ரைசர்ஸ் அணியிடம் அடைந்த தோல்வி கவலையளிக்கின்றது. தேவையில்லாத நேரத்தில் வீழ்ந்த சில விக்கெட்டுகளால் திருப்புமுனை ஏற்பட்டுவிட்டது. 140 ஓட்டங்கள் எடுத்திருந்ததால் நெருக்கடி கொடுத்திருக கலாம். பந்து வீச்சு நன்றாக இருந்த நிலையில் துடுப்பாட்டத்தில் சொதப்பிவிட்டோம் என கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் கப்டன் கில் கிறிஸ்ட் தெரிவித்துள்ளார்.



கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கெதிரான போட்டியில் பந்து வீச்சாளர்களின் பங்களிப்பு மிகவும் சிறப்பாக இருந்தது. அமித் மிஸ்ரா, இஷாந்த் சர்மா, ஸ்ரெயின் ஆகியோர் சிறப்பாக பந்து வீசினார்கள். விகாரியின் துடுப்பாட்டம், அற்புதமாக இருந்தது. எங்கள் அணியில் இளம் வீரர்கள் சிறப்பாக விளையாடி வருகிறார்கள் என ஹைதராபாத் அணிக் கப்டன் கமரூன் வைட் தெரிவித்துள்ளார்.



கப்டன் பதவியில் ஹோலி சிறப்பாக செயற்படுகிறார். இளம் வீரரான அவருக்கு அனுபவம் குறைவாக இருந்தாலும் உண்மையில் சில முடிவுகளை நல்ல படியாக எடுக்கிறார். அவரைப் பார்க்கும் போது கப்டனுக்குரிய திறமைகள் ஏராளமாக உள்ளன. அவர் இன்னும் சில ஆண்டுகளில் நிறைய விடயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். ஹோலி உலகின் தலைசிறந்த கப்டனாக உருவாகுவார். அருண் கார்த்திக் அணியின் கூடுதல் துடுப்பாட்ட வீரராக சேர்க்கப்பட்டுள்ளார். விக்கெட் காப்பாளராக அவர் செயற்படுவதால் எனக்கு நல்ல ஓய்வு கிடைத்தது. மற்றஇடங்களில் நின்று களத் தடுப்பு செய்வது எனக்குப் பிடித்திருக்கிறது என பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி வீரர் டிவில்லியர்ஸ் தெரிவித்துள்ளார்.

# தலைவர் பதவி துறப்பு



(மெல்போர்ன்)

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் துணைக் கப்டன் பதவியில் இருந்து வட்சன் விலகினார். வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடர் எதிர்வரும் ஜூலை மாதம் 10ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 25ஆம் திகதி வரை இங்கிலாந்தில் நடக்கவுள்ளது. இப்போட்டிக்கான அவுஸ்ரேலிய அணி விரைவில் அறிவிக்கப்படவுள்ளது. இந்நிலையில், நேற்று துணைக் கப்டன் பதவியில் இருந்து விலகுவதாக வட்சன் தெரிவித்தார். இது குறித்து வட்சன் குறிப்பிடுகையில், துணை கப்டன் பதவியில் இருந்து விலகுவது என்பது எளிதான முடிவு அல்ல. நீண்ட நாட்களாக இது குறித்து யோசித்து முடிவு செய்துள்ளேன். சிறந்த டெஸ்ட் வீரராக வலம்வர விரும்புகிறேன். எனவே, துடுப்பாட்டம், பந்துவீச்சில் கூடுதல் கவனம் செலுத்த முடிவு செய்துள்ளேன். அடுத்து வரவுள்ள இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் வெற்றிக்கு கைகொடுக்கப் போராடுவேன் எனத் தெரிவித்தார்.




# எல்லாம் அவர் கையில்

(மும்பை)

சச்சின் டெண்டுல்கரின் சேவை இந்திய கிரிக்கெட்டுக்கு முக்கிய தேவை என்பதை மறுக்க முடியாது. அவர் விடயத்தில் கிரிக்கெட் சபை எந்த முடிவையும் எடுக்கவோ, திணிக்கவோ முற்படாது என இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் என்.சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கிரிக்கெட்டுக்கு டெண்டுல்கர் தேவை என்பது எவ்விதத்திலும் சந்தேகம் இல்லை. ஓய்வு குறித்து அவர் தான் முடிவு செய்ய வேண்டும். அவரது இடத்தை யாராலும் நிரப்ப இயலாது. அந்த அளவுக்கு அவர் கிரிக்கெட்டில் உயர்ந்தவர். அவர் கிரிக்கெட்டை விட்டுச் செல்ல நினைக்கிறார் என்றால் நாம் அவரை மதிக்க வேண்டும். தனியாக விட்டு விட வேண்டும். அவர் தனது ஆட்டத்தில் எப்போதுமே சிறப்பாக ஆட முயற்சித்து வருகிறார் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்திய கிரிக்கெட்டுக்கு ஒரு முன் மாதிரியாகவும், அடையாளமாகவும் டெண்டுல்கர் இருக்கிறார். அவருக்கு இணை யாரும் இல்லை. அவரது ஒவ்வொரு ஆட்டத்தையும் ஒவ்வொரு நாட்டிலும் பாராட்டுகிறார்கள். அவரது ஆட்டத்தை இரசிகர்கள் மிகவும் இரசிக்கிறார்கள். எனவே, அவரை ஓய்வுபெறச் சொல்லி நாங்கள் கட்டாயப்படுத்தமாட்டோம். எந்த முடிவு என்றாலும் அவரது கையில் தான் இருக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# ஜடேஜா கலக்கல்; வென்றது சென்னை

(கொல்கத்தா)

ரவீந்திர ஜடேஜாவின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நான்கு விக்கெட்டுக்களால் பரபரப்பான வெற்றிபெற்றது.

ஆறாவது ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் 26ஆவது போட்டி நேற்று கொல்கத்தாவில் நடைபெற்றது. இதில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும், நடப்புச் சம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய கப்டன் கம்பீர், யூசுப் பதான் இணை சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் ஆரம்பப் பந்து வீச்சாளர்களைப் புரட்டியெடுக்கும் வகையில் பவுண்டரிகளை விளாசியது. அத்துடன் அணிக்கு வலுவான ஆரம்பத்தையும் பெற்றுக்கொடுக்கும் முனைப்புடன் செயற்பட்டது. இந்நிலையில் பந்து வீச்சாளர்களை மாற்றிய கப்டன் டோனி புதிய களவியூகத்தை அமைந்தார். இதன் பயனாக 49 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இந்த ஜோடி மொரிஸின் பொறிக்குள் சிக்கியது. தொடர்ந்து களமிறங்கிய கலிஸ் பதானுடன் இணைந்து ஓட்டங்களை பெற முற்பட்ட வேளை ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். கடந்த போட்டிகளில் அதிரடியில் கலக்கிய இயன் மோர்கனும் வந்தவேகத்தில் ஆட்டமிழக்க கொல்கத்தா நைட் ரைடரஸின் விக்கெட்டுக்கள் மெல்ல மெல்ல சரிக்கப்பட்டது. குறிப்பாக, ரவீந்திர ஜடேஜா, அஸ்வின் ஆகியோரின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் திணறிய கொல்கத்தா மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர்கள் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து வெளியேறினர். இருப்பினும் இதன் பின்னர் மனோஜ் திவாரி, டஸ் ஆகியோர் சிறிது நேரம் தாக்குப் பிடித்தபோதும் நிலைத்து நின்று அதிரடியாக ஆட முடியவில்லை. இறுதியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கப்டன் கம்பீர் 19 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 15, யூசுப் பதான் 22 பந்துகளை எதிர்கொண்டு நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 22, டஸ் 19, மனோஜ் திவ்ாரி 13 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் ஜடேஜா மூன்று, அஸ்வின் இரண்டு, மொரிஸ், பிராவோ தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 120 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி களமிறங்கியது. அதிரடியில் அசத்தக்கூடிய பலம்மிக்க துடுப்பாட்ட வரிசையை கொண்டிருக்கும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி, அனைவருக்கும் துடுப்பாட சந்தர்ப்பமளிக்கும் வகையில் ஹசியுடன் சுழற்பந்து வீச்சாளர் அஸ்வினை ஆரம்ப வீரராகக் களமிறக்கியது. சிறிது நேரம் தாக்குப் பிடித்து இரண்டு பவுண்டரிகள் விளாசிய அஸ்வின் சுனில் நரைனின் சுழலில் சிக்கி வெளியேறினார். தொடர்ந்து களமிறங்கிய முரளி விஜய், சுரேஷ் ரெய்னா வந்தவேகத்தில் அடுத்தடுத்து வெளியேறியமை சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு அழுத்தம் அதிகரித்ததுடன் ஆட்டத்தில் பரபரப்பும் ஏற்படத் தொடங்கியது. இந்நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக ஹசியுடன் இணைந்த கப்டன் டோனி நிலையைச் சுதாகரித்து நெருடிக்கயைத் தணிக்கும் வகையில் ஆட முற்பட்டார். ஒற்றை ஓட்டங்களைச் சேர்த்த இந்த ஜோடி (டோனி) 14 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்ற வேளை ரன் அவுட் மூலம் பிரிக்கப்பட்டது. இது ஆட்டத்தின் திருப்புமுனையாக அமைந்ததுடன் வெற்றி எந்த அணிக்கு என்று கணிக்க முடியாதவாறு போட்டிக் களம் பரபரப்படைந்தது. தொடர்ந்து களமிறங்கிய பத்ரிநாத், ஹசிக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் ஆட முற்பட்டார். ஐந்து ஓவரில் 50 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் அதிரடியாக ஆட முற்பட்ட சென்னை சூப்பர் கிங்ஸ் அணி அடுத்தடுத்து பத்ரிநாத், ஹசியை பலி கொடுத்தது. ஏழாவது விக்கெட்டுக்காக களமிறங்கிய ஜடேஜா அதிரடியில் கலக்கி அணியின் வெற்றியை உறுதி செய்தார். இறுதியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 19.1 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஹசி 40 ஓட்டங்களைப் பெற்றார். ஜடேஜா 14 பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர்கள், மூன்று பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 36 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பதான், பாலாஜி, சுனில் நரைன் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக சகலதுறையிலும் ஜொலித்த ஜடேஜா தெரிவானார்.



# சீனாவில் கடும் நில நடுக்கம்

# 100இற்கும் மேற்பட்டோர் பலி





சீனாவில் கடும் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 100 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். சீனாவின் தென்மேற்கில் சிசூயான் மாகாணத்தில் நேற்றுக் காலை 8.02 மணியளவில் அங்குள்ள யான் நகர் அருகே கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் அப்பகுதியில் சுமார் 20 வினாடிகளுக்கு மேல் பூமி குலுங்கியது. இதனால் வீடுகளில் இருந்த மக்கள் பீதியும், அதிர்ச்சியும் அடைந்தனர். வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் புகுந்தனர்.

நிலநடுக்கம் காரணமாக வீடுகள் மற்றும் கட்டிடங்கள் இடிந்தன. இதனால் ஏராளமானோர் இடிபாடுகளில் சிக்கினர். தகவல் அறிந்ததும் மீட்புப் படையினர் விரைந்து வந்து மீட்புப்பணியில் ஈடுபட்டனர். இருந்தும் 100 பேர் பலியாகினர். மேலும் பலர் இடிபாடுகளில் சிக்கிக்கிடக்கின்றனர். அவர்களை மீட்கும் பணி நடந்து வருகிறது. 7 ரிக்டர் அளவில் நில நடுக்கம் பதிவானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. லூஷான் நகரை மையமாகக் கொண்டு பூமிக்கு அடியில் 13 கி.மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் உருவாகியுள்ளது. யான் நகரம் அருகே ஏற்பட்ட நிலநடுக்கம் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உணரப்பட்டது.

சிசூயான் மாகாண தலைநகரான செங்டுவில் வீடுகள் மற்றும் கட்டிடங்கள் கடுமையாகக் குலுங்கின. ஷெங்க நகரில் 13ஆவது மாடிக்கட்டடம் உள்ளது. நில நடுக்கம் காரணமாக இக் கட்டடம் சுமார் 20 வினாடிகள் குலுங்கின. இதனால் பீதி அடைந்த குடியிருப்பு வாசிகள் வீடுகளில் இருந்து வெளியேறி வீதிக்கு ஓடி வந்தனர். இந்த நகரம் யான் நகரில் இருந்து சுமார் 140 கி. மீற்றர் தூரத்தில் உள்ளது. அதே போன்று லூஷான் மற்றும் போயஸிங் நகரிலும் நிலநடுக்கம் இருந்தது. அங்கும் மக்கள் பீதி அடைந்தனர். கடந்த 2008ஆம் ஆண்டும் இதே சிசூயான் மாகாணத்தில் பூகம்பம் ஏற்பட்டது. அதில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

உலகச் செய்திகள்

# போராளிகளை நல்வழிப்படுத்த ஆடம்பர புனர்வாழ்வுமையம்

சவுதி அரேபிய சிறைகளில் இருக்கும் தீவிரவாதிகளான அல் கெய்தா போராளிகளுக்காக, அந்நாட்டின் அரசு ஆடம்பரமான மறுவாழ்வு மையத்தை நிறுவியுள்ளது. இவர்களுடன் கலந்தாய்வு செய்வதன் மூலமும், அதிக உடற்பயிற்சிகள் மூலமும், 'ஸ்பா' சிகிச்சைகள் மூலமும், தீவிர மதவாதிகளான இப்போராளிகளை மிதவாதிகளாக மாற்றமுடியும் என சவுதி அரசு நம்புகின்றது. கலந்தாய்வுகள் மற்றும் மதத்தினைப் பற்றிய பிரசங்கங்களுக்கு நடுவே, இப்போராளிகள், அந்த மையத்தில் உள்ள மிகப்பெரிய நீச்சல்க் குளம், நீராவிக்குளியல், உடற்பயிற்சி அரங்கம், தொலைகாட்சி அரங்கம் ஆகியவற்றில் தங்கள் பொழுதைக் களிக்கலாம்.

இத்திட்டத்தை ஏழு வருடங்களுக்கு முன்னால், சவுதியில் ஏற்பட்ட பிரச்சினையில், கைது செய்யப்பட்ட உள்நாட்டு அல்கெய்தா தீவிரவாதிகளைத் திருத்துவதற்காக, சவுதி இளவரசர் முகமது பின் நயெப் உருவாக்கினார். இதனைப் பார்வையிட்ட, உள்துறை அமைச்சரின் தகவல் அதிகாரி, 3000இற்கும் குறைவானவர்களையே, விடுதலை செய்யப்படுவதற்கு முன்பு இங்கு அனுப்ப வேண்டியிருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே, இது போன்ற மறுவாழ்வு மையம் ஒன்று, துறைமுக நகரமான ஜெட்டாவில் இயங்கி வருகின்றது. ஆயினும், ரியாத்தில்



அமைந்துள்ள இந்த மையமே, தீவிரவாதிகள், மிதவாதிகளாக மாறுவதற்காக ஆடம்பர வசதிகளை உள்ளடக்கியுள்ளது. இன்னும், இதுபோல் மூன்று மையங்களை நாட்டின் மற்றப் பகுதிகளிலும் திறக்க இளவரசர் திட்டமிட்டுள்ளார்.

# இளைஞர்களை தவறாக வழிப்படுத்தும் பொப்பிசைப் பாடற்காட்சிக்குத் தடை




(நியூயோர்க்)

தென்கொரியாவின் பொப் பாடகரான பார்க் ஜி சங், ரசிகர்களால் சாய் என்று அழைக்கப் படுபவர், கடந்த 2012இல் தான் வெளியிட்ட கங்கணம் ஸ்டைல் அல்பத்தால் உலகப் புகழ் அடைந்தார். இரண்டாவது அல்பம் வெளியிடுவதில், முதலில் தலைப்பில் பிரச்சினை ஏற்பட்டது. பின்னர், தற்போது, ஜென்டில்மேன் என்ற புதிய அல்பத்தை வெளியிட்டுள்ளார். கொரிய நடன பாணியும், கொரிய வழக்குச் சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ள இந்தப் புதிய அல்பமும் தனக்கு புகழைப் பெற்றுத் தரும் என்ற எதிர்பார்ப்பில் அவர் இருக்கின்றார்.

ஆனால், இந்த அல்பத்தில் பாடல் ஆரம்பிக்கும்போது, ஒரு தெருவில் உலாவித்திரிந்து கொண்டிருக்கும் சாய், அங்குள்ள போக்குவரத்து அறிவிப்பு கூம்பினை எட்டி உதைப்பது போலவும், அங்கு வரும் பெண்களை வம்பிழுத்து கிண்டல் செய்வது போலவும் பாடுவது முரணானவை என்ற எண்ணத்தைத் தோற்றுவித்திருப்பதால், தென்கொரிய தொலைக்காட்சி இந்தப் பாடலை ஒளிபரப்ப மறுத்துள்ளது. இந்த்செய்கைகள், இளைஞர்களுக்கு ஒரு தவறான எடுத்துக்காட்டாக விளங்கக்கூடும் என்ற கருத்தினையும் தொலைகாட்சி நிறுவனம் வெளியிட்டுள்ளது. தடையை ஏற்றுக்கொண்ட சையின் மேலாளர்கள் இந்தக் காட்சிகளை மாற்ற மறுத்துள்ளனர்.

# இஸ்ரேல் உளவு நிறுவனம் இணையத்தில் வேலைவாய்ப்பு பிரசுரம்



(ஜெருசலேம்)

இஸ்ரேலின் உளவுத்துறை நிறுவனமான மொசாட், தீவிரவாதத்தினை ஒடுக்குதல், இரகசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், துப்பறிதல் தவிர இஸ்ரேலில் இருந்து வெளியேறிய யூத இன மக்களை அந்நாட்டிற்கு திரும்பக் கொண்டுவரும் பணியையும் மேற்கொள்கின்றது. இந்நிறுவனம், நேரடியாகப் பிரதமரின் கீழ் தனது பணியைச் செய்கின்றது.

இந்த நிறுவனம், புதிய பணியாளர்களைத் தேர்வு செய்யும் பொருட்டு, முதன்முதலாக, இணையதளத்தில் வேலைவாய்ப்பு அறிவிப்பினை வெளியிட்டுள்ளது. வாழ்க்கையில் சவால்களை சந்திக்க விரும்புவோர், ஆற்றல்மிகுந்த, அசாதாரணமான, ஆனால் சுவாரஸ்யமான இந்த வேலைக்கு விண்ணப்பம் அனுப்பலாம் என்று அந்நிறுவனம் அழைப்பு விடுத்துள்ளது.

இதுபோன்ற விரோதிகளுக்கு இடையே நண்பர்கள் தேவை என்ற புதிய முழக்கத்துடன், இணையதளத்தில், தங்களது நீண்ட வேலைப் பட்டியலையும் இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. புத்திக்கூர்மையும், திறமையும் இருந்தால், ஒரு அரசாங்கத்தையோ, ஒரு இயக்கத்தையோ வசமாக்கலாம். மக்களுடன் இணைந்து அவர்களை வசப்படுத்தவும், இயக்கவும் உங்களுக்குத் தெரிந்தால், நாங்கள் தேடும் நபர் நீங்களாக இருக்கலாம் என்று அவர்களின் செய்திக்குறிப்பு தெரிவிக்கின்றது. சமூக வலைத்தளங்களில், விளம்பரங்கள் மூலம் வெளிவரும் இந்த உளவுத்துறையின் வேலைவாய்ப்பு பிரசாரத்தை, இதுநாள் வரை, வேறு எந்த உளவுத்துறை நிறுவனமும் செய்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒபாமாவுக்கு 'விஷக்' கடிதம்

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மற்றும் செனட் உறுப்பினர் அனைவருக்கும் விஷம் தடவிய கடிதங்களை அனுப்பி, கைதான நபர் ஆபத்தான பின்னணி கொண்டவர் எனத் தெரிய வந்துள்ளது. இவர் தன்னை, மறைந்த பொப் பாடகர் எல்விஸ் பிரஸ்லி என்று கூறி மோசடிச் செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளார். அதேபோல அமெரிக்க அரசு தன்னை டுரோன்களை ஏவி உளவு பார்ப்பதாகவும் கூறி வந்திருக்கிறார். மேலும பல சர்ச்சைக்குரிய செயல்களில் ஈடுபட்டுவந்தவர் என்று அவரை அறிந்தவர்களும், நீதிமன்ற ஆவணங்களும் தெரிவிக்கின்றன.

விஷம் தடவிய கடிதங்களை அனுப்பிக் கைதான நபரின் பெயர் பால்கெவின் கர்டிஸ். 45 வயதாகும் இவர் நேற்று முன்தினம் ஆக்ஸ்போர்ட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.





இத்தாலியில் புதிய அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்குப்பதிவு 2 முறை தோல்வியில் முடிந்தது. இதனையடுத்து நாடாளுமன்றில் நடைபெற்ற விவாதத்தின் போது, சபாநாயகர் லாரா போல்ட்ரியோனியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட செனட்டர் அலெஸ்ஸாண்ட்ரா முசோலினி.

# புதிய திறன் பணியாளர்களுக்கு கனடாவில் வேலைவாய்ப்பு



கனடாவில் இனி வெளிநாட்டிலிருந்து வருகைபுரியும் மாணவர்களுக்கு பொறியியல், கணிப்பொறியியல், இயல் மருத்துவம் போன்ற துறை சார்ந்த பணிகளுக்கான பயிற்சியும், தேர்ச்சி பெற்றவராக இருந்தால் வேலை வாய்ப்புகளும் வழங்கப்படும் என்று அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

அடுத்த மாதம் முதல் இந்தப் புத்துயிர் ஊட்டப்பட்ட மத்தியக் கூட்டரசின் திறன்- பணியாளர் திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளது.

கனடாவின் குடியுரிமை மற்றும் புலம்பெயர்வுத்துறை, இங்கு பணிபுரிவதற்கு 24 குறிப்பிட்ட பணிகளை மட்டும் பட்டியலிட்டுத் தெரிவித்துள்ளது.

புதிய பணிப்பட்டியலை அறிமுகப்படுத்த விரும்பிய கனடா அரசு கடந்த யூலை முதல் அயலகப் பணியாளரிடமிருந்து விண்ணப்பம் பெறுவதையும் நிறுத்தி விட்டது. இப்புதிய திட்டம் வருகின்ற மே 4ஆம் திகதி முதல் தொடங்கவுள்ளது.

மேலும் அரசு தெரிவித்துள்ள பணிகளுக்கு மட்டும் வெளிநாட்டவரிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்படும்.

# கசிப்பு உற்பத்தியை இல்லாதொழிக்குமாறு முள்ளியவளை மக்கள் கோரிக்கை

(முள்ளியவளை)

அண்மைக்காலமாக பெருகி வரும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியால் பொது மக்கள் பல அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர் குறிப்பாக பாடசாலை மாணவர்கள், வீட்டு இல்லத்தரசிகள் மற்றும் வீதிகளில் பயணிப்போர் என சமூகத்தில் பலதரப்பட்டவர்களும் இக் கசிப்பு பாவனையாளர்களால் பாதிக்கப்படுவதாகவும் மக்கள் வாழ்விடங்களில் ஏனைய குற்றச்செயல்கள் இடம்பெற இக்கசிப்பே காரணமாக அமைவதாலும் இதனை தமது பகுதிகளில் சிலர் தாராளமாக உற்பத்தி செய்து விற்பனை செய்வதாலும் உடனடியாக இதனைத் தடுத்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. முல்லைத்தீவு முள்ளியவளை பொலிஸ் நிலையத்திற்கு உட்பட்ட பதினெட்டு கிராமங்களின் சிவில் பாதுகாப்பு குழுக்களின் நிர்வாகிகளுக்கான கூட்டத்திலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதனைக் கேட்டுக்கொண்ட முள்ளியவளை பொலிஸ் பொறுப்பதிகாரி மல்லவராச்சி மக்களின் ஒத்துழைபபுடன், தான் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். மேலும் இக்கூட்டத்தில் சிவில் பாதுகாப்பு குழுக்களின் செயற்பாடுகள் மற்றும் இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

## மனித உரிமை...

ந்தவையாக இருந்ததாக சுயாதீன பார்வையாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

தேர்தல்களில் முக்கிய கட்சிகள் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுகின்றனர். ஆளும்கட்சி அரச நிறுவனங்களையும், ஏனைய வளங்களையும் அதற்கு பயன்படுத்துகிறது.

பொதுமக்கள் அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களாகப் பார்க்கப்படுபவர்கள் மற்றும் செய்தியாளர்கள் தாக்குதலுக்கும், துன்புறுத்தல்களுக்கும் உள்ளாகின்றனர்.

இதனால், செய்தியாளர்கள் சுயதணிக்கை செய்துகொள்வதுடன், பலர் பலவந்தமாக காணாமற்போகும் நிலைக்கு உள்ளாகின்றனர்.

அரச படைகள் சித்ரவதைகள் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர்.

சட்டத்துக்கு விரோதமான கைதுகளும், தடுத்து வைப்புக்களும், அளவுக்கு அதிகமான நீண்டகால விசாரணைக்கு முன்பான தடுத்து வைப்புக்களும் பெரும் பிரச்சினையாக உள்ளன.

தடுத்து வைக்கப்பட்டிருப்ப வர்களுக்கு நியாயமான விசாரணைகள் மறுக்கப்படுவது இன்னமும் ஒரு பிரச்சினையாக உள்ளது. அத்துடன் நீதித்துறையின் சுதந்திரமும் கேள்விக்குள்ளாகி உள்ளது.

அரசாங்கம் குடிமக்களின் அந்தரங்க உரிமைகளை மீறுகிறது. பேச்சு, ஊடகம், பொது இடங்களில் கூடுதல் மற்றும் நடமாட்டம் ஆகியவற்றில் கட்டுப்பாடு காணப்படுகிறது.

பொதுமக்கள் பொதுவாக எங்கும் சென்றுவரக்கூடிய நிலைமை இருந்தாலும், வடக்கு பகுதியில் சில இராணுவ சோதனைச் சாவடிகள் இன்னமும் தொடர்கின்றன. உயர்பாதுகாப்பு வலயங்கள் பொதுமக்களுக்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

18 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் முன்னர் சுயாதீனமான பொது நிறுவனங்களாக திகழ்ந்தவற்றின் நியமன அதிகாரம் ஜனாதிபதியின் கைகளுக்குள் வந்திருக்கிறது.

இவற்றில் பொலிஸ், நீதி மற்றும் மனித உரிமைகள் ஆணைக் குழுக்கள் அடங்குகின்றன.

பெண்களுக்கு எதிரான வன்செயல்களும், பாரபட்சமும் பிரச்சினையாக இருக்கின்றன.

சிறார் துஷ்பிரயோகம், ஆட்களைக் கடத்துவது ஆகியனவும் தொடர்கின்றன. வலது குறைந்தவர்கள் மற்றும் சிறுபான்மை தமிழர் களுக்கு எதிரான பாரபட்சமும் தொடர்கிறது.

மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்படும் தமிழர்களின் எண்ணிக்கை அவர்களது மொத்த சனத்தொகைக்கு பொருத்தமற்றதாக மிக அதிகமாக காணப்படுகிறது.

ஒருவரது பாலியல் விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டு ஒருவர் மீது பாரபட்சம் காட்டப்படுவதும், எச்.ஐ.வி. தொற்று ஏற்பட்டவர்களுக்கு எதிரான பாரபட்சமும் காணப்படுகிறது.

தொழிலாளர் மற்றும் சிறார் தொழிலாளர் உரிமைகள் மறுக்கப்படுவதும் பிரச்சினை யாக தொடர்கிறது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் மிகச் சிலர் மீதே அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆனால், 2009 ஆம் ஆண்டில் முடிவுக்கு வந்த போரில் இடம்பெற்ற சர்வதேச மனித நேயச் சட்டங்களின் மீறல்கள் மற்றும் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களின் மீறல்கள் தொடர்பில் எவரையும் பொறுப்புக் கூறச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அந்த அறிக்கை கூறியுள்ளது.

## வடமாகாண...

ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றே நாங்கள் விரும்புகின்றோம். வரும் செப்ரெம்பர் மாதத்தில் இந்தத் தேர்தலை நடத்தலாம் என்பதே எனது எதிர்பார்ப்பாகும். முப்பது 30 வருடகாலமாகத் தொடர்ந்த யுத்தம் காரணமாக மக்கள் அனுபவித்த துயரங்கள் பற்றி எடுத்துக்கூறவேண்டிய அவசியமில்லை. இப்போது யுத்தமில்லை. மக்கள் அமைதியாகவும் சமாதானமா கவும் வாழக் கூடிய சூழல் உருவாக்கப்பட்டிருக்கின்றது என்று ஜனாதிபதி மகிந்த கூறியுள்ளார்.

நாட்டில் விவசாய முயற்சிகள் ஊக்குவிக்கப்பட்டிருப்பதாகவும் நெல்லுக்கு விலை அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதேநேரம் மின்சாரக் கட்டணம் உயர்த்தியமை பற்றி எல்லோரும் பேசுகின்றார்கள். சிகரட்டுக்கும் சாராயத்திற்கும் விலை அதிகரிக்கும்போது அவற்றின் பாவனை குறைவதில்லை. ஆகவே தேவை யற்ற செலவுகளைக் கட்டுப்படுத்தி மக்கள் வாழ வேண்டும் என்று இலங்கையின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## வயற்காணிகளில்...

வயற்காணிகளில் சிங்களக் குடும்பங்கள் தொடர்ச்சியாக விவசாயம் செய்துவரு வதாகவும், அந்த மக்கள் மீளக்குடியேற்றப்பட்ட போதிலும் அவர்களின் காணிகள் மீளவும் ஒப்படைக்கப்படவில்லை என்றும் ஆர்ப் பாட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

## தமிழக...

த்தியிருக்க முடியும். அடுத்த வருடம் நடை பெறவுள்ள இந்திய பொதுத் தேர்தலை இலக்கு வைத்தே தமிழக அரசியல் கட்சிகள் இலங்கைக்கு எதிரான இந்தப் பாரிய பிரசாரங்களை ஆரம்பித்துள்ளனர்.

சர்வதேச மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டை இந்தியா எடுத்தமை தொடர்பில் சிங்கள மக்கள் கொண்டுள்ள நிலைப்பாட்டை நிராகரிக்க முடியாது. சிங்கள மக்களின் சிறு தரப்பினரை தவிர பெரும்பான்மையானவர்கள் இந்தியாவுடன் மிக நெருக்கமான தொடர்புகளை எதிர்பார்க்கின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். 2014 ஆம் ஆண்டு நடைபெறும் பொதுத் தேர்தலில் தமிழகத்தில் உள்ள தமது கூட்டணிக் கட்சிகளை தம்முடன் வைத்துகொள்வதற்காகவே இந்தியா இலங்கைக்கு எதிராக, மனித உரிமை பேரவையில் வாக்களித்தது.

சிங்கள - தமிழ் மக்கள் இடையில் ஒருவருக்கு ஒருவர் கௌரவத்தை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமே இலங்கையின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பொஸ்டன்...

த்தியிருந்த தறப்பாளின் விரிப்பை தூக்கிப்பார்த்தபோது காயங்களுடன் உள்ளே ஸுகார் இருந்துள்ளார்.

குண்டுப் பரிமாற்றத்துக்குப் பின்னர்தான் ஸுகாரைப் பொலிஸாரால் பிடிக்க முடிந்துள்ளது.

செச்செனிய பூர்வீகம் கொண்ட பொலிஸாருக்கு மோசமான காயங்கள் ஏற்பட்டுள்ளன. தற்போது அவருக்கு மருத் துவமனையில் சிகிச்சை அளிக் கப்படுகிறது.

பொலிஸார் அவரைப் பிடித்து வாகனத்தில் கொண்டு சென்ற போது அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தனர்.

மாரத்தன் குண்டுவெடிப்பின் மற்றுமொரு சந்தேகநபராகிய ஸுகாரின் அண்ணன் தமெர்லன், பொலிஸாருடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தலைகீழானது...

இந்த விளையாட்டு விழா நேற்று மாலை இடம்பெற்றுள் ளது. இதன் ஆரம்பத்தில் இவ் வாறு தலைகீழாக ஏற்றப்பட்ட தேசியக் கொடி இறக்கப்பட்டு மீண்டும் சீரமைக்கப்பட்டு ஒழுங்காக ஏற்றப்பட்டது.

# டெங்குத் தொற்று; இருவர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் நேற்றும் இருவர் டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகிய நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாண சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து ஒருவரும், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து ஒருவருமாகவே இருவர் இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் இந்த மாதம் நேற்று வரையும் 52 பேரும், இந்த வருடத்தில் இதுவரை 265 பேரும் இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலையின் அதி காரி ஒருவர் தெரிவித்தார். (பா)

# வாயிற் கதவு உடைத்து அம்மன் ஆலயத்தில் திருட்டு



(வடமராட்சி)

தும்பளை இலக்குமணன் தோட்டம் அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளியம்மன் (வடபத்திரகாளி அம்மன்) ஆலயத்தில் நேற்று அதிகாலை 2.00 மணியளவில் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை வேளை கம்பிகள் கொண்டு ஆலயத்தின் தெற்குப்புற வாயில் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் ஆலயத்தில் இருந்த 15 கொத்து விளக்குகள், 3 குத்து விளக்குகள், 2 தீபங்கள், பஞ்சராத்தி தீபம், 2 தாம்பாளம், ஒரு பித்தளைக் குடம் உள்ளிட்ட ஒரு இலட்சம் ரூபா பெறு மதியான பொருட்களை திருடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸில் ஆலய நிர்வாகத்தினரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (116)

## ஆட்பதிவுத் திணைக்களம்...

மாக அணுகும் கருத்திட்டம் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இவ் வேலைத்திட்டத்தின் கீழான இரண்டாவது மாகாணக் காரியாலயம் கிழக்கு மாகாணம் முழுவதையும் உள்ளடக்கி மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்குப் பிரதேச செயலக வளாகத்தில் நிர்மா ணிக்கப்பட்டுள்ளதுடன், மே மாதமளவில் அது மக்களுக்கு சேவையை வழங்கவுள்ளது.

மாகாணக் காரியாலயத்தினூடாக, வடமாகாணத்தின் அனைத்து பிரதேச செயலகங்களினாலும் பெற்றுக்கொள்ளப்படும் அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் மாகாணக் காரியாலயத்தினால் பொறுப் பேற்கப்பட்டு அனுமதியளிக்கப்பட்டு தலைமைச் செயலகத்திற்கு அனுப்பி வைத்தல்.

வட மாகாண பாடசாலை விண்ணப்பதாரிகளுடைய விண்ணப்பங்கள் மாகாண காரியாலயத்தில் பொறுப்பேற்கப்பட்டு அடையாள அட்டைகளை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

பொதுமக்களுக்கு அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான விண்ணப்பங்கள், அறிவுறுத் தல்கள் மற்றும் தகவல்களை வழங்குவதுடன் இச்செயற்பாட்டில் ஏற்படும பிரச்சினைகளுக்கான தீர்வினை விரைவாக பெற்றுக்கொடுத்தல்.

இலத்திரனியல் அடையாள அட்டை வழங்கும் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது மாகாணத்தின் அனைத்து பிரதேச செயலகங்களிலும் அமைக்கப்பட்டுள்ள ஆட்களை பதிவுசெய்யும் திணைக்களத்தின் நிலையங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலும் நிர்வகித்தலும்.

ஆகிய பணிகளைச் செய்யும் எனவும் ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

## மின் கட்டணங்களில்...

ளர்கள் உள்ளனர். இவர்களுக்கு இதுவரை மாதமொன்று க்கு 142 ரூபாவே அறவிடப்பட்டு வந்தது. புதிய திருத்தத்தின் படி 217 ரூபா அறவிடப்படவுள்ளது. இதற்கமைய நாளொன்றுக்கு 2 ரூபா 50 சதமே அதிகரிக்கப்பட்டுள்ளது.

31 முதல் 60 வரையான மின் அலகுகளைப் பயன்படுத்தும் மின் பாவனையாளர்கள் 1.25 மில்லியன் பேர் உள்ளனர். இவர்களுக்கான கட்டணம் நாளொன்றுக்கு 5 ரூபா 80 சதமே அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேபோல 61 முதல் 90 வரையான மின் அலகுகளைப் பயன்படுத்தும் மின்பாவனையாளர்களின் கட்டணம் நாளொன்றுக்கு 14 ரூபா 50 சதத்தாலும், 91 முதல் 120 வரையான மின் அலகுகளைப் பயன்படுத்துபவர்களின் கட்டணம் நாளொன்றுக்கு 32 ரூபாவாலும், 121 முதல் 180 வரையான மின் அலகுகளைப் பயன்படுத்துபவர்களுக்கான கட்டணம் நாளொன்றுக்கு 50 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும் மின்சார சபையின் தலைவர் குறிப்பிட்டார். ஒரு அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு 23 ரூபா 30 சதம் செலவாகின்றபோதும், 15 ரூபா 65 சதத்துக்கே ஒரு அலகு மின்சாரம் பாவனையாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

பாவனையாளர்களுக்கு மின்சாரம் வழங்குவதற்காக அரசாங்கம் 10" ஆயிரத்து 500 பில்லியன் ரூபாவை மானியமாக வழங்குகின்றது.

ஒரு அலகு மின்சாரத்தைத் உற்பத்தி செய்வதற்கான செலவீனம் அதிகரித்ததன் காரணமாகவே மின் அலகுக்கான கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

# தடுத்து வைக்கப்படும் பெண்கள் மீது

# பொலிஸார் பாலியல் வன்கொடுமை

## அமெரிக்கா விசனம்

(கொழும்பு)

தடுத்து வைக்கப்படும் பெண்கள் மீது பொலிஸார் பாலியல் ரீதியான வன்கொடுமைகளைப் புரிவதாக அமெரிக்கா விசனம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் வெளியிட்ட வருடாந்த மனித உரிமை அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சித்திரவதைகளுக்கு எதிராக சட்டங்கள் காணப்பட்ட போதிலும், அவை அமுல்படுத்தப்படுவதில்லை. கைதிகள் மற்றும் பிரஜைகள் துன்புறுத்தப்பட்டமைக்கான பல்வேறு சாட்சியங்கள் காணப்படுகின்றன.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதிகளிடமிருந்து ஒப்புதல் வாக்கு மூலங்களை பெற்றுக்கொள்ள இவ்வாறு சித்திரவதைகள் துன்புறுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

உதாரணமாக கடந்த ஜனவரி மாதம் 26 ஆம் திகதி குருநாகல் நீதிமன்றம் பொல்பித்திகம காவல்துறை உயர் அதிகாரி ஒருவர் சித்திரவதைகளில் ஈடுபட்டதாகத் தெரிவித்து இரண்டாண்டு கால கடூழியச் சிறைத் தண்டனை விதித்ததாகச் சுட்டிக் காட்டியது.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய சந்கேகத்தின் பேரில் ஆவணத்துடனும் ஆவணங்களின்றியும் வடக்கு கிழக்கில் படையினரும், பொலிஸாரும் பொதுமக்களைக் கைது செய்து வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படும் பெண்கள் மீது பாலியல் வன்கொடுமைகள் கட்டவிழ்த்து விடப்படுவதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் மீள இணைக்கப்பட்ட முன்னாள் போராளிகளை, படையினர் தீவிரமாக கண்காணித்து வருவதாகவும் இதனால் புனர்வாழ்வுப் பணிகள் பாதிக்கப்படுவதாகவும் அமெரிக்க மனித உரிமை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# அமெரிக்க குற்றச்சாட்டை நிராகரிக்கிறது பொலிஸ்

காவல் நிலையங்களில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட பெண் கைதிகள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுவதாக அமெரிக்கா தெரிவித்துள்ள குற்றச்சாட்டை பொலிஸ் திணைக்களம் நிராகரித்துள்ளது.

அமெரிக்கா நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள மனித உரிமை அறிக்கையில் பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண் கைதிகள் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுவதாக சுட்டிக்காட்டியிருந்தது.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மனித உரிமை மேம்பாடு தொடர்பில் பொலிஸாருக்கு விசேட பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார். அண்மைக்காலமாக இவ்வாறான எவ்வித குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கைதிகள் மீது சித்திரவதைகள், துன்புறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டால் அது தொடர்பில் மனித உரிமை ஆணையகத்தில் அல்லது நீதிமன்றில் முறைப்பாடு செய்ய முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பெங்களூர் றோயல்ஸிடம் வீழ்ந்தது ராஜஸ்தான்



ராஜஸ்தான் றோயல்ஸிற்கு எதிரான போட்டியில் பெங்களூர் றோயல்ஸ் 7 விக்கெட்டுக்களால் இலகுவாக வெற்றிபெற்றது.

பெங்களூரில் நடந்த இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற ஹோலி தலைமையிலான பெங்களூர் றோயல்ஸ் களத்தடுப்பில் ஈடுபட்டது. இதனையடுத்து ராஜஸ்தான் றோயல்ஸ் துடுப்பெடுத்தாடியது.

அவ்வணியில் வட்சன், ரகானே இணை ஆரம்ப வீரர்களாக களமிறங்கியது எனினும் பெங்களூர் பந்துவீச்சாளர்கள் தமது பந்துவீச்சில் மிரட்டினர். இதனால் வட்சன் (6) ரகானோ (14) என வெளியேற பின்னர் வந்த ராவிட் (35), பின்னி (33) ஹொட்ஜ் (13) அவுட்டாக பின்வரிசை வீரர்கள் ஒன்றை இலக்கத்துடன் ஆட்டமிழக்க, ராஜஸ்தான் றோயல் 19.4 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 117 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் ஆர்.பி.சிங், வினைய்குமார் தலா 3 விக்கெட்டுக்களையும், ராம்போல் 2, உனாகட், முரளிகார்த்திக் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு இலகுவான இலக்கை விரட்டிய பெங்களூர் றோயல் கிறிஸ்கெய்லின் அதிரடியில் 17.5 ஓவரில் 3 விக்கெட்டுக்களை இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றது.

டில்சான் (25), ஆட்டமிழக்காது கெய்ல் (49) திவாரி (25) ஓட்டங்களைப் பெற்றனர். உதிரிகளாக 16 ஓட்டங்கள் விட்டுக் கொடுக்கப்பட்டது. போட்டியின் நாயகனாக வினய்குமார் தெரிவானார்.

# ரயிலுடன் மோதியது பேருந்து; மூவர் பலி, பலர் படுகாயம்

(கொழும்பு)

ரயிலுடன் பஸ் மோதி விபத்துக்குள்ளாதில் பலர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பேருவளை - ரொக்லண்ட் சந்தியிலேயே நேற்று இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் ஆகக்குறைந்தது 30 பேர் நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

மரண வீடொன்றுக்கு கண்டியிலிருந்து வந்த பஸ்ஸொன்றே விபத்துக்குள்ளாகியுள்ளது என்றும் விபத்து இடம்பெற்ற இடத்தில் மூன்று சடலங்கள் கிடப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து காலி யை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ரயிலுடன் மோதியே பஸ் விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்துக்குள்ளான பஸ் காலி - கொழும்பு பிரதான வீதியில் விழுந்தமையினால் அந்த வீதியில் கடுமையான போக்குவரத்து நெரிசல் நேற்று இரவு ஏற்பட்டதாக தகவல்கள் தெரிவித்தன.

# இரகசியங்களைப் பாதுகாக்கவே வெளிநாட்டுப் பயணத்திற்கு தடை

## - கூறுகின்றார் பொன்சேகா



(கொழும்பு)

அரசாங்கம் தனது இரகசியங்கள் வெளியுலகிற்கு தெரியவருவதை தடுக்கும் வகையிலேயே தன்னையும், முன்னாள் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவையும் வெளிநாட்டுக்குச் செல்ல முடியாதவகையில் தடைகளை ஏற்படுத்தியுள்ளதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் மூடி மறைக்க முயல்வதாகவும், தான் வெளிநாட்டுக்குச் செல்லும் பட்சத்தில் அதன் நடவடிக்கைகள் சர்வதேச சமூகத்துக்கு தெரியவரக்கூடும் என அச்சப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மக்களுக்கு உண்மையை தெரிந்து கொள்வதற்கான உரிமையை மட்டுப்படுத்தி மேற்கொள்கொள்ளப்படும் தாக்குதல் தொடர்பில் பேசுவதற்கு எந்நேரமும் தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# துமிந்தசில்வாவை காண ஆவலாக உள்ள ஹிருணிகா



துமிந்த சில்வாவின் உண்மையான உடல் நிலை தொடர்பில் தெரிந்துகொள்ள ஆவலாக உள்ளதாக ஹிருனிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

துமிந்த சில்வா கடந்த சில நாட்களாக கொலன்னாவ மற்றும் கொடிகாவத்யைத பிரதேச சபை உறுப்பினர்கள் பலரை வைத்தியசாலையில் சந்தித்து தமது எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடி வருவதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளதாகவும் ஆனால் துமிந்தவின் வழக்கறிஞர்களே அவரது உடல் நிலை சீராக இல்லையெனவும் அவரால் நீதிமன்றில் ஆஜராக முடியாமல் உள்ளதாகவும் தெரிவித்து வருவதாகவும் ஹிருணிகா சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் அவரது உண்மையான உடல்நிலை குறித்து அறிந்து கொள்ளும் பொருட்டு தனது வழக்கறிஞர் ஊடாக அவரை வைத்தியசாலைக்கு சென்று பார்வையிட அனுமதி கோரியதாகவும் ஆனால் அது மறுக்கப்பட்டதாகவும் ஹிருணிகா குறிப்பிட்டுள்ளார்.

# உண்மையான புகலிடதாரிகள் நாடுகடத்தப்படவில்லை

## விளக்கம் தருகிறது ஆஸி.

(கொழும்பு)

நாடு கடத்தப்பட்ட இலங்கையர்கள் மெய்யான புகலிடக் கோரிக்கையாளர்கள் அல்ல என அவுஸ்ரேலிய குடிவரவு மற்றும் பிரஜாவுரிமை அமைச்சர் பிரன்டன் ஓ கோர்னர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் 39 பேரை அவுஸ்ரேலிய அரசாங்கம் நாடு கடத்தியிருந்தது. இவர்கள் மெய்யான புகலிடக் கோரிக்கையாளர்கள் என்பதற்கு எவ்வித ஆதாரங்களும் கிடைக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு சட்டத்தரணி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சில புகலிடக் கோரிக்கையாளர்கள் சட்டத்தரணி உதவியை கோரவில்லை என பிரன்டன் ஓ கோர்னர் தெரிவித்துள்ளார்.

நாடு கடத்தப்பட்டவர்களில் சிறுவர்களும், பெண்களும் அடங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அவுஸ்ரேலிய அரசாங்கம் சட்டத்திற்கு புறம்பான வகையில் புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்தியுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. புகலிடக்கோரிக்கையாளர்கள் கேட்காவிட்டாலும் அவர்களுக்கு சட்டத்தரணி வசதிகளை வழங்கியிருக்க வேண்டுமென சுட்டிக்காட்டப்படுகின்றது.

# கடந்த வருடத்தில் மட்டும் 15,000 புற்றுநோயாளர்கள்

இலங்கையில் 2012 இல் மட்டும் 15 ஆயிரம் புற்று நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் புற்று நோயாளர்களுக்காக 150 கோடி ரூபா செலவில் மருந்துப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக அவ்அமைச்சு தெரிவித்துள்ளது.

புற்று நோயாளர்களுக்கான மருந்துப் பொருட்கள் கொள்வனவு தொடர்பில் வாரம் ஒன்றிற்கு 50 - 60 அறிக்கைகள் அனுப்பப்படுகின்றன. இவற்றினை சுகாதார அமைச்சர் ஆராய்ந்து ஆலோசனை வழங்குவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்திற்குள் புற்று நோயாளர்களுக்கு அவசியமான மருந்துப் பொருட்களுக்கான நிதியை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஏப்ரல் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.